சிவசங்கரி

CPL 648973

தான் தன் சுகம்

வானதி பதிப்பகம்

தான், தன் சுகம்

யாருமே நினைக்கவில்லை: இப்படி ஒரு அசம்பாவிதம் நடந்துவிடுமென்று யாருமே நினைக்கவில்லை—

முதலில் பாக்கியம்—

முப்பத்திநான்கு வயது பாக்கியம். இருக்கிறதோ இல்லையோ, வீட்டுப் படியேறி வந்துவிட்டவர்களை, கண்களும், உதடுகளும் சிரிப்பால் விரிய 'வாங்க' என்று மென்மையாய் அழைக்கும் பாக்கியம்.

ஒரு கோளாறும் இல்லாமல் வளையவந்துகொண்டு புருஷன், குழந்தைகள் உண்டு, தான் உண்டு என்று அடக்கமாய் அமைதியாய் குடித்தனம் பண்ணிக்கொண் டிருந்தவளுக்குத் திடுமென்று அப்படி அன்று என்ன கேடு வந்தது?

தூங்கி எழுந்தவள் வழக்கம்போல் மங்குமங்கென்று வீட்டைப் பெருக்கி, மெழுகி, சமைத்து, பத்துத் தேய்த்து, துணி துவைத்து— அத்தனை வேலைகளையும் பண்ணியிருக் கிறாள்; பக்கத்துப் போர்ஷன் அன்னம்மா, "ரெண்டு நாளா ஜுரப்பு மூக்கை அடைச்சிக்கிட்டு கிடக்குது. ராவெல்லாம் தலை வேற பாரமா இருந்துச்சுன்னு சொன்னே, இப்போ இத்தினி வேலையை இழுத்துப் போட்டுக்கிட்டுச் செய்யாட்டி என்ன? துணிகளை நாளைக்குச் சேத்து துவைச்சுக்கக்

கூடாதா? இல்லே தனத்தைக் கூப்பிட்டு கொஞ்சம் துணி துவைக்க, பத்துத் தேய்க்கச் சொல்லக் கூடாதா? இப்படிப் பச்சத் தண்ணிலே நாள் பூரா நின்னுக்கிட்டிருந்தா காய்ச் சல்லேதான் கொண்டுவிடப்போவுது, ஆமா..." என்று முற்றத் தில் நின்று அதட்டலாய்ப் பேசினபோதும், தன் வழக்கமான புன்முறுவல் ஒன்றை உதிர்த்தபின், ஊறவைத்த அரிசியைக் களைய உட்கார்ந்திருக்கிறாள்.

"அட! நாம்பாட்டுக்கு பேசிக்கிட்டே இருக்கேன்... நீ காதுல வாங்காம அடம்பண்ணினா என்ன அர்த்தம்? ம்? இப்ப என்ன பண்ணப்போறே? மாவு ருப்பப்போறியா என்ன?"

"ஆமாங்க்கா..."

"இன்னிக்கு ஒரு போதுக்கு மாவு ருப்பாட்டி என்ன? செத்த படுத்து எழுந்தா உடம்புக்குத் தெம்பா இருக்கும் இல்லே?"

"நாளைக்கு அமாவாசைக்கா... பலகாரத்துக்கு வேணும்..."

"பெரிய அமாவாசை... உம் புருஷனுக்கு ஒரு நா பலகாரம் இல்லாட்டி சரிப்படாதாக்கும்! ஏன், தனத்துக்கு இன்னிக்கு லீவுதானே, கூப்பிட்டு ஆட்டச் சொல்றது?"

"ஐயே... அவ சின்னப் புள்ளைக்கா! என்ன தெரியும் அதுக்கு...?"

"அது சரி... பதினைஞ்சு வயசுப் பொண்ணை இப்படி உக்கார வெச்சுப் பழக்கிட்டா, நாளைக்கு ஒரு எடத்துக்குப் போனா அது இல்லே திண்டாடும்...?"

"என்னமோ நம்மகிட்ட இருக்கறவரைக்கும்தானக்கா... படிப்பு முடிஞ்சு ஒருத்தன்கிட்ட கட்டிக்கொடுத்துட்டம்னா, அப்புறம் அவ பாடு, அவ வீட்டுப்பாடு..."

பாக்கியம், அன்றைக்கும் பெண்ணுக்குப் பரிந்து பேசிக் கொண்டே மாவை ஆட்டி எடுத்திருக்கிறாள், மற்ற வேலை களைக் கவனித்திருக்கிறாள்.

மாலை ஐந்துமணி அளவில் மூக்கடைப்பும், தலை பாரமும் தாங்கமுடியாமல்போக, கணவன் முத்து கிருஷ்ணன் ஆபீஸிலிருந்து திரும்பிய பிறகு அவனுக்குக் காபி கொடுத்துவிட்டு, "உடம்பு ரொம்ப ஒச்சலா இருக்கு துங்க, டாக்டர்கிட்ட போய்க் காட்டிட்டு வரட்டுமா?" என்று கேட்டிருக்கிறாள். அவன் சரி என்று சொல்ல, தனத்தை துணைக்கு அழைத்துக்கொண்டு டாக்டரிடம் போயிருக் கிறாள். அவர் எழுதிக்கொடுத்த ஸல்ஃபா மாத்திரைகளை வாங்கிக்கொண்டு திரும்பியவள் வெந்நீர் சுடவைத்து இரண்டு மாத்திரைகளை விழுங்கிவிட்டு, இரவுச் சாப்பாட்டுக்கான முஸ்தீபுகளில் இறங்கியிருக்கிறாள்.

அரைமணி தாண்டியிருக்கும்; முதலில் காதுமடல்களில் அரிப்பு. தொடர்ந்து கைகளில், விரல்களில்... அப்புறம் மயிர்க்கால்களில்...

ஐந்து நிமிடத்துக்குள் உடம்பு முழுவதும் ஜிவுஜிவு என்று ஒரு சிவப்பு. முன்கைகளில் பருப்புப்பருப்பாய்க் கொப்புளங்கள்.

என்ன ஆயிற்று?

சமையல்கட்டிலிருந்து கூடத்துக்கு வந்து பேப்பருடன் உட்கார்ந்திருந்த புருஷனிடம் விவரத்தைச் சொல்லியிருக் கிறாள்.

நிமிர்ந்து பார்த்தவன், "அடடே... பூரான் கடிச்ச மாதிரி ஏன் இப்படி வீங்கிடுச்சு? கரி ட்ரம்லே கையை விட்டியா? விபூதி எடுத்துத் தேய். சரியாயிடும்"— என்று சொல்லிவிட்டு மீண்டும் பேப்பரில் ஆழ்ந்திருக்கிறான்.

விபூதியை அப்பிக்கொண்டும் காதுமடல்களும், விரல்களும் தடித்துப்போய் முகம் முழுவதும் கத்தரிக்காய் கத்தரிக்காயாக வீங்கிப்போகவும் பயம் உண்டாக, திரும்ப சுனவனிடம் வந்து, "மூச்சு சீரா விடமுடியலிங்க... என்னமோ பண்ணுது" என்று சொல்லியிருக்கிறாள். அவ்வளவுதான். அதுதான் அவள் கடைசியாகப் பேசிய பேச்சு.

நினைவிழந்து பாக்கியம் காலடியில் விழவும் முத்து கிருஷ்ணன் அரண்டு, பக்கத்துப் போர்ஷன்காரர்களைக் கூவி அழைத்து, அவர்கள் வந்து, பூரான் கடியா, தேள் கொட்டியதா, பயந்துகொண்டாளா என்று என்னென்னமோ யோசித்து நிதானித்து, டாக்டரை அழைத்துவருவதற்குள் பாக்கியத்தின் மூச்சு நின்று கால்மணி ஆகிவிட்டிருந்தது.

மருந்து அலர்ஜியாம். ஸல்ஃபா மருந்து சிலருக்கு ஒத்துக்கொள்ளாதாம். அரிப்பும் கொப்பளங்களும் வருவது உண்டுதானாம். ஆனால் இப்படி உயிரைப் பறிக்கும் அளவுக்கு எமனாக மாறுவது ரொம்ப அபூர்வமாம். அலர்ஜி அறிகுறிகள் தெரிந்த உடனேயே அழைத்துவந்திருந்தால், மாற்று மருந்துகளை ஊசி மூலம் செலுத்திப் பிழைக்க வைத்திருக்கலாமாம்... டாக்டர் சொன்னார்.

என்ன சொல்லி என்ன!

மகளை மாவு அரைக்கக்கூட அழைக்காமல் பொத்திப் பொத்தி வளர்த்தவள், குடும்பச்சுமை பூராவையும் அவள் தலையில் சுமத்திவிட்டு திடுதிப்பென்று சொல்லாமல் கொள்ளாமல் போனது இப்படித்தான்.

பதினைந்து வயது தனலட்சுமியும், பன்னிரண்டு வயது பாலகிருஷ்ணனும்கூட எப்படியோ தாக்குப்பிடித்து விட்டார்கள். ஆனால், பாக்கியம் இறந்ததில் அதிகம் ஆடிப் போனது முத்துகிருஷ்ணன்தான்.

"நா பாவி... என்னமோ பண்ணுதுங்கனு வந்து சொன்னவகிட்ட, 'ஒண்ணுமில்லே... பூச்சிக்கடி, விபூதி பூசிக்க'னு அலட்சியமா பேசி நானே அவளைக் கொன்னுட்டேன்! உடனடியா டாக்டர்கிட்டே அழைச்சிட்டுப் போகாமே நானே அவளுக்குப் பகையாயிட்டேன்... என் பாக்கியம்... என்ன விட்டுப் போக உனக்கு எப்படிம்மா மனசு வந்தது!"

இதே புலம்பல்.

காலை இல்லை, இரவு இல்லை, நாள் இல்லை, கிழமை இல்லை... இதே புலம்பல்.

ஆபீஸலும் இதே வெற்றுப் பார்வை, கண்களில் ஜலம், பேத்தல்தானாம்.

சும்மா சொல்லக்கூடாது, ஆபீஸில் அவனை ஒருத்தர் 'ஏண்டா?' என்று கேட்கவில்லை. புரிந்துகொண்டார்கள். 'ஐயோ பாவம்' என்று பரிதாபப்பட்டார்கள். 'நினைத்த நினைப்பில்லாமல் மனைவியைப் பறிகொடுத்திருக்கிறான். காலம் ஒன்றுதான் அவன் காயத்துக்கு மருந்து போட முடியும். அதனால் நாமெல்லாம் அவனை அனுசரித்துப் போகவேண்டும்' என்று பொறுமையோடு இருந்தார்கள்.

என்ன இருந்து என்ன?

ஒன்றுக்கும் பலனே இல்லாமல் போய்விட்டதே!

சோறு, தண்ணீர் இல்லாமல் சதா புலம்பிக்கொண்டிருந்ததில் உடம்பு பாதியாக, தெம்பு போய் பலவீனம் அல்லவா ஆளை அமுக்கிவிட்டது!

பற்றாதகுறைக்கு நான்கைந்து நாட்களாய் டயரியா வேறாம். விஷயம் வெளியில் வந்தபோது நிலைமை மோசமாகிவிட்டது.

'வழக்கம்போல சோகத்தால் மனுஷன் பீடிக்கப்பட்டிருக்கிறான். அதுதான் ஓய்ந்த மாதிரி இருக்கிறான்' என்று சக

குடித்தனக்காரர்கள் நினைத்தார்களே ஒழிய, வயிற்றுப் போக்கினால் உடம்பில் இருந்த தண்ணீர் போய்விட்டது, அக்யூட் டிஹைட்ரேஷன் என்று யார் தோண்டித் துருவிப் பார்த்தார்கள்?

ம்ஹூம்... இல்லை... ஒருத்தர்கூடத் துருவவில்லை.

ஆபீஸுக்குப் புறப்பட்டவன், "நாக்கு வறண்டு போவுது, தண்ணி குடும்மா" என்று தனத்தைக் கேட்க, அவள் டம்ள ருடன் வருவதற்குள் இவன் கையும் காலும் இழுக்க விழுந்த பின்பு, மகள் அலறிய அலறலில் மற்றவர்கள் ஓடிவந்தார்கள்.

. டாக்ஸி கொண்டுவந்தார்கள், தூக்கிப் போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துப்போனார்கள்.

"இப்படி டிஹைட்ரேட் ஆகிறவரை என்ன பண்ணிக் கிட்டு இருந்தீங்க? நீங்கள்ளாம் படிச்சவங்கதானே? இது கூடவா தெரியாது?" என்று கத்தின பிறகு டாக்டர் ஸலைன் ட்ரிப் ஏற்றினார். க்ளூகோஸைத் தண்ணீரில் கரைத்து குடிக்கக் கொடுத்தார். மருந்துகளைச் செலுத்தினார்.

என்ன பண்ணி என்ன?

பல்ஸ் யார் பிடிக்கும் அகப்படமாட்டேன் என்று சண்டி பண்ணிக்கொண்டு மெள்ளமெள்ளத் தேய்ந்து ஒய்ந்த பின் க்ளூகோஸாவது, ட்ரிப்பாவது...

பாக்கியம் அலர்ஜியில் போனாள்; முத்துகிருஷ்ணன் பலவீனம், அதோடு உடம்பில் நீர்வறட்சி...

சொன்னால் யாருமே நம்பமாட்டார்கள். 'ஹை— கதையில்தானே இப்படியெல்லாம் நடக்கும்' என்று டபாய்ப் பார்கள். ஆனால் இது நிஜம். எண்ணி ஆறு மாதம் பூர்த்தி ஆவதற்குள் அம்மா, அப்பா இருவரையும் இழந்துவிட்டு 'இனி நமக்கு யார்?' 'நம் எதிர்காலம் என்ன?' 'நம்மை ஆளாக்கும் பொறுப்பை எவர் சுமக்க முன்வருவார்?'—

என்ற ஐயங்களோடு மூலையோடு மூலையாய் பதினைந்து வயது தனம் அழுந்தி பரிதவிப்பது நிஜம்...

* * *

"அன்னம்மாத்தே..."

சின்னக் குரலில் தனம் அழைக்கவும் சட்டென்று கிட்டத்தில் வந்தாள் அன்னம்மா.

"என்ன தனம்?"

"..."

"சொல்லும்மா... என்ன வேணும்?"

"வந்து அத்தே..."

"சொல்லும்மா... தலை நோவுதா? பச்சைத் தண்ணி பல்லுல படாம இருக்கிறியே... ஒரு வாய் காப்பி கூடா குடிக்கிறியாம்மா?"

அந்தக் குரலும், அந்தப் பரிவும், ஆறு மாதத்துக்கு முன் இறந்துவிட்ட தாயை நினைவுறுத்த, தனம் கேவத் தொடங்கினாள்...

"அழாதடீ தனம்... தேத்திக்கம்மா... தம்பி அரண்டு போயிருக்குது பாரு... இனி நீதானேம்மா அவனுக்கு எல்லாம்..."

அன்னம்மா அணைத்துக்கொண்டு தேற்ற, சில நிமிடங்களில் தனம் அடங்கிப்போனாள்.

"அத்தே..."

"என்னம்மா?"

"சிவகாமி அத்தையும், காந்திமதி அத்தையும் எப்ப வருவாங்க? நேத்தே சேதி போயிருக்குமே... ஏன் இன்னும் வந்து சேரலை?"

"வருவாங்கடி... வருவாங்க... பம்பாய் என்ன பக்கத் திலயா இருக்கு, அஞ்சு நிமிஷத்தில் ஓடிவர?"

"காந்திமதி அத்தை கிட்டத்துலதானே இருக்காங்க? ஏன் அவங்ககூட வரலை?"

இதற்கு என்ன பதில் சொல்வது என்று புரியாத மாதிரி அன்னம்மா பார்வையைத் தாழ்த்திக்கொண்டாள்.

முத்துகிருஷ்ணன் பிராணனை விட்டு முழுசாய் நாள் ஒன்று ஆகிவிட்டது. உடன்பிறப்புக்களுக்கு உடனேயே தகவல் அனுப்பியும் இன்னும் ஈ காக்காயைக் காணோம்...

ஏன் வரவில்லை?

தனம் கேட்பது போல, இங்கே இருக்கிறது திருவையாறு, அங்கிருந்து; புறப்பட்டு வர காந்திமதிக்கு ஏன் இத்தனை தாமதம்?

வருவார்களா?

இல்லை, வந்தால் பொறுப்பு பிடித்துக்கொள்ளும் என்று வராமலேயே இருந்துவிடுவார்களா?

அப்படிக்கூடச் செய்வார்களா, என்ன?

* * *

பாக்கியத்துக்கும், முத்துகிருஷ்ணனுக்கும் சொந்தம், பந்தம் என்று நீட்டி முழக்க அதிக மனிதர்கள் இல்லை.

பாக்கியத்தோடு கூடிப் பிறந்தவன் ஒருவன் உண்டாம். ஒன்பதாவது படிக்கும்போது ஃபெயிலாகிவிட்டான் என்று அப்பா அடித்த அடியில் வீட்டைவிட்டு ஓடிப்போனவன் அப்புறம் என்ன ஆனான் என்று தெரியாதாம். மகனைப் பிரிந்த ஏக்கத்தில் தாய் இறக்க, பாக்கியத்துக்குக் கல்யாணம் ஆன கையோடு தகப்பனார் காசிக்குப் போய்த் தங்கினதும் கடிதப் போக்குவரத்துக்கூட நின்றுபோய்விட்டதாம்.

இதற்கு முத்துகிருஷ்ணன் பக்கம் கொஞ்சம் தேவலை.

சின்ன வயதிலேயே தந்தையை இழந்த குடும்பம். ஒரு அக்கா சிவகாமி... பம்பாயில் இருக்கிறாள். ஒரு தங்கை காந்திமதி... இவளுக்கு திருவையாறில் புகுந்த வீடு.

பெற்ற மூன்று குழந்தைகளும் ஓஹோ என்று இல்லா விட்டாலும் வாழ்க்கையில் ஒரு தினுசாய் செட்டில் ஆகி விட்ட திருப்தியுடன் அம்மாக்காரி போய்ச்சேர்ந்துவிட்டாள்.

சிவகாமியின் புருஷன் தணிகாசலத்துக்கு இன்னது தான் வேலை என்று கிடையாது. ஆட்டைத் தூக்கி மாட்டில் போடுவார்... மாட்டைத் தூக்கி ஆட்டில் போடுவார்.

மனிதர் என்ன பண்ணுவாரோ தெரியாது; எப்படியோ பம்பாயில் ஓரளவுக்கு சௌகர்யமாக வாழ அவர் பணம் புரட்டிவிடுவது மட்டும் உண்மை. இங்கே தம்பி, தங்கை வீட்டில் வசதிகள் அத்தனை இல்லை என்று அடிக்கடி இந்தப் பக்கம் வந்தவளில்லை சிவகாமி. இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை பத்துநாட்கள் வந்து தங்குவாள். 'ஐயே... என்ன ஊர் இது' – என்று சதா முகம் காட்டுவாள். ஒருநாளைக்கு நூறுதரம் 'எங்க பம்பாய், எங்க பம்பாய்' என்று பீற்றிக்கொள்ளுவாள்.

இத்தனை வருடங்களில் முத்துகிருஷ்ணன், குடும்பத் தோடு ஒரே ஒருமுறை அக்கா வீட்டில் போய் பதினைந்து நாட்கள் போலத் தங்கியிருக்கிறான்; அதுவும் புஷ்பா பிறந்த பிறகு; அருமை மருமகளைக் காணவென்று.

திருமணமாகி கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கு சிவகாமியின் மணிவயிறு திறக்காமல் இருந்தது. இருக்காத உபவாசம் இல்லை. செய்யாத நோன்புகள் இல்லை. போகாத கோவில்கள் இல்லை. அப்படித் தவமிருந்து பெற்றவள் புஷ்பா... இப்போது வயது பதினொன்று.

காந்திமதி, சோமசுந்தரம் கதை இதற்கு நேர்மாறானது. நிலத்தில் உருப்படியாய் விளைச்சலைக் கவனிக்கிறாரோ இல்லையோ, குடும்ப விருத்தியில் தான் மன்னன் என்பதை நிரூபிக்க ஆசைப்பட்டு, கல்யாணமான பத்தாம் மாதம் பிள்ளைக்குத் தகப்பன் ஆனவர் சோமசுந்தரம். அப்புறம் இரண்டு வருடத்துக்கு ஒன்றாய்... மொத்தம் ஆறு. உன்பாடு என்பாடு என்று காந்திமதி ஆபரேஷன் செய்துகொண்ட பிறகு வீட்டில் புதுவரவு நின்றிருக்கிறது.

* * *

இந்த இரண்டு சகோதரிகளும் வந்து சேர்ந்த பிறகு தானே முத்துகிருஷ்ணன் காரியங்களை மேற்கொண்டு கவனிக்க இயலும்?

இத்தனை வருடங்கள் ஒன்றாய் ஒரே கூரையின் கீழ் வாழ்ந்தோம் என்கிற பந்தத்தின் காரணமாய் ஏதாவது செய்யப் போய் 'அதெப்படி நீங்கள் செய்யலாம்? கூடப் பிறந்தவர்கள் நாங்கள் வரும்வரைக் காத்திருக்காமல் எப்படி அவசரப்படலாம்?' என்று அவர்கள் கேட்கமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

கேட்பார்கள்— ஏன் கேட்கமாட்டார்கள்!

அதற்காக?

இன்னும் எத்தனை நாழிகை காத்திருப்பது?

பிணத்தைப் போட்டுக்கொண்டு இன்னும் எத்தனை நாழி உட்கார்ந்திருப்பது?

ஏற்கனவே ஒரு முழுநாள் ஓடிவிட்டது.

ஐஸ்கட்டிகள் மூலம் பிணத்தை எத்தனை நேரம் பாதுகாக்க முடியும்?

யார் செய்த புண்ணியமோ, நல்லவேளையாக மேற்கொண்டு ரொம்ப நேரம் அன்னம்மாவையும், மற்ற

குடித்தனக்காரர்களையும் தவிப்பில் ஆழ்த்த விரும்பாதது போல முதலில் பதினோரு மணி அளவில் காந்திமதியும் சோமசுந்தரமும் வர, பின்னாலேயே ரயில் லேட் என்று சொல்லிக்கொண்டு சிவகாமியும் தணிகாசலமும் வந்து சேர்ந்தார்கள். நான்குமணிக்கெல்லாம் முத்துகிருஷ்ணனை எடுத்தார்கள்; புதைத்தார்கள்.

மறுநாள் பால் விட்டார்கள். அப்புறம் கூடிக்கொண்டு நால்வரும் குசுகுசுக்கத் தொடங்கினார்கள்.

* * *

"என்ன போறாதகாலமோ, யார் செஞ்ச பாவமோ, இப்ப நம்மளைப் போட்டு விரட்டுது... அடுத்தடுத்து இப்படியா ஆறு மாசத்துக்குள்ள ரெண்டுபேரும் மண்டையைப் போடுவாங்க? வியாதியா, காய்ச்சலா, ஆஸ்பத்திரிலே கிடந்தாங்களா... ம்ஹூம்— ஒண்ணுமில்லே... கையைக் கொட்டிக்கிட்டு, பொறுப்பை உதறிட்டு ரெண்டுபேரும் போயிட்டாங்க... இப்ப நாம மாட்டிகிட்டுத் தவிக்கறோம்."

சிவகாமி பேச, காந்திமதி வாயைத் திறக்காமல் ஆமாமாம் என்று தலையாட்டினாள்.

"தனத்துக்குப் பதினைஞ்சு வயசு ஆயிடிச்சு... திரும்பிப் பார்த்தா ஒருத்தன்கிட்ட கட்டிக்கொடுக்கத் தயாரா நிப்பா... இந்தப் பொறுப்பு பத்தாதுனிட்டு அந்தப் பையன் வேற... இப்பதான் ஹைஸ்கோல் படிப்பு படிக்கறான். அவனைப் படிக்க வெச்சு, ஆளாக்கி... யேயப்பா... நினைக்கவே பகீர்ங்குது..."

காந்திமதி மீண்டும் தலையாட்டினாள்.

"வெலவாசி விக்கற லட்சணத்துலே அவுங்கவுங்க பாட்டைப் பாத்துகிட்டா போதும்னு இருக்கறப்போ, இந்தப் பசங்களை யார் பொறுப்பெடுத்துக்கறது? யார் வெச்சு

காப்பாத்தறது? என்னா காந்தி, நா பேசிகிட்டே இருக்கேன், நீ வாயைத் திறக்காம பூம்பூம் மாடு கணக்கா தலையாட்டிட்டு இருந்தா என்னானு நினைக்கறது? ம்?"

காந்திமதி தன் புருஷனைப் பார்த்தாள். தலையைத் திருப்பி அக்காவைப் பார்த்தாள். அப்புறம் முன்கூட்டியே பேசி ஒத்திகை பார்த்திருந்த பாவனையில் கோர்வையாய்ப் பேசினாள்.

"உனக்குத் தெரியாததை நா புதுசா என்ன சொல்லிடப் போறேங்க்கா? அண்ணன் இப்படி அகாலமா தவறிடு வார்னு நாம யாரும் கனவுலேகூட நினைக்கலைதான். ஆனா, நடந்தது நடந்திடிச்சு... இனி ஆவறதை யோசிக் கணும். நேத்து சேதி கேட்டதுலேந்தே எங்களுக்கு இதே நினைப்புதான். இந்தப் பசங்களை எப்படிக் கரை ஏத்தறதுன்றதை நினைச்சா மலைப்பா இருக்கு! என் நிலைமை உனக்குத் தெரிஞ்ச விஷயம்– நிலத்துலேந்து வர்றதை வெச்சிக்கிட்டு எங்க பாட்டைப் பாத்துக்கறத்துக் குள்ள நாங்க தவியாத் தவிச்சிப்போறோம்! ஆறு பசங்க, மாமியார், மாமனார் வேற. ஆறு ரெண்டும் எட்டு... நாங்க ரெண்டு, பத்து. இந்தப் பத்து ஜீவன்களுக்கு ஒப்பேத் தறத்துக்குள்ளார விழி பிதுங்கிப்போவுது... இனி உபரிப் பொறுப்பையும் ஏத்துக்கற நிலைல நா இல்லே... நல்லா யோசிச்சுட்டுதான் பேசறேன். நீதான் அதுங்களுக்கு ஒரு வழி காட்டணுங்க்கா. நா உன்னத்தான் நம்பி இருக்கேன்..."

காந்திமதி இந்த ரீதியில்தான் பேசுவாள் என்று முன்கூட்டியே கணவனிடம் தான் கூறிவந்தது பலித்துவிட, 'பாத்தீங்களா, நா சொன்னது சரியாப் போச்சில்லே?' என்கிற பார்வையை சிவகாமி தணிகாசலத்தை நோக்கி வீசிவிட்டுத் தங்கையிடம் கேட்டாள்:

"இப்படி மொருக்குனு சொல்லிட்டா ஆச்சா, காந்தி? எனக்கு இருக்கற பொறுப்பு உனக்குந்தானே?"

"இல்லேனு நா சொல்லலியேக்கா... தாங்கற சக்தி எனக்கு இல்லேனுதானே சொல்றேன்..."

"....."

"சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதேக்கா... உனக்கு ஒத்தைப் பொண்ணு, அதுக்கும் இப்ப பதினோரு வயசுதான் ஆகுது... என் பஞ்சப்பாட்டு உனக்கு இல்லே... அதனால, தனத்தையும், பாலுவையும் நீ பொறுப்பெடுத்துக்கறது சரினு எனக்குத் தோணுது..."

"எங்களுக்கும் ஆயிரம் கஷ்டம் இருக்குது, காந்தி. அத மறந்துட்டு நீ பேசக்கூடாது... அத்தான் இப்ப புதுசா பிளாஸ்டிக் ஃபாக்டரி ஒண்ணு சின்னதா துவங்கியிருக்காரு. பம்பாயிலே நாங்க இருக்கறது சின்ன எடம்... நாலையும் யோசிக்கணும் இல்லே..."

"நா நல்லா யோசிச்சிட்டேன்க்கா... என்னால நிச்சயமா முடியாது. உன்னாலயும் முடியாதுன்னா, ஆசிரமம் எதுலயா வது சேர்க்கலாமானுதான் பாக்கணும்..."

குரலைத் தாழ்த்திக்கொண்டு காந்திமதி பேசவும், சிவகாமி திடுக்கிட்டாற்போல நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"சேச்சே... அப்படி ஒதுக்கிட முடியுமா, காந்தி... ஆயிரம் இருந்தாலும் நாம உயிரோடு இருக்கறப்போ ஆசிரமத்துலே விட்டா ஊர் சிரிக்காது?"

"சிரிச்சா சிரிக்கட்டும். நாம என்ன பண்றது, சொல்லு? நம்ம கவலையையும் பாத்துக்கணும், இல்லே?"

"ம்?" சிவகாமி யோசனையுடன் அமர்ந்துவிட்டு மெதுவாய்ப் பேசினாள்.

"பாலுவைப் படிக்க வைக்கணும், வேலையிலே சேர்ற மாதிரி தகுதி, அவனுக்கு வரணும்; தனத்தை ஆளாக்கி ஒரு நல்ல பையன் கையிலே புடிச்சிக் கொடுக்கணும். கல்யாணம், அது இதுனு... அதுவேற செலவு..."

இப்போது சோமசுந்தரம் பேசினான்.

"முத்து ஆபீஸ்லேந்து பி.எஃப். பணம் வராதா? இன்ஷூரன்ஸ் ஏதாவது எடுத்திருக்கானா தெரியுமா?"

'அடடே, இவருக்கு இது ஞாபகம் வந்துவிட்டதே' என்கிற தினுசில் தணிகாசலம் மனைவியைப் பார்க்கவும் சிவகாமி அவசரமாய் தங்கையிடம் பேசினாள்.

"ஆங்? என்ன பெரிய்ய... பி.எஃப் பணம் வந்துடப் போகுது? மிஞ்சிப்போனா பத்தாயிரம் வருமான்றது சந்தேகம்னு அத்தான் சொல்றார். இதப்பாரு காந்தி, ரெண்டு பசங்களை பத்து வருஷம் போல வீட்டோட வெச்சிக் கணும், சோறு போட்டு, உடை எடுத்துக்கொடுத்து படிக்க வைக்கணும். நல்லது கெட்டதைப் பார்க்கணும். கல்யாணம் கட்டிக்கொடுக்கணும். இப்படி ஆயிரம் செலவு இருக்கு. எனக்கு இந்தப் பத்தாயிரம் பெரிசில்லே! பசங்களை யார் வெச்சிக்கறாங்களோ அவங்ககிட்டதான் பணத்தைக் கொடுக்கறது நியாயம்னு அத்தான் நினைக்கறாரு— நீ தங்கமா பசங்களை வெச்சிக்க, பணத்தையும் எடுத்துக்க! நா தடுக்கலை... ஆமா, சொல்லிட்டேன்..."

பம்பாயிலிருந்து வரும் வழியில் தணிகாசலமும், சிவகாமியும் இத்தனையும் யோசித்துக்கொண்டேதான் வந்திருந்தார்கள்.

'நீங்க வசதியா இருக்கீங்க. அதனால பசங்களை வெச்சிக் காப்பாத்த வேண்டியது உங்க பொறுப்பு'— என்று காந்திமதி சொல்லப்போவது. நிச்சயம். அதனால், இப்படி

யொரு நிபந்தனையைப் போட்டுவிட்டால்? பணத்துக்கு ஆசைப்பட்டு பிள்ளைகளை அவள் அழைத்துச்சென்றால் போகட்டும். மறுத்தால் வெறுமனே வரும் சுமை, பணத் தோடு வரும். இது நல்லதுக்குத்தானே!

சிவகாமி தீர்மானமாய்ப் பேசினதும் காந்திமதி தன் புருஷனுடன் வாசலுக்குப் போனாள். தனியாய் நின்று பேசினாள். பத்தாயிரத்துக்கு ஆசைப்பட்டால், பத்து வருடம் பிள்ளைகளைக் காப்பாற்றுவதோடு நிற்காமல் கல்யாணம், கார்த்திகை என்று வேறு முனையவேண்டும்... பாலகிருஷ்ண னுக்குப் படிப்புக்கு என்ன செலவாகுமோ? மாதம் ஒரு குழந்தைக்கு நூறுரூபாய் செலவு என்று வைத்துக் கொண்டால்கூட வருடத்துக்கு இரண்டாயிரத்து நானூறு. இந்தக் கணக்கில் பத்தாயிரம் எந்த மூலைக்கு?

ம்ஹூம், வேண்டாம்!

"நம்ம வீட்டிலே வயசுப்புள்ளைங்க இருக்காங்க. இப்ப தனத்தை அங்க வெச்சிக்கறது நல்லதுக்கு இல்லேன்னு அத்தான் சொல்றார்க்கா... எனக்கும் அது சரினுதான் தோணுது... நீ பணத்தை என்ன செய்வியோ எனக்குத் தெரியாது. ஆனா பிள்ளைங்க இனி உன் பொறுப்பு. பாலுவைப் படிக்க வெச்சு ஆளாக்கறதும், தனத்தை நல்ல எடத்துலே கட்டிக்கொடுக்கறதும் உன் பொறுப்பு... நா வேற என்ன சொல்லப்போறேன்?"

அவ்வளவுதான்.

மேற்கொண்டு யாரும் ஏதும் இதுகுறித்துப் பேசவில்லை.

கருமாதியை பம்பாயில் பண்ணிக்கொள்ளலாம் என்று தணிகாசலம் சொல்ல, அடுத்து வந்த நான்கு நாட்களுக்குள் இருக்கும் பாத்திரம், மரச்சாமான்களை விற்றார்கள். முத்து கிருஷ்ணனின் ஆபீஸுக்குச் சென்று பணத்தை பம்பாய்க்கு

அனுப்ப எழுதிக்கொடுத்தார்கள். மூட்டை முடிச்சுகளைக் கட்டினார்கள். சக குடித்தனக்காரர்களிடம் சொல்லிக் கொண்டார்கள். காந்திமதி தன் புருஷனுடன் திருவையாறைப் பார்க்கப் புறப்பட, மற்றவர்கள் ஒட்டுமொத்தமாய் பம்பாய்க்குக் கிளம்பினார்கள்.

* * *

மதிய நேரம். நல்ல வெயில். தூட்டுக்கு பயந்துகொண்டு சாலையில் நடமாட்டம் குறைந்திருந்தது.

சமையல்கட்டு ஜன்னலிடம் நின்று வேடிக்கை பார்க்கையில், தனத்தால் அந்த பஸ் ஸ்டாப்பை நன்றாகப் பார்க்க முடிந்தது.

இளவயதுப் பெண் ஒருத்தி. அவளுக்குச் சற்றுத் தொலைவில் ஒரு ஆண்.

நிமிடத்துக்கொரு தரம் பெண்ணின் உதடுகள் என்னமோ சொல்கிற பாவனையில் விரிந்து மூடின.

பாடுகிறாளா?

தனக்குத்தானே பேசிக்கொள்கிறாளா?

உற்று நோக்கியபோது இளைஞனின் உதடுகள் அடிக்கொரு தடவை பிரிந்து மூடுவது புரிந்தது.

இவள் ஏதோ கேட்க, அவன் பதில் சொல்கிறானா?

அன்னியர் போலத் தெரிய, கொஞ்சம் தள்ளி நின்று கொண்டுவிட்டு யாரும் வராத சமயமாய்ப் பேசுகிறார்களா?

ஒருவரை ஒருவர் எதிர்நோக்கி நின்று பேசினால் மற்றவர்கள் புரிந்துகொண்டுவிடுவார்கள் என்ற பயத்தில் எங்கோ பார்த்துக்கொண்டு, எங்களுக்குள் சம்பந்தம் எதுவும் இல்லை என்ற நினைப்பை உண்டுபண்ண இந்த நாடகமா?

எதற்காக இந்தத் திருட்டுத்தனம்?

காதலர்களா?

வீட்டில் தெரிந்தால் திட்டுவார்கள் என்ற பயமா?

கால்மணி போல அப்படியே நின்று அவர்களை தனம் பராக்குப் பார்த்தாள். என்ன பேசுகிறார்கள் என்பது காதில் விழாவிட்டாலும் இந்தத் திருட்டுமுழியும், எப்படியோ நின்றுகொண்டு யாரிடமோ பேசுவது போல் பேசுவதும் சிரிப்பை உண்டுபண்ண, ஒருவித சுவாரஸ்யத்துடன் அவள் கவனித்துக்கொண்டிருக்கையிலேயே, அந்தப் பெண் சட்டென்று திரும்பி இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பார்த்தாள். இளைஞனிடம் வந்து அவன் நீட்டிய காகிதத்தை வாங்கிக்கொண்டு விடுவிடுவென்று நடந்துவிட்டாள். இளைஞனும் வேறு திசையில் நகர்ந்தான்.

அடக் கடவுளே! கடைசியில் இவர்கள் பஸ்ஸில் போவதற்காக ஸ்டாண்டுக்கு வரவில்லையா? இப்படிப் பேசிப் பிரிய, இது ஒரு பாவனையா?

ஆமாம், அவன் என்ன கொடுத்தான்? பணமா? பார்த்தால் வெள்ளைச் சீட்டு மாதிரி இருந்ததே! லெட்டரா?

வீட்டுக்குத் தெரியாமல் ஒருவனிடம் பணமோ, இல்லை வேறு எதுவோ வாங்கிக்கொள்வது தப்பில்லையா? இந்தப் பெண்ணுக்கு அது தெரிய வேண்டாமா?

அவனைப் பார்த்தால் ரௌடி மாதிரி இருக்கிறானே; அவன் மீசையும், கிருதாவும்... இந்தப் பெண் ஏன் இப்படிப் புத்திகெட்டு அலைகிறது?

தனம் தன்னைச் சட்டென்று உலுக்கிக்கொண்டாள்.

எவர் எப்படியிருந்தால் எனக்கென்ன? இருக்கிற கவலைகள் போதாதென்று வேண்டாததை நான் ஏன் இழுத்துவிட்டுக்கொள்கிறேன்?

சலிப்போடு அவள் ஜன்னலிடமிருந்து நகர்ந்து தரையில் அமர்ந்தாள்.

மணி என்ன?

மூன்றா?

அத்தை, ராத்திரிக்கு சப்பாத்தியும் கூட்டும் பண்ணச் சொல்லியிருக்கிறாள்.

நான்குமணிக்கு எழுந்து கிழங்கை வேகப்போட்டு மாவு பிசைந்து வைத்தால் போதும்.

கையை மடித்துத் தலைக்குக் கீழே வைத்துக்கொண்டு அங்கேயே அவள் காலை நீட்டிப் படுத்தாள்.

ஒரு வருடத்துக்கு முன் இருந்த தனத்துக்கும், இன்றைய தனத்துக்கும் நடுவில் எத்தனை வித்தியாசம் என்ற வியப்பு ஒருநிமிடம் மனதில் மின்னியது.

ஸ்டவ்கூடப் பற்றவைக்கத் தெரியாமல், அம்மா துவைத்து வைத்த பாவாடை தாவணியை அணிந்து பள்ளிக்குப் போய் வந்து, தமிழ் சினிமாக்களையும், பத்திரிகைகளையும் பார்த்துப் படித்துப் புளகாங்கிதமடைந்த அந்த தனம் எங்கே? இரண்டாம் பேச்சுப் பேச வாயைத் திறக்காமல், பொறுப்புடன், வயதுக்கு மீறிய முதிர்ச்சியுடன் நடந்து கொள்ளும் இந்த தனம் எங்கே? ஆனால் தான் இப்படி அடியோடு மாறிவிடுவோம் என்று தனம் நினைத்தாளோ? ம்ஹூம்; இல்லை. அடுத்த வருடம் நீ இதற்கு நேர்மாறாய் இருப்பாய் என்று யாராவது சொல்லியிருந்தால் 'அதற்கு வேறு ஆளைப்பார்' என்று கேலியாய் சிரித்திருப்பாள், நிச்சயம்.

பம்பாய்க்கு ரயிலில் வந்தபோதே அத்தை சொல்லி விட்டாள்.

"பம்பாய் ரொம்ப மோசமான ஊருடிம்மா... உன்னை பள்ளிக்கூடத்துக்குப் படிக்க அனுப்பிச்சிட்டு வயத்துலே நெருப்பைக் கட்டிக்கிட்டு ஐயோ ஐயோனு தவிக்க என்னால

ஆகாதுடிம்மா... பொம்பளைப்புள்ளைக்குப் படிப்பு எதுக்கு? அப்படிப் படிச்சு நீ என்ன சாதிக்கப்போறே? உன் தம்பியைப் படிக்க வைக்கணும், நியாயம்– ஆம்பிளை சிங்கம். நாளைக்குக் குடும்பத்தைக் காப்பாத்துவான். பம்பாய்லே விலைவாசி தாறுமாறா இருக்கிறதுலே ரெண்டுபேரையும் படிக்க வைக்க எனக்குக் கட்டுப்படியாகாதுதான். ஆனா, பணத்தை விடு, அதுவா முக்கியம்? பொம்பளைப்புள்ளை உன்னைக் காபந்து பண்றது எப்படினுதான் எனக்குக் கவலையா இருக்கு! ஒருத்தனை காலாகாலத்துலே கட்டிக்கிட்டு, பாந்தமா குடும்பம் நடத்தப்போற பொண்ணுக்கு, இதுக்கு மேலே படிப்பு எதுக்கு? நா நாலாவது தாண்டலை... இப்ப நா இந்தப் படிப்பு இல்லாம என்ன குறைஞ்சு போயிட்டேன்? என்ன தனம், நா சொல்றது விளங்குதில்லே?"

'இரட்டைச் செலவு செய்ய எனக்கு இஷ்டமில்லை. பாலு படிக்கட்டும், நீ வீட்டோடு இரு' என்பதைப் பளிச்சென்று சொல்லாமல், 'பொம்பளைப் பிள்ளைக்குப் படிப்பு எதற்கு, உன்னைக் காபந்து பண்ணவேண்டும் என்பதை நினைத்தால் கவலையாக இருக்கிறது' என்று அத்தை நைசாக வாழைப்பழத்தில் ஊசி ஏற்றியது அப்போது தனத்துக்கு விளங்கவில்லைதான்.

சின்ன வயதிலிருந்தே தனம் குணத்தில் அவள் தாயைத் தான் கொண்டிருந்தாள்.

அனாவசியப் பேச்சு கிடையாது; வாய்விட்டுச் சிரிப்பு கிடையாது; பெரியவர்களிடம் ஏன், எதற்கு என்று எதிர்க் கேள்வி கேட்பதெல்லாம் கிடையாது.

இவற்றோடு, வாஸ்தவத்தில் படிப்பில் அத்தனை நாட்டம் இல்லாத பெண் அவள் என்பதால் நீ மேலே படிக்க வேண்டாம் என்றபோது மனசுக்குள் ஏகமாய் எதுவும்

பொங்காமல் அவளால் அத்தையின் முடிவை சாந்தமாக ஏற்க முடிந்தது.

பாவம் அத்தை... பம்பாய் வாழ்க்கையில் அவளுக்கு என்னென்ன செலவுகளோ? அதோடு, புதுசாய் எங்கள் பொறுப்பு வேறு... அவர் சொல்கிற மாதிரி நான் மேலே படித்து என்ன சாதிக்கப்போகிறேன்? அதுதான் பாலுவை நல்ல பள்ளியில் சேர்த்து சிறப்பாகப் படிக்க வைக்கிறேன் என்கிறாரே... வேறு என்ன வேண்டும்?

சிவகாமியின் பேச்சை அப்படியே ஏற்றுக்கொண்டு சமாதானமடைந்துவிடாலும், பம்பாய் வந்துசேர்ந்த சில நாட்களிலேயே தனம் அத்தையைப் பற்றின விஷயங்களைப் புதுசுபுதுசாய், தினத்துக்கு ஒன்றாய் உணர்ந்துகொண்டாள்.

முதலில் மனதில் பளிச்சென்று விழுந்த விஷயம், அத்தை தான் எதிர்பார்த்ததைவிட வசதியாக இருப்பவள் என்பதுதான்.

செம்பூரில் ஃபிளாட்... ஒரு படுக்கையறை, ஒரு கூடம், ஒரு சமையலறை, பாத்ரூம், பால்கனி. சின்னதுதான்; ஆனாலும் சென்னையில் அவர்கள் வாழ்ந்த போர்ஷனை விட வசதியானது. வாழ்க்கைத் தரம் மொத்தத்தில் அந்தஸ்து கூடியே இருந்தது.

அடுத்து, அத்தை ஒரு முழு சோம்பேறி என்பதைச் சீக்கிரமே புரிந்துகொண்டாள். அலங்காரம் பண்ணிக் கொண்டு வெளியில் சுற்றப் பிடிக்கும் அளவுக்கு அத்தைக்கு வீட்டில் சமைக்க, தட்டி, மெழுக, சாமான்களை ஒழுங்காக வைத்துக்கொள்ளப் பிடிக்கவில்லை என்பதை அறிந்த போது அவளுக்கு ஆச்சர்யமாகவே இருந்தது.

சென்னையில் வாழ்ந்த நாட்களில் எதாவது லீவு நாள் விசேஷம் என்றால்தான் முத்துகிருஷ்ணன் மனைவி

குழந்தைகளை வெளியில் அழைத்துப் போய் ஐஸ்க்ரீம், ஸ்வீட் என்று ஏதாவது வாங்கித் தருவான். அடிக்கடி இல்லை. சினிமாவுக்குக்கூட இரண்டு, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட்டிப்போனால் அதிகம்.

பாக்கியம் வீட்டை விட்டுவிட்டு எதிர்வீடு, பக்கத்து வீடுகளுக்குச் சென்று வம்படிக்கும் பழக்கமெல்லாம் அவனுக்குப் பிடிக்காது.

"வீட்டை விட்டு ஊர் சுத்தற பழக்கம் வந்திடுச்சின்னா லேசுலே போகாது" என்பான்.

"கண்டதை வெளியிலே தின்னு உடம்பைக் கெடுத்துக் கறதைவிட, பாதிச் செலவுலே வீட்டிலேயே பண்ணி வயிறு நிறைய சாப்பிடலாம்" என்பான்.

ஒரு நாள் ஹோட்டலில் சாப்பிட வேண்டும் என்றாலும் முகம் காட்டும் அப்பாவின் சொந்த அக்காவான அத்தைக்கு, சதா ஊர் சுற்றவும், மூன்று வேளையும் வெளியில் தின்னவும் எப்படிப் பிடிக்கிறது!

அத்தை தேனொழுகப் பேசி, ஆளைத் தட்டிக்கொடுத்து வேலை வாங்குவதில் தேர்ந்தவள் என்பதையும் தனத்தால் நாளடைவில் புரிந்துகொள்ள முடிந்தது.

அதட்டி ஒரு வார்த்தை சொல்ல மாட்டாள்.

'தனம், தனங்கண்ணு' என்று கூப்பிட்டே ஆளை மயக்கித் தள்ளிவிடுவாள்.

"புஷ்பா உன்னண்டதான் தலை சீவிக்குமாம். சீவி விடும்மா," என்பாள்.

"தோள்ப்பட்டையிலே ஏதோ சுளுக்கிட்ட மாதிரி நோவுது. என் புடவையைத் துவைச்சுப் போட்டுடும்மா, தங்கம்" என்பாள்.

"கிறுகிறுன்னு வருது... வீட்டைக் கூட்டி மெழுகு, தனம்... நா செத்த படுக்கறேன்" என்பாள்.

வீட்டில் சுற்றுவேலையில் ஒத்தாசை செய்வதற்கென்று இருந்த பெண்ணை, இவர்கள் போய் இறங்கின நான்காம் நாள் அத்தை ஏதோ இல்லாத பொல்லாத காரணத்தைக் காட்டி நிறுத்திவிட, கொஞ்சம்கொஞ்சமாய் அத்தனை வேலைகளும் தனத்திடம் ஒட்டிக்கொண்டன.

அம்மா செத்த ஆறு மாதமாய் வீட்டில் அத்தனை வேலைகளிலும் அப்பாவுக்குத் தோள் கொடுத்து உதவியிருந்ததால் அத்தை வீட்டு வேலைகளை ரொம்ப சிரமப் படாமல் தனத்தால் சுற்றுக்கொண்டு செய்ய முடிந்தது.

ஆனால் அரிவாள்மணையில் காய் நறுக்கும்போது தப்பிப்போய் விரல் பட்டு, கோடாய் ரத்தம் பளபளக்கும் சமயத்திலும், வேகவேகமாய்த் தோசைக்கு ஆட்டுக்கல்லில் அரைக்கையில் விரல் இடுக்கில் அகப்பட்டு நசுங்கிய வலியில் கண்ணோரங்களில் நீர் பளபளக்கும் நிமிடத்திலும், அம்மா ஞாபகம் நெஞ்சில் கூத்தாட தனத்தின் தொண்டை இறுகிப்போகும்.

அம்மா...

எப்பேர்ப்பட்ட மனுஷி அவள்!

அந்தச் சிரிப்பும், அந்த சுறுசுறுப்பும் லேசில் யாருக்காவது வருமா?

சமையல்கட்டுக்குள் நுழைய விடமாட்டாளே...

"நா காய் அரிஞ்சுத் தரேம்மா..."

"வேணாம் தனம்... பிஞ்சு விரலை நீ வெட்டிக்கிட்டா உங்கப்பா என்னைத் திட்டுவாரு..."

"நா ஆட்டுக்கல்லை அலம்பட்டுமாம்மா?"

"வேணாம் கண்ணம்மா... நீ போய்ப் பாடத்தைப் படி. நா கழுவிட்டு ஓடிவரேன்..."

எதைத் தொட வந்தாலும் 'வேணாம் தனம், வேணாம் தனம்...'

இப்படி அத்தை வீட்டில் சமையல்காரியாய், வேலைக்காரியாய் இருக்கப்போகிறேன் என்பது தெரிந்துதான் அம்மா அன்று என்னை அத்தனை அருமையாக வைத்துக் கொண்டாளோ?

தூக்கம் வராமல் புரண்டு படுக்கும் நாளில் சிந்தனை இந்த ரீதியில் ஓட முற்பட்டால், அதை உடனடியாகத் தடுத்து நிறுத்த, தனம் தயங்கியதில்லை.

என்ன இது!

எதற்காக நான் என்னை வேலைக்காரி, சமையல்காரி என்று நினைத்து வருத்தப்படுகிறேன்?

அத்தையை நான் அன்னியமாக நினைப்பது தப்பில்லையா?

அம்மா இறந்ததும் எங்கள் வீட்டில் நான் எல்லாக் காரியங்களையும் செய்யவில்லையா?

அப்படித்தானே இங்கும்?

யாருமில்லாமல் தவித்த எங்களை அழைத்துவந்து வயிற்றுக்கு வஞ்சனையில்லாமல் சாப்பாடு போட்டு, உடுக்கத் துணி எடுத்துக் கொடுத்து, தம்பியை நல்ல பள்ளியில் படிக்க வைத்து...

அத்தை எத்தனை செய்கிறார்!

அதற்குப் பதில் உபகாரமாய் நான் இந்தக் காரியங்களைக்கூடச் செய்யாவிட்டால் எப்படி?

பம்பாய்க்கு வந்துவிட்ட இந்த ஆறு மாதங்களில் வேண்டாத கற்பனைகளை வளர்த்துக்கொண்டு அவஸ்தைப்

படாமல், விவேகத்தோடு, இருக்கிற தழ்நிலைக்குத் தகுந்த மாதிரி தனம் தன்னைப் படிப்படியாக மாற்றிக்கொண்டது இப்படித்தான்...

* * *

கூடத்துக் கடிகாரம் நான்கு தரம் அடித்து ஓய, தனம் எழுந்தாள்.

கூடையிலிருந்த ஆறு உருளைக்கிழங்குகளை எடுத்து அலம்பினாள். வாணலியில் தண்ணீர் விட்டு அடுப்பில் ஏற்றினாள். அது கொதித்த பின் கிழங்குகளை அதில் போட்டுவிட்டு, வெங்காயத்தை அரிய உட்கார்ந்தாள்.

திடும்மென்று அப்பா அம்மாவின் நினைவு வந்தது.

பூரி, கூட்டு என்றால் அப்பாவுக்குப் பிரியம் அதிகம், இல்லை?

ஒரு ஞாயிற்றுக்கிழமை...

அம்மா சமையல்கட்டில் பூரி இட்டுக்கொண்டிருக்க அப்பா கிட்டத்தில் அமர்ந்திருந்தார். எதிரில் தனம், பாலு.

அம்மா நினைத்துக்கொண்டு சிரித்தாள்.

"என்ன பாக்கியம், சிரிப்பு?"

"ஒண்ணுமில்லிங்க..."

"அட சொல்லுன்னா..."

"மாடிப் போர்ஷனுக்கு புதுசாக் குடுத்தனம் வந்திருக்காங்க இல்லே, அந்த வீட்டம்மா இன்னிக்கு என்னண்ட வந்து, 'அது என்ன உங்க வீட்டிலே பேர் எல்லாம் ஒத்தாப்பல இருக்குது! உன் பேரு பாக்கியலட்சுமி, உம் மகபேரு தனலட்சுமி... உம் புருஷன் பேரு... இது; உம் மகன் பேரு பாலகிருஷ்ணன். யோசிச்சு வெச்சிங்களா'னு கேட்டு ஒரே கேலிங்க..."

"உம் புருஷன் பேரு 'இது'ன்னாங்களா? என் பேரு இதுவா?"

மனைவி தன் பெயரைச் சொல்லமாட்டாள் என்பது புரியாத மாதிரி முத்துகிருஷ்ணன் சீண்டினான்.

"அட— உங்க பேரை அவங்க இதுன்னு சொல்லலை. சரியாத்தான் சொன்னாங்க..."

"என்னானு சொன்னாங்க?"

"போங்க..."

"என் பேரு போங்கவா?"

"அட, போங்க..."

அப்பா அம்மாவைக் கேலி பண்ணுவது புரிய, மகளும், மகனும் அப்பா பக்கம் சேர்ந்துகொண்டார்கள். அடுத்த ஐந்து நிமிடங்கள் சமையல்கட்டு அமர்க்களப்பட்டது. சிரிப்பு மாறாமலேயே முத்துகிருஷ்ணன் மனைவி பக்கம் திரும்பி, "ஆமா, ப்ளான் பண்ணித்தான் பேர் வெச்சோம். இன்னும் பெரியபெரிய திட்டமெல்லாம்கூடப் போட்டோம். ஆனா, நாந்தான் நடக்கவிடலைனு சொல்றந்துக்கென்ன?" என்றதும், பாக்கியத்தின் முகம் பளிச்சென்று சிவந்து போனது.

"அது என்னப்பா பெரியபெரிய திட்டம்?"

"ஸ்... சும்மா இருங்க..."

"ஏன் சும்மா இருக்கணும்... நா சொல்லுவேன். அது வந்து தனம், பொண் பொறந்தா அம்மா பேர் மாதிரி லட்சுமினு முடியறாப்பலயும், பிள்ளை பொறந்தா என் பேர் மாதிரி கிருஷ்ணன்னு முடியறாப்பலயும் பேர் வெக்கணுன்றது என் ஆசை. தனலட்சுமி, ராஜலட்சுமி, கஜலட்சுமினு இருக்கிற எல்லா லட்சுமி பேர்களையும், பாலகிருஷ்ணன், ராதாகிருஷ்ணன்னு கிருஷ்ணன் பேர்களையும்

வெக்கணும்னு நா பிளான் பண்ணேன். ஆனா உங்கம்மா தான் சம்மதிக்கலை. ரெண்டு போறுங்க, இதுக்கு மேல வாணா..."

மாவுக் கையோடு அன்று அம்மா அப்பா வாயைப் பொத்தினதும், அப்பா குலுங்கிக்குலுங்கிச் சிரித்ததும், லேசாய் விவரம் புரிந்து தான் வெட்கப்பட்டதையும், தம்பி எதுவும் புரியாமல் விழித்ததையும் இப்போது தனம் நினைத்துப்பார்த்தாள்.

நெஞ்சு இனித்தது; அப்புறம் கனத்தது.

கூடவே அப்பா ஆசைப்பட்டபடி ஏழெட்டுக் குழந்தைகள் பிறக்காதது நல்லதுக்குத்தான் என்ற நினைப்பும் எழுந்தது.

நானும் தம்பியும் மட்டும் இருக்கக்கொண்டு அத்தை நல்ல மனதுடன் எங்கள் பொறுப்புகளை ஏற்றுக்கொண் டிருக்கிறாள்.

வரிசையாக, பட்டாளம் மாதிரி நின்றால்?

வேறு வினையே வேண்டாம்.

காந்திமதி அத்தை திட்டம் போட்ட தினுசில் ஏதாவது ஆசிரமத்தில் சேர்ந்திருக்க வேண்டியதுதான்...

உருளைக்கிழங்கு வெந்துவிட்ட வாசனை நாசியில் ஏற, தனம் எழுந்தாள். வடிதட்டில் கிழங்குகளைக் கொட்டிவிட்டு, மசாலா சாமான்களை எடுத்துக்கொண்டு அம்மி முன் அரைக்க உட்கார்ந்தாள்.

அன்று ரொம்ப சீக்கிரமே தனத்துக்கு விழிப்புக் கொடுத்துவிட்டது. தொடர்ந்து படுக்க விரும்பாமல் படுக்கை யைச் சுருட்டி வைத்துவிட்டு எழுந்தாள். ஃபில்டரில் ஜலம் ஊற்றி, பல் தேய்த்து, முகம் அலம்பிக்கொண்டாள். முன்

நெற்றி மயிர்களைக் கோதி, குங்குமத்தால் பொட்டு இட்டுக் கொண்டபோது இன்று தனக்குப் பிறந்தநாள் என்பது நினைப்புக்கு வந்தது.

எத்தனை வயது?

இருபது முடிந்து இருபத்தி ஒன்று பிறந்துவிட்டதா?

அடேயப்பா! காலம்தான் எத்தனை வேகமாக ஓடுகிறது!

சாமி அலமாரியைத் திறந்து குத்துவிளக்கில் கொஞ்ச மாய் எண்ணெய் விட்டு ஏற்றியவள், விழுந்து கும்பிட்டாள். முருகன் படத்துக்குப் பக்கத்தில் பொட்டும் காய்ந்த பூவும் அணிந்து, படத்தில் உறைந்திருந்த அப்பா அம்மாவை ஊன்றிப் பார்த்து இன்னொரு தரம் விழுந்து நமஸ்கரித் தாள்.

ரொம்ப வருடங்களுக்கு முன் தான் பெரியவளான தினம் சட்டென்று மனதுக்குள் எட்டிப்பார்த்தது.

புதுப்புடவை... சக்திக்கு மீறி முத்து நூற்றிருபது ரூபாயில் வாங்கியிருந்தான்.

புடவை கால்களைத் தடுக்கத்தடுக்க நடந்து, விழுந்து கும்பிடும் மகளை ஏறிட்டுப் பார்த்தவனின் பெருமை வெளிப்படையாய் முகத்தில் தெரிந்தது.

"தனம் என்னமா வளர்ந்திட்டா, பாக்கியம்! இது எம்பொண்ணுதானானு எனக்கே சந்தேகமா இருக்கு..."

"போதுங்க... ரொம்பப் பூரிச்சுப்போகாதீங்க... நம்ம கண்ணே விழுந்திடப்போகுது..."

"இவ உன் ஜாடையாவே மாறிட்டு வர்றா, கவனிச்சியா பாக்கியம்? பொறந்தப்ப உருண்டை முகமா என் மாதிரி இருந்தாப்பல தோணிச்சு. ஆனா இப்ப வ ரவர நிக்கறது, பாக்கறது, நடக்கறது எல்லாத்துலேயும் இவ நீயேதான்..."

"அவ்வளவுதானா? என் குணம் உங்க மக கிட்ட இல்லியாங்க?"

"ஏன் இல்ல? உன் நிதானம், பொறுமை எல்லாம் இவகிட்ட அப்படியே படிஞ்சிருக்கு. இது நா சொல்லித் தானா உனக்குத் தெரியணும்?" பேசிக்கொண்டே போன முத்து கொஞ்சம் நிறுத்தினான். இரண்டு நிமிடம் யோசிக்கிற மாதிரி நின்றுவிட்டு, "தனத்தை ரொம்ப சீக்கிரம் கட்டிக் கொடுத்திடணும், பாக்கியம். உனக்குப் பதினெட்டு வயசுலே கல்யாணம் ஆச்சு இல்லே? அதே போல இவளையும் அந்த வயசுலேயே கட்டிக் கொடுத்திடணும். முத்திப்போக விடாம பொண் பிஞ்சா இருக்கறப்பவே, புருஷன் கைலே ஒப்படைச் சிடணும். என்ன நா சொல்றது?"

எத்தனை ஆசைகள்...

எத்தனை கற்பனைகள்...

அல்ப ஆயுசில் ஒருவர் பின் ஒருவராகப் போய்விடப் போகிறோம் என்பதை அறியாத உள்ளங்களில் எத்தனை துடிப்பு...

நினைப்புகளின் பாரம் தாங்காமல் கண்களைக் கீறிக் கொண்டு ஜலம் வர, தனம் கண்களைக் கசக்கிவிட்டு, தன்னைச் சுதாரித்துக்கொண்டாள்.

ஃபில்டரில் இரண்டாம் ஜலத்தை இறக்கி, பாலைக் காய்ச்சும்போது சிவகாமி முனகிக்கொண்டே எழுந்து வந்தாள்.

"ராத்திரி இமையோட இமை சேர்க்கலை... மூட்டுக்கு மூட்டு வலி... அப்பா... என்ன குடைச்சல்..."

காபியைக் கலந்துகொண்டு திரும்பினவள் சாமி அலமாரியில் விளக்கு ஏறிவதைப் பார்த்து புருவத்தைத் தூக்கினாள்.

"என்ன இன்னிக்குக் காலையிலேயே விசேஷம்? குளிச்சிட்டியா என்ன?"

"இல்ல அத்தே!"

"அப்புறம் என்ன?"

"சும்மாதான்..."

"நெத்தமும் குளிச்சுட்டுத்தானே விளக்கு ஏத்துவே... இன்னிக்கு புதுப் பழக்கமா இல்லே இருக்குது?"

விடாமல் சிவகாமி தொணதொணக்க, தனம் சின்னக் குரலில், "இன்னிக்கு எனக்கு பிறந்தநாள்ன்றது ஞாபகத் துக்கு வந்தது, அத்தே.... அதான்..." என்றாள்.

சிவகாமி சில விநாடிகள் அப்படியே நின்றாள். அப்புறம் காபியைக் குடித்துவிட்டு, வாசல் அறைக்குப் போனாள்.

அன்று மாலை சுமார் ஆறு மணி இருக்கும்.

தனம் பால்கனிச் சுவரில் சாய்ந்து தெருவை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள்.

கல்லூரியிலிருந்து திரும்பி புத்தகங்களை வைத்துவிட்டு அக்காவை நெருங்கிய பாலு கையில் ஒரு பொட்டலம்.

"அத்தை எங்கக்கா?"

"கௌரிம்மா வீட்டுலே கல்யாணம் நிச்சயம் ஆகி இருக்கு இல்லே; அவங்க கடைகண்ணிக்குப் போக ஒத்தாசை பண்ணப் போயிருக்காங்க..."

"புஷ்பா?"

"அவளுந்தான்."

"அது சரி— இப்படி ரா இல்லே, பகல் இல்லேனு சுத்த வேண்டியது, அப்புறம் மூட்டு வலி, முதுகு வலினு புலம்ப வேண்டியது... ச்சே... இந்த அத்தைக்கு காலிலே கடவுள்

சக்கரத்தை இணைச்சு படைச்சிட்டான்னே நா நினைக் கிறேங்க்கா! என்ன சுத்து சுத்தறாங்க? வீட்டுப் பொறுப்பை கவனிச்சுக்கிட நீ இருக்கே... அப்புறம் அவங்களுக்கு என்ன? சுத்த வேண்டியதுதானே!"

தனம் மென்மையாய் சிரித்தாள்.

"இன்னிக்கு உனக்கு அத்தை மேல ஏன் இவ்வளவு கோவம்? அவங்க உன்னை என்ன பண்ணாங்க? ம்?"

"அவங்க பேச்சு இருக்கட்டுங்க்கா... இந்தா இதப்பிடி..."

பாலு நீட்டிய பொட்டலத்தை தனம் வாங்கினாள். பிரித்தாள்.

நான்கு பாம்பே அல்வா துண்டங்கள். ஒரு இலைக் கிழிசலில் இரண்டு முழம் பூ.

தனத்தின் கண்கள் வியப்பில் விரிந்தன.

"ஹாப்பி பர்த்டேக்கா..."

குரல் கும்ம தம்பி வாழ்த்தியது இதயத்தை வருடிக கொடுக்க, தனத்தின் கண்கள் பனித்துப்போயின.

"இ... இதெல்லாம் என்னடா தம்பி?"

"உனக்கு இன்னிக்குப் பிறந்தநாள்னு என்கிட்டேகூட நீ சொல்லாம இருந்துட்டே பார்த்தியாக்கா?"

"கடா மாடு மாதிரி வயசாச்சு. இதப் போயி நாலு பேர்கிட்டச் சொல்லிப்பாங்களா? ஆமா, உனக்கு எப்படித் தெரியும்டா?"

"காலைலே நீ அத்தைகிட்ட சொல்லிட்டிருந்தப்ப எதேச்சையா கேட்டேன்... நம்ம அக்காக்கு நாம ஏதாச்சும் வாங்கிக் கொடுக்கணும்னு தோணிச்சி... நா என்ன பணக் காரனா? ஏழைக்குத் தகுந்த எள்ளுருண்டை... இன்னும் ரெண்டு வருஷம் பொறுத்துக்க... பி.காம். முடிச்சு ஒரு

வேலைல உட்கார்ந்தப்புறம் உன் பிறந்தநாளை புதுப் புடவை, பார்ட்டியோட நா ஜமாய்ச்சிடறேங்க்கா..."

தனத்துக்கு சிலிர்த்துப்போனது.

என்ன அன்பு இது!

எத்தனை அன்பிருந்தால் இப்படி ஒரு பேச்சு வெளிப் படும்...

"அத்தைகிட்ட நீ சொன்னப்ப பதிலுக்கு பாயசம் வெச்சு சமைனு அவங்க சொன்னாங்களா பாத்தியாக்கா? இவங்க பொண்ணுக்குப் பிறந்தநாள்னா மட்டும் எட்டு ஊருக்கு அமர்க்களப்படுது... வரவர எனக்கு ஒண்ணும் பிடிக்கலைக்கா... நாம்பன்னா இவங்க எல்லாருக்கும் மட்டம்தான்..."

தனம் தம்பியை நெருங்கி, தோளில் கை வைத்தாள்.

"அப்படிப் பேசாதடா, தம்பி... அது தப்பு! அப்பா, அம்மா ரெண்டு பேரும் நம்பளைத் தவிக்கவிட்டுப் போயிட் டப்போ, அழைச்சிட்டு வந்து இருக்க இடமும், தின்ன சோறும் போடற வங்களைப்பத்தி இப்படி நன்னி மறந்து பேசினா, நாம நல்லா இருக்கமாட்டோம்ப்பா... நீ இன்னிக்கு பி.காம். படிக்கறேன்னா, அது அத்தை போடற பிச்சை... நினைப்புலே வெச்சிக்க! நாளைக்கு நல்லதா ஒரு வேலை கிடைச்சி நீ அமோகமா இருக்கப்போறதுக்கு இந்தப் படிப்பு தான் அஸ்திவாரம்! வீணா இல்லாததை நினைச்சு வருத்தப் படாதே, பாலு... நா சந்தோஷமாத்தான் இருக்கேன். நீ நல்லா படிச்சு முன்னுக்கு வா... எனக்கு அது போதும்..."

"ஏதாவது சொல்ல வந்தா எதையாவது சமாதானம் சொல்லி என் வாயை அடைக்கிறதுதான் உனக்கு வழக்க மாச்சே..."

முணுமுணுத்துக்கொண்டே பாலு உள்ளே போனான்.

சமையல்கட்டுக்குள் நுழைந்த தனம் பூவில் துளி கிள்ளி தன் தலையில் வைத்துக்கொண்டாள். மொத்த அல்வாத் துண்டுகளையும் பூவையும், புஷ்பா– அத்தைக்காக அலமாரியில் வைத்தாள்.

தம்பி வாங்கி வந்து தந்தான் என்பதற்காக அத்தனையும் வைத்துக்கொள்ள, தின்ன ஆசைதான்– முடியுமா?

அத்தை 'ஏதுடீ?' என்பாள்.

'ஓஹோ, அக்காவுக்குனு வாங்கிவர்ற அளவுக்கு அவன் அத்தனை கத்துக்கிட்டானா?' என்பாள்.

'என் பணம்தானே?' என்பாள்.

எதற்கு வீண் வம்பு?

பொதுவாக வைத்துவிட்டால் எந்தத் தொல்லையும் இல்லை அல்லவா?

* * *

பாலு பி.காம். படிக்கிறான் என்பதில் தனத்துக்கு ஏக பெருமை. என்னமோ தானே காலேஜில் படிக்கிற மாதிரியும், வகுப்பில் முதலில் வருகிற மாதிரியும், என்னிடம் வேலைக்கு வா; என்னிடம் வேலைக்கு வா என்று கம்பெனி முதலாளிகள் க்யூவில் நிற்கிற மாதிரியும், நினைப்புகள் எழுந்துவிட்டால் நெஞ்சுக்குள் குபுகுபுவென்று பெருமை பொங்கும்.

சிவகாமியிடம் இந்த விஷயத்தை நிச்சயம் பாராட்டத் தான் வேண்டும்.

பொட்டைப் பிள்ளைக்குப் படிப்பு எதற்கு என்று தனத்தை வீட்டோடு உட்காரவைத்துவிட்டவள், பாலுவை முகம் சிணுக்காமல் பி.காமில் சேர்த்தது நிஜம்.

படிப்பில் பாலு சுட்டிதான், வகுப்பில் முதல்தான். சீட் சுலபமாகக் கிடைத்து, ஸ்காலர்ஷிப்பில்தான் படிக்கிறான் என்றாலும், பி.காம். என்ன நொள்ளிக்காய் படிப்பா? கல்லூரிக்கு டீக்காய் உடுத்துக்கொள்ள, அது, இது என்று பாக்கி எத்தனை செலவுகள் இல்லை? இதையெல்லாம் சிவகாமி முணுமுணுக்காமல் செய்கிறாளே! இது எத்தனை பெரிய விஷயம்!

சமயம் கிடைக்கும்போது வகுப்பில் பேராசிரியர் தன்னைப் புகழ்வதையும், இதே புத்தியுடன் பி.காமில் சிறப்பாகத் தேறிவிட்டால் நல்லதாய் வேலையில் அமர்த்த, தானே முயற்சிப்பதாக அவர் சொன்னதையும் அக்காவிடம் பாலு சொல்லுவான்.

"ப்ரொஃபஸருக்கு சில பாங்க் ஆபீஸர்களை நல்லாத் தெரியுமாங்க்கா... இவரோட ஓல்ட் ஸ்டூடண்ட்ஸ் இன்னிக்கு பெரியபெரிய பதவியிலே இருக்காங்களாம். 'நீ எதுக்கும் கவலைப்படாதே, பாலு... கவனமா படிச்சு பாஸ் பண்ணு. உன் வேலைக்கு நான் கேரன்டி'னு சொன்னாருக்கா! பாங்க் வேலை மட்டும் கிடைச்சிடுச்சின்னா நாம்ப ஹாய்யா இருக்கலாம். அப்புறம் எதை நினைச்சும் கவலைப்பட வேண்டியதில்லை, யாருக்கும் அடிமையா இருக்க வேண்டிய தில்லை..."

"பாங்க் வேலைன்னா, என்னடா தம்பி சம்பளம் வரும்?"

"எழுநூறு ரூபாய்லே ட்ரெயினிங் ஆரம்பிப்பாங்க... நாம சுருசுருனு வேலையைப் படிச்சிக்கிட்டோம்னா, சீக்கிரமா கன்ஃபர்ம் பண்ணிடுவாங்க... அப்புறம் ஆயிரத்துக்கு மேலே கூட கிடைக்குங்க்கா..."

எழுநூறா!

ஆயிரமா!

ஏ–அப்பா....

எவ்வளவு பணம் அது!

எத்தனை இரவுகள் தூக்கம் வராமல் தனம் இதை எண்ணி சந்தோஷித்திருக்கிறாள்.

இன்னும் ஒன்றரை வருடம்... அப்புறம் தம்பி வேலைக்குப் போய் கை நிறைய சம்பாதிக்கத் தொடங்கி விடுவான்...

எழுநூறு ரூபாய்...

அம்மாடி!

இருபது வயதில் அத்தனை சம்பாத்தியமா?

ஆனாலும் தம்பிக்கு மூளை அதிகம்தான்!

ஆமாம், 'வேலை கிடைத்துவிட்டால் நாம் யாருக்கும் அடிமையாய் இருக்கத் தேவையில்லை' என்று தம்பி அடிக்கடி சொல்கிறானே, அதற்கு என்ன அர்த்தம்?

வேலை கிடைத்தவுடன் அத்தையை விட்டு விலகி, தனிக்குடித்தனம் போய்விடவேண்டும் என்றா?

ச்சீ– இது தவறில்லையா? இத்தனை வருடங்களாய் நம்மைக் காப்பாற்றி, சோறு போட்டு, படிக்க வைத்து ஆளாக்கினவர்களின் உறவை, நமக்கு வாழ்வு வந்த பிறகு கத்தரித்துக்கொண்டு ஓடுவது பாவமில்லையா?

ம்ஹூம்... கூடாது. இந்த எண்ணம் தவறானது.

இளரத்தம், அதுதான் தம்பி ஒன்றும் புரியாமல் பேசுகிறான்.

'டேய் தம்பி, உன் நினைப்பை மாற்றிக்கொள். அத்தையும், மாமாவும் நம்மைப் பெற்றவர்களுக்குச் சமம். அதனால் அவர்களை விட்டு ஓடும் எண்ணத்தை அடியோடு

மறந்துவிடு' என்று பக்குவமாய் எடுத்துச்சொன்னால் புரிந்துகொள்ள மாட்டானா?

ஏன் புரிந்துகொள்ளாமல்?

தம்பி, என் மாதிரி அசடா... படிக்காத மூடமா? அவன் புத்திசாலி– கோடி காட்டினால் கப்பென்று பிடித்துக் கொள்வானே...

* * *

"அக்கா..."

கால் கிலோ தக்காளியை வாங்கி பையில் போட்டுக் கொண்டிருந்த தனம் திரும்பினாள்.

பாலு...

மணி ஐந்துகூட ஆகவில்லை. அதற்குள் காலேஜிலிருந்து வந்துவிட்டானா?

இங்கே காய்கறி மார்க்கெட் பக்கம் இவனுக்கு என்ன வேலை?

"ஏண்டா, இத்தனை சுருக்கா? ஆமா, வீட்டுக்குப் போகாம இங்கே எங்கே வந்தே?"

"காய்கறி வாங்கிட்டியாக்கா?"

"ஏண்டா?"

"உன்கிட்ட கொஞ்சம் பேசணும்..."

என்ன பேசப்போகிறான் இவன்?

தம்பியை நன்றாகப் பார்த்தபோது அவன் எதற்காகவோ மனசு கலங்கிப்போயிருப்பது புரிந்தது.

"என்ன பாலு?"

கொஞ்சம் நடந்து, அதிக சந்தடி இல்லாத மரத்தடியில் பாலு நின்றுகொண்டான்.

"அந்த பி.ஏ. வரனை ஞாபகம் இருக்கா?"

ஏன் இல்லாமல்?

போன வாரம் பெண்பார்க்க வந்தவர்களை அதற்குள் மறந்துவிட முடியுமா?

இதுவரையில் மூன்று இடங்களிலிருந்து இந்த ஏழெட்டு மாதங்களில் தனத்தைப் பெண்கேட்டு வந்துவிட்டார்கள்.

இது நான்காவது வரன்.

'பெண் கண்ணுக்கு லட்சணமாக இருக்கிறாள். சமர்த்து, அடக்கம்' என்று இங்கே, அங்கே கேள்விப்பட்டு தானாகவே அத்தனை சம்பந்தங்களும் வந்தது உண்மை.

முதன்முதலில் வந்த பிள்ளைக்கு பம்பாயிலே உத்தியோகம். மாப்பிள்ளையின் தகப்பனார் ஒரு துணிக் கடையில் கணக்கு எழுதுகிறார். பையன் பள்ளிப் படிப்பு முடித்துவிட்டு பஸ் கண்டக்டராகப் பணிபுரிகிறான். பையனுக்கு ஒரே ஒரு தம்பி. படிக்கிறான். பிக்கல் பிடுங்கல் கிடையாது.

குத்தம் சொல்லும்படியான வரன் இல்லை. ஆனாலும் சிவகாமிக்கு ஏனோ இந்த இடத்தைக் கட்டோடு பிடிக்காமல் போய்விட்டது.

"எங்களுக்குப் பொண்ணைப் பிடிச்சிட்டது. பையன் பார்த்து சரினிட்டான்னா முடிச்சிடலாம்..." என்ற பிள்ளை யின் அம்மாவிடம், "அதுக்கென்னங்க, நல்ல நாளா பார்த்துச் சொல்லியனுப்பறோம்! அப்புறமா அவரைக் கூட்டிட்டு வாங்க" என்று பதில் சொல்லி அவர்களை அனுப்பின பிறகு இங்கு 'தை தை' என்று குதித்தாள்.

"இவங்களுக்கெல்லாம் இருக்கற ஆசையைப் பாரு... ராசாத்தி மாதிரி பொண் இருந்தா கொத்திகிட்டுப் போக தவியாத் தவிக்கிறதுலே ஆச்சர்யம் என்ன! பிள்ளைக்குப் படிப்பு இல்ல, பெரிய உத்தியோகமும் இல்ல. அதை

நினைச்சுப் பார்த்துக்காம, மளமளனு பொண் கேட்டுக்கிட்டு வந்துடறாங்களே; இவங்களுக்குத்தான் என்ன தைரியம்! கொடுக்கமாட்டேனோ எங்க தனத்தை இவங்க பிள்ளைக்கு? இதவிட நல்ல வரன் எங்க பொண்ணுக்கு வராதுன்னு நினைச்சாங்களா?"

சிவகாமியின் பேச்சைக்கேட்டு அன்று 'ஆஹா, அத்தைக்கு என்மேல் எத்தனை அக்கறை!' என்று சந்தோஷித்தாலும், நாளாக ஆக இந்த அக்கறை மேல் தனத்துக்கு லேசாக சந்தேகம் ஏற்படவே செய்தது.

அடுத்து வந்த வரனை 'பிள்ளை நல்லா இல்லே, சோளக்கொல்லை பொம்மை மாதிரி இருக்கான்' என்று தட்டிவிட்டாள்.

சின்னத்தை காந்திமதி, தன் புகுந்த வீட்டு உறவுப் பிள்ளை ஒருத்தனுக்காக எழுதினபோது, 'அத்தனை சீர் செனத்தி செய்ய என்னால் ஆகாது' என்று தயாராய் பதில் சொன்னாள்.

நான்காவது வரனும் கை நழுவிப்போனபோது, லேசாகத் தலைதூக்கின சந்தேகம் தனத்துக்கு உறுதிப்பட்டுப் போனது.

அத்தை வேண்டுமென்றே, வரும் மாப்பிள்ளை வீட்டார்களிடம் சாக்குப்போக்குச் சொல்லி கழிக்கிறாளா?

ஏன்?

கல்யாணத்துக்குப் பணம் செலவாகுமென்றா?

இல்லை, வேறு ஏதாவது காரணமா?

துருவித்துருவி யோசித்தால் காரணம் புரிபடாமலா போகும்? ஆனால் தனம் யோசிக்கவில்லை.

இப்போது காரணம் தெரிந்து நான் என்ன செய்யப் போகிறேன்?

இந்த ரீதியில் சிந்தனைகளை வளர்த்துக்கொள்வதால் என்ன ஆதாயம்? வீணாக அத்தை மேல் கசப்புணர்ச்சி உண்டாவதைத் தவிர வேறு என்ன லாபம்?

ம்ஹூம்— வேண்டாம். எதுவானாலும் தெரிய வேண்டாம்...

போன வாரம் பெண்பார்க்க வந்தவர்களையும் ஆரம்பத்திலேயே சிவகாமி தடுத்து நிறுத்தவே பார்த்தாள்... முடியவில்லை.

கோவிலில் பிள்ளையின் அம்மா தனத்தைப் பார்த்தாளாம். பெண்ணை மனசுக்குப் பிடித்துப்போக, யார் வீட்டுப் பெண் என்று விசாரித்தாளாம். பந்தா எதையும் எதிர் பார்க்காமல் புருஷனோடு பெண்பார்க்க வந்துவிட்டாள்.

பிள்ளைக்கு பி.ஏ. படிப்பு. கவர்மெண்ட் உத்தியோகம். கிட்டத்தட்ட அறுநூறு ரூபாய் சம்பளம். அலசினவரைக்கும் யாருக்கும் குறை எதுவும் தெரியவில்லை.

'இரண்டு நாளில் பிள்ளையோடு திரும்ப வருகிறோம்' என்று சொல்லிப் போனவர்கள் வாரம் ஒன்றாகியும் எட்டிப் பார்க்கவில்லை. சேதியும் இல்லை.

"இப்படித்தான் கிட்டிமுட்டி வருவாங்க, அப்புறம் இதைவிட நெறைய சீர் செனத்தியோட வேற பொண்ணு வந்திருப்பா; முடிச்சிருப்பாங்க!" சிவகாமி மட்டும் இரண்டு தரம் தனம் காது கேட்கப் பொறுமினாள். அதோடு விஷயத்தை எல்லோரும் மறந்துவிட்டனர்.

இப்போது அந்த வரனைப் பற்றித்தான் பாலு பேசுகிறான்.

"என்னக்கா, நா கேட்டது காதுலே விழுந்துதா, இல்லியா?" பாலு பி.ஏ. வரன் என்றதும் நினைவு எங்கோ ஓட்டமாய் ஓடிவிட்டதை தனம் கஷ்டப்பட்டு இழுத்து நிறுத்தினாள்.

"விழுந்துதுடா. சொல்லு."

"ரெண்டு நாள்லே பிள்ளையோட வந்து பார்க்கறேன்ன வங்க ஏன் வரவேயில்லே தெரியுமாக்கா?"

'எனக்கு எப்படிடா தெரியும்' என்கிற தினுசில் தனம் தம்பியைப் பார்த்தாள்.

"இந்த அத்தை என்னா பண்ணியிருக்காங்க தெரியுமா? மறுநாள் அவுங்க வீட்டுக்கு நேரே போயி 'தனத்துக் கெதிர்லே சொல்ல வேணாம்னு பேசாம இருந்திட்டேன். அப்பா அம்மா செத்ததுலேந்து அந்தப் பொண்ணுக்கு திடும்திடும்னு காக்காய் வலிப்பு வருது. டாக்டர்கிட்ட காண்பிச்சோம். சிலருக்கு அதிர்ச்சி தாங்காம இப்படி வர்ற துண்டு, கல்யாணமாகி, பிள்ளை பெத்தா சரியாகலாம்னு சொல்லிட்டாரு! இத மறைச்சுக் கல்யாணம் பண்ண நா விரும்பலை. அதான் நேரவே சொல்ல வந்திட்டேன். உண்மை தெரிஞ்சு தனத்தை நீங்க கட்டிக்கிட்டாத்தான் எங்களுக்குப் பெருமை'— அப்படி இப்படினு கதை விட்டிருக்காங்கக்கா..."

நிஜமாகவா?

அத்தையா?

காக்காய் வலிப்பு என்று சொன்னாளா?

ஏன்?

"நீ இப்படி அதிர்ந்து நிக்கற மாதிரிதான் சேதி கேள்விப் பட்டதும் நானும் தவிச்சேன். எனக்கு வர்ற கோவத்துக்கு..."

தெரு என்பதையும் மறந்து பாலு உரக்கக் குரலெழுப்ப, தனம் 'ஷ்...ஷ்...' என்று தம்பியை அதட்டினாள்.

"உனக்கு யாருடா தம்பி சொன்னது?"

"அந்தப் பிள்ளையோட கலின் என் க்ளாஸ்மேட். அவன்தான் சொன்னான். என்ன நெஞ்சழுத்தம் இருந்தா

இப்படி அபாண்டமா அத்தை பொய் சொல்லுவாங்க? இவங்க மகளா இருந்...''

''ஸ்...மெள்ளப் பேசுடா...ஏன் இப்படிக் கத்தறே? எனக்கு என்னமோ அத்தை இப்படிப் பேசியிருக்கமாட்டாங்கனே தோணுது... பூரா விவரமும் புரியாம நாம அவசரப்பட்டுப் பேசறது தப்பு, பாலு...''

''ஆமா, அத்தை செய்யற எந்தக் காரியத்தை நீ தப்புனு இன்னிவரை ஒத்துக்கிட்டிருக்கே? தேனாட்டம் பேசிப் பேசி உன்கிட்ட வேலை வாங்கறாங்க... அதுகூடப் புரியாம நீ மாடு கணக்கா அவங்களுக்காக உழைக்கறே! உன்னை ஒருத்தனுக்குக் கட்டிக் கொடுத்திட்டா அப்புறம் வீட்டுக்கு வேற வேலைக்காரி பார்க்கணும், அவளுக்கு நூறு ரூபாயாவது அழணும்... நீ வீட்டோட இருந்தா ஒரு பிரச்சினை இல்ல பாரு... அதான் வர்ற வரனையெல்லாம் நொண்டிச் சாக்கு சொல்லித் தட்டிவிடறா மகராசி... புஷ்பாவைக் கட்டிக் கொடுத்து அனுப்பிச்சிட்டு, நீ கிழவியானப்புறந்தான் உன்னைக் கவனிக்கப் போறாங்களா?''

''டே... பாலு...'' கையை நீட்டி தம்பியின் கரத்தைப் பற்றி தனம் அழுத்தி கிசுகிசுப்பாய்க் கெஞ்சினாள்.

''ஏண்டா இப்படி நடு ரோட்டில கத்தறே? உனக்கு என்னாச்சு? அந்த வரன் போனா போகட்டுமேடா... இப்ப அவர் என்னைக் கட்டிக்கிடாததால குடியா முழுகிப் போச்சு? என்னத்துக்காக இப்படி சின்ன விஷயத்துக்காக லோல்படறே நீ? ம்...?''

''உனக்கு இது சின்ன விஷயமா இருக்கலாம். ஆனா, எனக்கு அப்படி இல்லக்கா... இவ வீட்டுக்கு வேலைக்காரி மாதிரி உழைக்கறதைப் பார்த்துக்கிட்டு என்னால சும்மா இருக்க முடியலை... கையாலாகாதவனா அத்தனையும்

கண்டும் காணாம இருக்கறேனேனு எத்தனை கோவம் வருது, தெரியுமா?''

கண்கள் கலங்க உதடுகள் துடிக்க படபடப்பாகப் பேசும் தம்பியை தனம் பரிவுடன் பார்த்துச் சிரித்தாள்.

''ஒண்ணுமில்லாத விஷயத்துக்காக மனசைக் குழப்பிக்காதடா, தம்பி... நா அத்தை வீட்டுலே சந்தோஷமாத்தான் இருக்கேன்... எனக்கு சத்தியமா ஒரு குறை இல்லடா! நீ நல்லாப் படிச்சு பட்டப்படிப்பை முடிச்சு, ஒரு வேலைல உட்கார்ந்திட்டியானா, அப்புறம் என்னை யாரும் கட்டிப் பிடிக்க முடியாது! அனாவசிய விவகாரத்திலே தலையிட்டு கலங்கிப்போகாம படிப்பிலே புத்தியைச் செலுத்துடா, தம்பி...''

இரண்டு நிமிடங்கள்போல மௌனமாய் நின்றுவிட்டு, ''நாழியாச்சு, அத்தை தேடுவாங்க. வா வீட்டுக்குப் போகலாம்'' என்று தனம் கிளம்ப, பாலு அவளைத் தொடர்ந்தான்.

* * *

இது நடந்து பத்து நாட்கள் ஆகியிருக்கும். லீவு நாள் என்பதால் நான்கு மணிக்கே நல்ல டிபனாய் வடை பண்ணி விட உத்தேசித்திருந்தபடி மூன்று மணி அளவில் ஊற வைத்த உளுந்தைக் களைய உட்கார்ந்தபோது, பாலு சமையல் கட்டுக்குள் நுழைந்தான்.

''என்னடா? தண்ணி வேணுமா?''

வேண்டாம் என்று தலையாட்டிவிட்டு பாலு அக்காவின் அருகில் உட்கார்ந்தான்.

அத்தை, மாமா, புஷ்பா எல்லோரும் முன்னறையில் தூங்கிக்கொண்டிருக்கையில் தம்பி இப்படி சமையல்கட்டில்

வந்து உட்காருவது ஆச்சர்யத்தைத் தர, தனம் அவனை விழித்துப் பார்த்தாள்.

"என்ன பாலு?"

"ஒண்ணுமில்லேக்கா... என்னமோ உன்னண்ட கொஞ்சம் பேசணும்னு தோணிச்சு..."

என்ன பேச விரும்புகிறான்?

அன்று, அத்தையை நடுரோட்டில் நின்று திட்டின தினுசில் ஏதாவது தாறுமாறாய்ப் பேசப்போகிறானா?

ஐயோ— இரண்டாங்கெட்டானாக இவன் விவரம் புரியாமல் ஏதாவது பேசி, அது அத்தை காதில் விழுந்து விட்டால் ரசாபாசமாகிவிடுமே!

'இத்தனை வருஷம் உங்க பொறுப்பை சுமந்ததுக்கு எனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்' என்பாளோ?

'அக்காவும் தம்பியுமா சமயம் கிடைக்கிறப்பல்லாம் இப்படித்தான் என் மண்டையை உருட்டுறீங்களா?' என்பாளோ?

'போதும்டா சாமி... நன்னி இல்லாத பசங்களோட நா மன்னாடினது போதும். புறப்படுங்க; இந்த வீட்டை விட்டு இப்பவே புறப்படுங்க' என்பாளோ?

வீட்டை விட்டால் எங்கு போய் நிற்பது?

தம்பிக்கு பி.காம். முடிய இன்னும் ஒன்றரை வருடம் இருக்கிறது. அதை எப்படி முடிப்பது? அதுவரை எங்கு சாப்பிடுவது, தங்குவது?

வேண்டாத கற்பனையில் மனசு அதிர்ந்துபோக, தனம் அவசரமாய்த் தம்பியை ஏறிட்டுப் பார்த்தாள். ஒருவிதக் கெஞ்சலுடன், "எதையாவது நினைச்சிக்கிட்டு அவஸ்தைப்

படாதடா, தம்பி... அத்தை காதுலே விழுந்தா மனசு வருத்தப் படுவாங்க... சொல்ற பேச்சைக் கேளுடா..." என்றாள்.

பாலு சிரித்தான்.

"எப்பவும் உனக்கு பயந்தாக்கா... இப்படிப் பயந்து பயந்து எல்லாரும் உன் தலைல சுலபமா மிளகா அரைக்க நீயே வழி பண்ணிடறே..." என்றவன், கொஞ்சம் நிறுத்தினான். அப்புறம் தானே தொடர்ந்தான்.

"நேத்து காலேஜ்லே ஒரு விவாதம் நடந்திச்சுக்கா... 'ப்ளட் ஈஸ் திக்கர் தேன் வாட்டர்'ன்றது தலைப்பு. தண்ணீரை விட ரத்தம் அடர்த்தியானதுன்றதுதான் சரியான ட்ரான்ஸ்லேஷன்னாலும், ரத்தம் தனக்குள்ள அடக்கியிருக்கிற பாசம், பந்தம்ன்ற குணங்களால தண்ணியைவிட வலுவுள்ளது, கனமானதுன்றதுதான் இதோட உள்ளர்த்தம். நேத்து வெவ்வேறு காலேஜை சேர்ந்த பசங்க பந்தபாசத்தை அழகா, தெளிவா விளக்கற மாதிரி உதாரணம் எடுத்துக்காட்டி ப்ளட் ஈஸ் திக்கர் தேன் வாட்டர்னு பேசினப்போ, எனக்கு உன் ஞாபகம் வந்து உடம்பு சிலிர்த்துப்போச்சுக்கா! நா நல்லா இருக்கணும்னு நீ எத்தனை பாடுபடறே? பொறுமையா என்னெல்லாம் சகிச்சுக்கறேன்றதை நினைச்சுப்பாத்தப்ப உடம்பு ஆடிப்போச்சுக்கா... இது எல்லாத்துக்கும் நா என்னிக்குத் திரும்ப ஈடுகட்டப்போறேன்? நேத்தே இதை உன்னண்டை சொல்லணும்னு நினைச்சேன். ஆனா, தனியா உன்னோட பேச சந்தர்ப்பமே கிடைக்கலைக்கா..."

தனத்தின் கை உளுந்து களைவதை நிறுத்தியது.

தம்பி மனப்பூர்வமாக எதையோ உணர்ந்துவிட்டு அதை வெளிப்படுத்தத் தெரியாமல் தவிப்பதைப் புரிந்து கொண்டாள். "என்னடா தம்பி, என்னென்னவோ பெரிய வார்த்தை எல்லாம் சொல்றே... நீ நல்லா இருக்கணும். எனக்கு அதாண்டா வேணும்..." என்று சின்னக் குரலில்

பேசினவளால் மேற்கொண்டு ஒரு வார்த்தைகூடப் பேச முடியாதபடி குரல் தழுதழுத்து கண்களில் நீர்ப்பூக்கள் பூத்தன.

* * *

புஷ்பாவுக்கு விபத்தா?

என்ன சொல்கிறான் இந்தப் பையன்?

பேந்தப்பேந்த தனம் ஒன்றும் புரியாமல் நிற்பதைக் கண்டு, சொன்னதையே இன்னொரு முறை அந்தப் பையன் கூறினான்.

"உங்க புஷ்பாவுக்கு ஆக்ஸிடெண்ட், ஆன்ட்டி....அவங்க அம்மா எங்கே? கூப்பிடுங்க... உடனடியா கிளம்புங்க... அடி நல்லா பட்டிருக்கறதால ஹாஸ்பிடலுக்குத் தூக்கிக்கிட்டு போயிட்டாங்க. கிளம்புங்க ஆன்ட்டி..."

புஷ்பாவுக்கு விபத்தா?

"போயிட்டு வரேம்மா" என்று ஒரு மணி நேரம் முனபு இரட்டைப் பின்னல் குலுங்க பள்ளிக்குப் புறப்பட்டுச் சென்ற புஷ்பாவுக்கா?

"இன்னிக்கு டான்ஸ் க்ளாஸ் இருக்கும்மா. ஸ்கூல் லேந்து அப்படியே மாட்டுங்கா போய் க்ளாஸை முடிச்சிட்டு வந்திடறேன்... நீ நேரமாச்சுன்னு தவிக்காதே" என்று சுத்திக் கொண்டே படிகளில் இறங்கின புஷ்பாவுக்கா?

"என்ன ஆன்ட்டி, இப்படியே நின்னுட்டிருந்தா என்ன அர்த்தம்? நா சொல்றது புரியலையா?"

இவளுடைய இடிச்சபுளித்தனம் அந்தப் பையனுக்கு ஆத்திரத்தைக் கிளப்பியிருக்கவேண்டும். கால் மாறி கால் அவஸ்தைப்பட்டவன் பொறுமையின்றிப் பேசினான்.

தனம் சுதாரித்துக்கொண்டாள்.

"இரு தம்பி, அவசரமாப் பேசாதே... எனக்கு ஒண்ணும் புரியலை! நிதானமா சொல்லுப்பா... எங்க புஷ்பாவுக்கா அடிபட்டிருச்சு? எப்படி? எங்கே? அவ ஸ்கூலுக்குப் போய் ஒருமணி நேரம் ஆகுதேப்பா... இன்னேரம் அவ க்ளாஸ்லேன்னா இருப்பா? வீடு தவறி வந்திட்டியா? விலாசம் இதுதானா, சரியாத் தெரியுமா?"

"விலாசம் தப்பா வரலீங்க... நிச்சயம் உங்க புஷ்பாதான். நா அவ க்ளாஸ்மேட். பஸ்ஸிலே வந்து இறங்கினவ, ரோட்டை சரியா கவனிக்காம க்ராஸ் பண்ணி ஸ்கூல் வாசலுக்கு வர நினைச்சப்ப இந்த ஆக்ஸிடெண்ட் நடந்திருச்சு... பஸ் பார்வையை மறைச்சிட்டதாலே அவசரமா வந்த வேனை அவ கவனிக்காம இருந்திருக்கணும். ஒரே இடி... மட்கார்ட்லே கால் மாட்டிக்கிட, இருவதடி போல வேன் புஷ்பாவை இழுத்துக்கிட்டுப் போயிடிச்சு! டீச்சர்ஸ் சில பேரு சேர்ந்து அவளை ஹாஸ்பிடலுக்குத் தூக்கிட்டுப் போன நாழிலே நா இங்கே ஓடி வரேன். கிளம்புங்க."

இது ஆள் மாறாட்ட கேஸ் இல்லை, இந்த வீட்டு புஷ்பாவுக்குத்தான் விபத்து என்பது தெளிவானதும் தனம் நடுங்கிப்போனாள்.

"ஐயோ... எங்க புஷ்பாவுக்கு என்ன ஆச்சு! எனக்கு கையும் ஓடலை, காலும் ஓடலியே... அவங்க அம்மா சிவாஜி படம் காலைக் காட்சிலே காட்டறாங்கனு இப்பத்தானே கொட்டகைக்குப் போனாங்க... மாமா ஃபாக்டரிக்குப் போயிட்டார். தம்பியும் இல்லே. நா என்ன பண்ணுவேன்!"

கண்களில் ஜலம் ததும்பியது. வாய் அரற்றியது.

"ஒரு உதவி பண்றியா, தம்பி? மாமா ஆபீஸ் போன் நம்பர் தரேன். கொஞ்சம் போன் பண்ணி விவரத்தைச் சொல்றியா? நா கொட்டகைக்குப் போய் அத்தையைத் தேடறேன்..."

போன் நம்பருடன் அந்தப் பையன் கிளம்புமுன், எந்த ஆஸ்பத்திரி என்ற விவரத்தைத் தெரிந்துகொண்ட தனம் பரக்கப்பரக்க புடவையை மாற்றிக்கொண்டாள். எதிர் வீட்டம்மாளிடம் விஷயத்தைச் சொல்லி அவளைத் துணைக்கு அழைத்துக்கொண்டாள். வீட்டைப் பூட்டினாள். கொட்டகையைப் பார்க்க ஓடினாள்.

சிவகாமியைக் கண்டுபிடித்து, சமாச்சாரத்தைப் பக்குவ மாகச் சொல்லி, 'ஐயோ என் ராசாத்தி' என்று அலறின வளுக்கு ஆறுதல் கூறி, அந்தப் பையன் குறிப்பிட்ட ஆஸ்பத்திரிக்கு சிவகாமியுடன் தனம் வந்துசேர்ந்தபோது தணிகாசலம் ஏற்கனவே அங்கு காத்திருந்தார்.

புருஷனைக் கண்டதும் சிவகாமியின் துக்கம் பீறிட்டு எழுந்தது.

"நம்ம பாப்பாவுக்கு என்னாச்சுங்க? எங்கண்ணு... என் ராசாத்தி...ஈ..."

ஆஸ்பத்திரி என்பதை மறந்து சிவகாமி பெரிசாய் கத்தினாள்.

"ஆபரேஷன் தியேட்டருக்கு எடுத்திட்டுப்போயிருக் காங்க, சிவகாமி..."

"ஆபரேஷனா? என் மகளுக்கு என்னாச்சுங்க? அவ உசிருக்கு ஆபத்து ஒண்ணுமில்லையே... நா என்ன பண்ணுவேன்! திருப்பதி வெங்கடாஜலபதி... எங்களை ஏமாத்தி சோதனை பண்றே...?"

எசகுபிசகாய் வேனின் மட்கார்டில் கால் மாட்டி சில அடிகள் இழுபட்டுக்கொண்டுபோனதில் வலது காலில் பலத்த எலும்புமுறிவு ஏற்பட்டிருக்கிறதாம். சதை பல பகுதிகளில் கிழிந்துபோயிருக்கிறதாம். உயிருக்கு ஒன்றும் ஆபத்து இல்லாவிட்டாலும், சில வாரங்களாவது

ஆஸ்பத்திரியில் தங்கி வைத்தியம் பார்க்க வேண்டிய அவசியம் உள்ளதாம்.

ஆபரேஷன் தியேட்டரிலிருந்து ஸ்ட்ரெச்சரில் புஷ்பாவை வார்டுக்குக் கொண்டுவந்து போட்டபோது மயக்கம் தெளிந்திராத நிலையிலேயே அவள் இருக்கவும், அந்த வெளிறிய முகத்தையும், மேலே செருகின கண்களை யும், கோணின வாயையும் பார்த்து சிவகாமி அரண்டு போனாள்.

"இவ மூஞ்சியும், கண்ணும் ஏங்க இப்படி இருக்குது? அம்மா... அம்மான்னு மூச்சுக்கு முன்னூறு தரம் கூப்பிடற பொண்ணு, ஏங்க இப்படிக் கிடக்கறா? எனக்கு பயமா இருக்குதுங்க... என் மகளுக்கு ஒண்ணும் ஆகாது இல்லே? சொல்லுங்க..."

மூக்கைச் சிந்திக்கொண்டு அழுதவளை ஒரு டாக்டர் அதட்டினார்.

"உசிருக்கு ஒண்ணும் கவலையில்லேனு சொல்றதைக் காதுலே வாங்காம ஏம்மா புலம்பறீங்க? மயக்கம் இன்னும் தெளியலை. அதான் இப்படியிருக்காங்க... அரைமணிலே தெளிஞ்சிடும்... அப்புறம் பேசுவாங்க. மூணு இடத்துலே எலும்பு முறிஞ்சிருக்கு. அதை ஸெட் பண்ணிட்டோம். சதை கிழிஞ்சிபோன இடத்துலே தையல் போட்டிருக்கோம். இதனால கண் முழிச்சதும் வலி, வலினு முனகுவாங்க... அதைக் கேட்டுட்டு என்னமோ ஏதோனு கலங்காதீங்க... முத சிலநாள் அவஸ்தை இருக்கத்தான் செய்யும். பொறுத்துக்கற தைத் தவிர வேற வழி இல்லே."

டாக்டருக்கு என்ன?

'அவஸ்தை இருக்கும். பொறுத்துக்கொள்ள வேண்டும்' என்று சுலபமாகச் சொல்லிவிட்டார். ஆனால் பட்டவர் களுக்கு அல்லவா தெரியும்?

தொடையிலிருந்து கணுக்கால் வரையிலும் மாவுக்கட்டு, சதை கிழிந்த இடங்களில் தையல் போட்டிருப்பதை இரண்டு நாட்களுக்கு ஒருமுறை துடைத்து சுத்தம் பண்ணி புது பாண்டேஜ் போடவேண்டும் என்பதால் ஆங்காங்கு சின்ன ஜன்னல்கள்போல் இடம் விட்டுவிட்டு மாவு பூசியிருந்தார்கள். இப்படியும் அப்படியும் லேசில் திரும்பிவிடக்கூட முடியாது! ஓரிரண்டு புண்கள் ஆறாமல் சீழ் கோர்த்துக் கொண்டதில் ஏறின வலி போதாதென்று, அடிபட்ட அதிர்ச்சியில் நல்ல ஜுரம் வேறு.

பாவம் புஷ்பா— ரொம்பவும்தான் கஷ்டப்பட்டுப் போனாள்.

ஒரு நாளா, இரண்டு நாளா? முழுசாய் ஆறு வாரங்கள்.

பகலெல்லாம் சிவகாமி மகளிடம் இருப்பாள். மாலை ஆனதும் இரவு சாப்பாட்டுடன் தனம் வந்துவிடுவாள். நைட் ட்யூட்டி தனத்தின் வேலைதான். விடியவிடிய கண்விழித்து புஷ்பாவின் அவஸ்தையில் தானும் பங்கேற்றுவிட்டு, விடிந்து காபியுடன் அத்தை வந்ததும் இவள் வீட்டுக்குப் போவாள்.

சிவகாமியின் வேதனை அளவிட முடியாமல் இருந்தது.

ஒரே மகள், அருமை மகள், நாட்டியமும், பள்ளிப் படிப்புமாய் வளையவந்தவளை இப்படி மாபாரமாய் விதி தாக்கிவிட்டதே என்று எண்ணிக் குமைந்துபோனாள்.

"எந்தப் பேய் திருஷ்டியோ என் மக மேல விழுந்திடிச்சே... எந்தப் பாவி கண் போட்டாளோ... மானாட்டம் துள்ளியிருந்த மகளைப் படுக்கையிலே முடக்கிடுச்சே! அவ நாசமாப் போக... அந்தக் கொள்ளிக் கண்ணுலே கொள்ளிக் கட்டையை வைக்க..." என்றாள்.

"ஊரார் பிள்ளைகளைச் சீராட்டி வளர்த்தா தன் பிள்ளை தானே வளரும்பாங்களே... அனாதையா நின்ன

பசங்களை தோள் மேலே போட்டுச் சீராட்டினேனே... அதுக்குப் பரிகாரமா இது! ஐயோ கடவுளே! உனக்கு மனசுலே கருணை இல்லையா?" என்றாள்.

"என் உலகம், உசிரு எல்லாம் பாப்பாதானே! தவமான தவமிருந்து பெத்த பெண்ணாச்சே... அவளை ஆஸ்பத்திரிலே போட்டுட்டு நா நல்லா இருக்கேனே! பாவி... நா போகக் கூடாதா? அந்த நாசகார வேல்ல நா மாட்டிக்கிட்டு இருக்கக் கூடாதா!" என்றாள்.

இன்னும் என்னென்னவோ சொல்லி ராவும் பகலும் அழுதாள்.

மூன்று வாரங்களைத் தாண்டின பிறகும் காலை அசைத்தாலேயே புஷ்பா 'வாள்'ளென்று அலறியதால் சந்தேகம் கொண்ட டாக்டர்கள், திரும்ப எக்ஸ்ரே எடுக்க ஏற்பாடு செய்தார்கள்.

எலும்புகளை இழுத்துப் பொருத்துவது ஒரு இடத்தில் தப்பாக இருப்பது புரிய, கட்டைப் பிரித்து எலும்புகளை இழுத்துப் பொருத்தி மீண்டும் மாவுக்கட்டுப் போட்டார்கள்.

மேற்கொண்டு இரண்டு வாரங்கள் போல ஆகியும் காலின் வீக்கமோ, வலியோ குறையாமல் இருக்க மறுபடியும் எக்ஸ்ரே...

இந்த முறை படத்தில் கோளாறு எதுவும் தெரியாவிட்டாலும், எலும்புகள் எதிர்பார்த்த அளவு பொருந்தாமல் நிற்கவே, மீண்டும் மாவுக்கட்டைப் போட்டு வீட்டுக்கு அனுப்பி, ஆறு வாரங்கள் கழித்து வரச்சொல்லிக் கட்டைப் பிரித்தார்கள்.

புஷ்பா கத்தக்கத்த காலைப் புரட்டினார்கள். மடிக்கச் சொன்னார்கள். இழுத்துப் பார்த்தார்கள். 'கிட்டத்தட்ட மூணு மாசமா படுக்கையிலே படுத்திட்டே இருந்திட்டதால இப்படி விறைப்பாதான் இருக்கும். எங்கே எழுந்து நில்லு...

நடக்கப் பாரு... நடக்க நடக்க நாலைஞ்சு நாள்லே இந்த வலி குறைஞ்சிடும். கமான் ட்ரை" என்று அதட்டினார்கள்.

என்ன அதட்டி என்ன?

காலைத் தரையில் ஊன்றினாலே ஷாக் அடிக்கிற மாதிரி வலிக்கிறது என்று புஷ்பா பிழியப்பிழிய அழும் போது நடப்பதாவது, ஓடுவதாவது?

தணிகாசலமும், சிவகாமியும் ஆடிப்போனார்கள்.

பெண் குழந்தை. இன்றைக்கெல்லாம் பதினேழு வயது தான் ஆகிறது. ஓடவேண்டிய வயதில் இப்படிக் காலை ஒடித்துக்கொண்டு ஊனமாகிவிட்டாளே, இவளை நாளைக்கு சிறப்பாய் ஒரு இடத்தில் கட்டிக்கொடுக்க வேண்டுமே! ஆயிரம் கனவுகள் காணுவதெல்லாம் வீண் தானா?

புஷ்பாவின் கத்தலையும், அழுகையையும், ஏசல்களையும் பொறுத்துக்கொண்டு டாக்டர் சொன்ன விதத்தில் தனம் எவ்வளவோ அவளிடம் மன்றாடிப்பார்த்தாள். ஆனால் பலன்தான் இல்லை.

"அடுத்த வருஷம் உனக்கு அரங்கேற்றம் பண்ணனும்னு அம்மா நினைச்சிட்டிருக்கறது உனக்குத் தெரியுமே, புஷ்பா? நீ இப்படிக் கால் வலிக்குது, வலிக்குதுன்னு புலம்பிக்கிட்டேயிருந்தா அதெல்லாம் நடக்குமாம்மா? விடாம எக்ஸர்சைஸ் பண்ணா கால் பழையபடி ஆயிடும்னு டாக்டர் சொல்றாரில்லே, அப்புறம் சும்மாயிருந்தா எப்படி புஷ்பா?"— என்றாள் ஒருநாள்.

"கமலா மாதிரி பெரிய டான்ஸரா வரணும்னு நினைச்சதை நிறைவேத்திக் காட்ட வேணாமா? வாம்மா, எக்ஸர்சைஸ் பண்ணலாம்" என்று ஆசைகாட்டினாள் அடுத்த நாள்.

CPL 648973

"சமத்து இல்லே... பிடிவாதம பண்ணாம என் கையைப் பிடிச்சிட்டு எழுந்து நில்லும்மா... கொஞ்சமா எக்ஸர்சைஸ் பண்ணலாம். வலிச்சா நிறுத்திடலாம்... எழுந்துக்க புஷ்பா... எனக்காக, வாம்மா..." என்று கெஞ்சினாள் இன்னும் ஒருநாள்.

648973

புஷ்பா நல்ல மூடில் இருந்தால் தனத்தின் பேச்சை லேசாகக் காதில் வாங்கிப் பயிற்சி பண்ண முயற்சிப்பாள்; இல்லை, குரங்குக் குணமாக இருந்தால் "உனக்கென்ன தெரியும் என் வலி? ஜம்முன்னு உட்கார்ந்து தின்னுட்டு இருக்கற உனக்கென்ன? வலிச்சா என்ன? துடிச்சா என்ன? ரொம்ப அக்கறைதான்... இந்த வேஷமெல்லாம் என்னண்டை வேணாம்... போ... போ..." என்று சுத்துவாள்.

பயிற்சிக்கு ஒப்புக்கொள்கிற அன்றைக்கு தனம் பொறுமையுடன் அவளைப் படுக்க வைத்து காலை நீட்டி மடக்க உதவுவாள். உடம்பின் கனத்தைக் காலில் போட்டு நடக்க ஏதுவாய் தோளோடு தோள் இணைந்து நிற்பாள்.

894.8/13 SIV

புஷ்பாவுக்கு வலி கடுகத்தனைகூட எழாமல் இருக்க அதிகக் கவனத்துடன் இருப்பாள். இப்படி ஜாக்கிரதையாக இருக்கும்போதே, கொஞ்சம் காலை அதிகமாக மடக்கி வலி எழுந்துவிட்டால் உயிரே போய்விட்ட தினுசில் புஷ்பா அழுது அழிச்சாட்டியம் பண்ணுவாள்.

"ஒடிச்சிடு, இருக்கற காலையும் ஒடிச்சிடு!" என்பாள்.

"அம்மா, இந்த ராட்சஸிகிட்டேயிருந்து என்னைக் காப்பாத்தேன்"— என்று அலறுவாள்.

"நா முடமாவே இருக்கேன்... பரவாயில்லை! என்னை ஒருத்தனும் கட்டிக்க வேணாம்... இப்ப என்னை விட்டுடுங்க" என்று குரலெடுத்து அழுவாள்.

மகளின் வேதனை தாங்காமல் சிவகாமியும் கதற முற்படுவாள்.

"எந்தக் கொள்ளிக்கண் பட்டுச்சோ"வில் ஆரம்பித்து, "ஊரார் பிள்ளையை வளர்த்தேனே" என்று முடிப்பாள்.

ஆக, மொத்தத்தில் அந்த ஆறு மாதங்களும் வீடு வீடாக இல்லாமல் ஒரு ஆஸ்பத்திரியாய்... மௌனம், துக்கம் சூழ்ந்த இடமாய்... சதாசர்வகாலம் காட்சியளித்தது நிஜம்தான்.

* * *

அன்று தணிகாசலத்தின் ஒன்றுவிட்ட மாமா கோயம் புத்தூரிலிருந்து ஏதோ வேலையாய் பம்பாய்க்கு வந்தவர், இவர்கள் வீட்டுக்கு வந்திருந்தார்.

புஷ்பாவுக்கு நடந்த விபத்து பற்றியும், சிகிச்சை பற்றியும், தற்போதை நிலை பற்றியும் கேள்வி கேட்டவர், "அந்த வேன் சொந்தக்காரனை சும்மாவா விட்டீங்க? கேஸ் போட்டு பணத்தைக் கறக்காம சும்மாவா விட்டீங்க?" என்று சில நிமிடங்களுக்குக் குதித்துவிட்டு, திடுமென்று "புத்தூருக்குப் போய் வைத்தியம் பாக்கறதுதானே?" என்றார்.

"புத்தூரா?"— சிவகாமி விழித்தாள்.

"அட— என்னம்மா நீ... புத்தூர் வைத்தியம் தெரியாது? உலகத்துல எந்த மூலைலேருந்துல்லாமோ எலும்பு வைத்தியம் பண்ணிக்க அங்க வராங்க, நீ என்னமோ புத்தூரானு இழுக்கறியே! என்ன, தணிகாசலம், உனக்குக் கூடவா தெரியாது?"

தணிகாசலம் 'கேள்விப்பட்டிருக்கிறேன்' என்றார்.

"கேள்விப்பட்டது உண்மைன்னா முதல்லியே அங்க ஏம்ப்பா போகலை? ஏப்போர்ப்பட்ட மோசமான முறிவுக் கெல்லாம் அங்கே வைத்தியம் பண்றாங்க! எங்க ஊர்லே

ஒரு கிழவி, எண்பது வயசு, குளியலறையிலே வழுக்கி விழுந்து இடுப்பை உடைச்சிக்கிட்டா. உள்ளூர் டாக்டர் 'ஒண்ணும் முடியாது; வயசான சரீரம்'னு சொல்லிட்டார். கிழவியோட மூத்த மகன் சும்மா இல்லாம புத்தூருக்குக் கூட்டிட்டுப் போனார். எண்ணி ரெண்டே மாசம்... கிழவி இப்ப மாடிப்படி ஏறி இறங்கறா! சரி... அதவிடு... எங்க தெருவிலே மூணாவது வீட்டுப் பையன் எம வாலு. மரத்துலேந்து விழுந்து தலையை ரெண்டாக்கிக்கிட்டான். புத்தூருக்கு எடுத்திட்டு போனாங்க... இப்ப மண்டை ஓட்டின எடம் தெரியலை... இன்னும்..."

மாமா நீளமாய் பட்டியல் போடப்போட, சிவகாமியின் திறந்த வாய் மூடாமல் நின்றது.

நிஜமாகவா?

இப்படியொரு இடம்கூட இருக்கிறதா?

ஆயிரக்கணக்கில் பணம் செலவானாலும் பரவா யில்லை. மகள் பழையபடி பாட்டும், கூத்தும், ஓட்டமுமாய் இருந்தால் போதுமே!

மாமா அந்தப் பக்கம் போனதுமே இவர்கள் புத்தூர் போவதைப்பற்றிப் பேசத் தொடங்கிவிட்டார்கள்.

புத்தூரிலேயே தங்கி நாமே சமைத்துச் சாப்பிடக்கூட வசதி உண்டாம்.

"போவோம்... அங்கே வைத்தியர் என்ன சொல்றார்னு கேட்போம். ஒரு மாசம் தங்குங்க, நா சரிபண்ணிட றேன்னார்னா ஜாகை அமர்த்திகிட்டு தங்கிடுவோம். பாத்திரம், பண்டம் எடுத்துகிட்டுப் போயிட்டம்னா, ஒரு மாசம் தங்கிச் சமைச்சுச் சாப்பிட்டுட்டு வைத்தியம் பண்ணிக் கிடலாம்... என்னங்க?"

தணிகாசலம் கொஞ்சம் யோசித்தார்.

"போறதப்பத்தியோ தங்கறதப்பத்தியோ, இல்லை செலவைப்பத்தியோ நா யோசிக்கலை, சிவகாமி. ஆனா, ஒரு மாசம்போல ஃபாக்டரியை விட்டுட்டு என்னால இருக்க முடியாதேனுதான் தயங்கறேன்... நிலைமை இப்போ ரொம்ப இக்கட்டா இருக்கு. நிறைய ஆர்டர் வந்திருக்கற சமயம்... அதுதான் யோசிக்கறேன்..."

தணிகாசலம் மிகைப்படுத்திப் பேசவில்லை.

ஆறு வருடம் முன் பிளாஸ்டிக் தொழிற்சாலை தொடங்கின சமயம் இருந்த தணிகாசலம் இல்லை அவர் இப்போது. தத்தி நடைபோட்ட தொழில், இரண்டு வருடங்களாய் நிமிர்ந்து ராஜநடை போடத் தொடங்கிவிட்டது மட்டுமல்லாமல், சில மாதங்களுக்கு முன் இவருடைய பார்ட்னராக இருந்த சர்தார்ஜி, பஞ்சாபோடு போய்விட எண்ணி, தன் பங்கையும் இவருக்கு விற்றுவிட்டதில், தணிகாசலம் இப்போது தொழிற்சாலையின் ஏகபோக முதலாளி. அத்தனை பொறுப்பும் அவருடையதுதான். டெலிபோன், ஸ்கூட்டரில் நிற்கும் அந்தஸ்து, சொந்த வீடு, கார் வரைக்கும் எட்டிப்பார்க்கலாமா என்பதில் இருக்கிறது.

"நம்ப பாப்பாவைவிட நமக்கு வேறு என்னங்க முக்கியம்?"

"ஒண்ணுமில்லேதான், சிவகாமி. ஆனாலும் நாலையும் சிந்திச்சு நடக்கறதுல தப்பொண்ணும் இல்லியே?"

"யோசிங்க... நா வேணாங்கலை... ஆனா, புத்தூருக்குப் போறதை மட்டும் தடுக்காதீங்க."

"ம்."

அன்றிரவு பூராவும் யோசித்துவிட்டு ஒரு முடிவுக்கும் வர இயலாமல் தவித்தவரிடம், மறுநாள் சிவகாமி வந்து நின்றாள்.

"ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் டிக்கெட் என்னிக்குக் கிடைக்குதுனு விசாரிச்சுக்கிட்டு வாங்க... நாம சேர்ந்தே போவோம். பத்து நாள்லே வைத்தியத்தை முடிச்சுக்கிட்டு வர முடியும்னா வந்திடுவோம்... இல்லைன்னா, நானும், பாப்பாவும் சௌகரியமா அங்கே தங்கறதுக்கு ஏற்பாடு பண்ணிட்டு நீங்க வந்திடுங்க... பிறகு, டாக்டர் எப்ப வரச் சொல்றாரோ அப்ப வந்து எங்களைக் கூட்டிக்கிடுங்க..."

"தனியா பாப்பாவோட அங்க இருக்க முடியுமா, சிவகாமி?"

"ஏங்க முடியாது? அங்கதான் நிறைய ஜனம் இருப்பாங்கன்னு மாமா சொன்னாரே... ப. ஷைத் தொந்தரவும் இருக்காதுன்னாரில்லே..."

"அதுக்கில்லே... என்ன இருந்தாலும் தனியா எப்படி? ம்? ஒண்ணு பண்ணறியா? துணைக்கு பாலு, இல்ல தனம் யாரையாச்சும் கூட்டிக்கிடறியா?"

"அதயும் நா யோசிச்சுப்பாத்தேங்க. சரிப்பட்டு வரும்னு தோணலை... இன்னும் ஒரு மாசத்துலே பாலுவுக்குப் பெரிய பரிட்சை வருது... அவன் வரமுடியாது... தனத்தை இட்டுக்கிட்டுப் போனா அவன், நீங்க சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவீங்க? ஹோட்டல் அது இதுனு போனா காசுக்குக் காசும் தண்டம், உடம்பும் கெட்டுடும்... அதனால அவங்க ரெண்டுபேரும் இங்கேயே இருக்கட்டும், நாம போயிட்டு வந்துடுவோம்..."

சிவகாமி தீர்மானமாகப் பேச, நான்கு நாளில் மூவரும் கிளம்பினார்கள்.

"வீடு பத்திரம்... திறந்து போட்டுட்டு இங்க, அங்க போயிடாதே... ஊர் கெட்டுக் கிடக்கு... பாத்திரம் பண்டம் ஜாக்கிரதை... உன்னை நம்பித்தான் ஒப்படைச்சிட்டுப் போறேன்..."

சிவகாமி நீளமாய்ப் புத்தி சொன்னதற்கெல்லாம் தனம் சரி, சரி என்று தலையாட்டினாள்.

வாஸ்தவத்தில் தனத்திடம் வீட்டை ஒப்படைத்துவிட்டுப் போவதில் சிவகாமிக்குக் கவலை ஏதும் இல்லை. இதற்கு முன் இரண்டு முறைகள் ஒரு கல்யாணம், ஒரு பூச்சூட்டல் என்று சென்னை, பூனாவுக்குப் போய்வந்தபோது கன பத்திர மாகப் பார்த்துக்கொண்ட அனுபவம் அவளுக்கு இருந்தது.

புத்தூருக்குப் போய்ச்சேர்ந்த எட்டாம் நாள் தணிகாசலம் மட்டும் தனியாக பம்பாய்க்குத் திரும்பினார்.

"குறைந்தபட்சம் ரெண்டு மாசமாவது அங்க தங்க ணும்னு வைத்தியர் சொல்லிட்டார்... மருந்து கொடுங்க, அடுத்த மாசம் திரும்ப வர்றோம்னு சொல்லிப் பார்த்தேன். அவர் கேட்கலை. சிவகாமி தைரியமா இருக்கேன்னு சொன்னா... கூட நமக்குத் தெரிஞ்ச குடும்பம் ஒண்ணு வைத் தியத்துக்கு அங்க வந்து தங்கியிருக்கு... கவலைப்படாமப் போங்கன்னு சிவகாமி சொன்னா... வந்திட்டேன்..."

இரண்டு மாதமா?

அடேயப்பா... அத்தனை நாட்களா தனியாக இந்தக் குடும்பப் பொறுப்பைத் தாங்கவேண்டும்?

பேசிக்கொண்டே போன மாமாவை ஒரு தரம் முழுசாய் நிமிர்ந்து பார்த்தபோது, அந்த முகமும் பார்வையும் விவரிக்கத் தெரியாத தினுசில் புதுசாய் தோன்றிட, தனத்தின் முதுகுத்தண்டு பளிச்சென்று சில்லிட்டது.

* * *

தனத்துக்கு ரொம்ப பயமாக இருந்தது.

என்னவோ, எங்கோ தப்பாகப் போகப்போகிறது என்கிற எண்ணம், காரணம் இல்லாமல் மனசுக்குள்

வியாபித்து, நிம்மதியாய் உட்கார முடியாமல், சாப்பிட முடியாமல், தூங்க முடியாமல், பிறாண்டியது.

மாமாவின் பார்வையும், வித்தியாசமாக இருக்கிறமாதிரி படுகிறதே... இது கற்பனையா? நானாக நினைத்துக் கொள்வதா? இல்லை நிஜம்தானா?

ச்சீ— நான் ஏன் இப்படி வக்ரமாக நினைக்க ஆரம்பித்து விட்டேன்!

மாமா?

தப்பெண்ணத்தில்?

இல்லை... இல்லவே இல்லை...

என் மனசுதான் அசிங்கப்பட்டுப்போய்விட்டது.

ஐம்பது வயதைத் தாண்டினவர், தந்தைக்குச் சம மானவர், இத்தனை வருடங்களில் என்னை வேறு எந்த தினுசிலும் ஏறெடுத்துக்கூடப் பார்க்காதவரைப்பற்றி இப்படிக் கீழ்த்தரமாய் எண்ணுவது பாவமில்லையா?

என்னென்னவோ சொல்லிச் சமாதானம் செய்து கொண்டாலும் தனத்தின் சந்தேகம் மணிக்கு மணி விரிந்ததே ஒழிய அடங்க மறுத்தது.

ஊரிலிருந்து வந்து இறங்கியவர் வெறுங்கையோடு வரவில்லை. ஒரு கூடையில் பழம், பூ.

தான் கேட்காமல் தானாகவே 'வழிலே ஒரு ஸ்டேஷன்லே கிடைச்சிது வாங்கினேன்' என்று தணிகாசலம் சொன்னபோது கொஞ்சங்கூட சந்தேகம் தனத்துக்கு எழவில்லைதான்.

பழங்களை அலம்பி, தூக்குக் கூடையில் வைத்தாள். பூவைக் கிள்ளி சாமி படத்துக்குப் போட்டு, தானும் வைத்துக் கொண்டாள்.

பாலு சாப்பிட்டுவிட்டு கல்லூரிக்குப் போன பிறகு சாப்பிட வந்தார்.

பொரியலை வாயில் போட்டுச் சுவைத்து, "உன் கைக்கு தனி மணம், தனம்!" என்றவர் நிமிர்ந்து பார்த்து, "ஏன் பூ கம்மியா வெச்சிருக்கே? தலை நிறைய வெச்சிக்கறது தானே?" என்றபோதுதான் முதல் தடவையாக தனத்துக்கு அடிவயிற்றில் ஒரு சங்கடம் தோன்றியது.

சமையலை இதுநாள்வரை வாயைத் திறந்து ஒருதரம் கூடப் பாராட்டியிராத மாமா, மணம் அது, இது என்கிறார்; பூ அதிகம் வைக்கிறதுதானே என்கிறார்... என்ன இதெல்லாம்?

மறுநாள் ஆபீஸிலிருந்து தணிகாசலம் சுருக்க திரும்பி விட்டார். பாலு சாதாரணமாய் ஆறுமணிக்குத்தான் வருவான். இவர் வீட்டில் நுழைந்தபோது மணி நான்கு.

"இந்தா தனம், இந்தப் பொட்டலத்தை வாங்கிவை."

நீட்டிய பொட்டலத்தை வாங்கியபோது விரல்கள் உரசினது புரிய, தனம் சின்னதாய் அதிர்ந்தாள்.

"என்னனு பிரிச்சுப் பாரேன்..."

பிரித்தாள்.

"எங்க ஆபீஸ் பக்கத்து ஹோட்டல்லே பாதாம் அல்வா பிரமாதமாப் போடுவான். ஊர்ப் பணக்காரங்க அத்தினி பேரும் க்யூவிலே நின்னு வாங்கிட்டுப் போவாங்க... ரொம்ப நாளா உனக்கு வாங்கித் தரணும்னு எனக்கு ஆசை... பாவம், நீயும்தான் எங்கே போறே, என்ன சாப்பிடுறே? அதான் நினைப்பா இன்னிக்கு வாங்கிட்டு வந்தேன். பிரிச்சு சாப்பிட்டுட்டு எனக்கும் எடுத்தா..."

இது என்ன திடீர் கரிசனம்?

மனசின் பிறாண்டல் அதிகமாக, ஒரு வார்த்தை பேசாமல் தனம் மாமாவுக்கு அல்வாவும், காபியும் தந்தாள்.

"நீ எடுத்துக்கலை?"

"தம்பி வரட்டும், மாமா. அவனுக்குக் கொடுத்திட்டு எடுத்துக்கறேன்..."

மூன்றாம் நாளிலிருந்து விஷயம் இன்னும் தீவிரமானது போலத் தோன்ற, தனம் நிஜமாகவே நடுங்கிப்போனாள்.

இல்லை... இது கற்பனை இல்லை...

நிச்சயம்.

மாமா முன் மாதிரி இல்லை...

பாலு கல்லூரிக்குப் போகும்வரை ஏதோ வேலை இருக்கிற பாவனையில் தங்கிவிட்டு லேட்டாய் புறப்படு கிறார். மாலையில் தலைவலி, வயிற்றுவலி, ஷிஃப்ட் முடிந்து விட்டது என்று நொண்டிச்சாக்குகளைச் சொல்லி, சுருக்க வந்துவிடுகிறார்.

ஏன்?

இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?

முன்பு மாமா கையைத் தொட்டு சாமான்களைக் கொடுப்பாரோ? வாங்குவாரோ?

இல்லையே—

பின் இப்போது மட்டும் ஏன்| இந்தப் புதுப்பழக்கம்?

ஐயோ...

எனக்கு பயமாக இருக்கிறதே...

ஐந்தாம் நாள் மாலை வழக்கம்போல சீக்கிரம் வீடு திரும்பியவர் கையில் கட்டாய் பூ.

தனத்திடம் அதைக் கொடுத்தபோது விரல்களை ஒரு தரம் அழுந்த பிடித்துவிட்டே கொடுத்ததுமல்லாமல், "சாமி

கீமினு அத்தனையும் படங்களுக்குப் போர்டாம ஜம்முனு நீயே வெச்சிக்க" என்று வேறு சொன்னதும், தனம் வெலவெலத்துப்போனாள். பூவை வாங்கி சாமி அலமாரியில் பிரிக்காமல் வைத்தவள், சமையலறையைவிட்டு வெளியில் வரவேயில்லை.

அவள் பயந்ததுபோலவே பாலு வந்ததும் முதல் கேள்வியாய் அதைத்தான் கேட்டான்.

"பூவாக்கா? ஏது இத்தனை?"

இவன் கேள்விக்குக் கூடத்திலிருந்த தணிகாசலம் பதில் சொன்னார்.

"என் வொர்க்கர்ஸ்லே ஒரு பையனோட அம்மா பூவியாபாரம் துவங்கியிருக்கா, பாலு... நாந்தான் பணம் கொடுத்து உபகாரம் பண்ணியிருக்கேன். என் கை ராசியானதுனிட்டு ஒரு நம்பிக்கை. தினம் நாந்தான் போணி பண்ணனும்னு சொல்லி கையிலே திணிச்சிட்டா. அத்தனை நம்பிக்கை வெச்சிருக்கறதைக் கெடுப்பானேன்னு ஒரு ரூபாய்க்கு வாங்கிக்கிட்டேன். பத்துநாள் வாங்கிட்டு, அவங்க வியாபாரம் ஸ்திரப்பட்டதும் நிறுத்திடுவேன்..."

மாமாவின் விளக்கம் அருமையாய் இருந்தது.

காபி சாப்பிட்டுக்கொண்டு நின்றவனை மாமா, "பாலு, இங்க வாப்பா" என்று அழைக்க, தம்ளருடன் அவன் கூடத்துக்குப் போனான்.

"தலைவலி மாத்திரை இருக்குதாப்பா?"

பாலு உள்ளே சென்று அலமாரியைக் குடைந்தான்.

"ஸாரிடான் இருக்கு, மாமா."

"கொண்டா... தனத்தை அரை டம்ளர் காபி கொண்டாரச் சொல்லு..."

சொன்னான்.

"ஏம் மாமா... தலைவலியா?"

"நாலு நாளாவே விடாம தலைவலிக்குதுப்பா... கண்ணாடி மாத்தித் தொலைக்கணுமோ என்னமோ..."

தனம் நீட்டின காபியுடன் தணிகாசலம் மாத்திரையை விழுங்கினார். அப்புறம் வேடிக்கைக் குரலில் பேசினார்.

"அவனவன் தர்மேந்திரா, ஹேமமாலினி படத்துக்கு டிக்கட் கிடைக்காதானு தவிக்கறான். நம்ம வீட்டுலே ஒண்ணு பாழாப்போவுது... ம்..."

"என்ன டிக்கட், மாமா?"

"நாலு நாள மிந்தி புதுப்படம் ரிலீஸாயிருக்குதே... என்னப்பா அது? ஃப்ரெண்ட ஒருத்தன் தான் படம் பாக்கப் போறேன்னு சொன்னான், எனக்கு ஒரு டிக்கட் எடுடான்னேன். இன்னிக்கு நைட் ஷோக்குதான் கிடைச்சிதுனு வாங்கிட்டு வந்து தந்தான்... தலைவலி பிளக்குது... எங்க படம் பாக்கறது! உன்னை அனுப்பலாம்னா, உனக்கு எக்ஸாம் கிட்ட வருது... படிக்கணும்... டிக்கட் வேஸ்ட்தான்!"

தர்மேந்திரா ஹேமமாலினி! அதுவும் புதுசாய் ரிலீசான புதுப்படம்... இருபதுக்கும், முப்பதுக்கும் ப்ளாக்கில் வாங்கிப் பார்க்க ஜனங்கள் முண்டும் படம்!

பாலுவுக்கு நாக்கில் நீர் ஊறியது.

"நா போயிட்டு வரேன், மாமா, டிக்கெட்டை ஏன் வீணாக்கணும்?"

"நீ படிக்க வேணாமா?"

"பரிட்சைக்கு இன்னும் பத்துநாள் இருக்கே... ஒரே ஒரு ராத்திரிதானே?"

"உன்னிஷ்டம்பா..."

பாலு விஸில் அடித்துக்கொண்டே முகம் கழுவிக் கொண்டான். "அக்கா, சுருக்க சாப்பாடு போடு" என்று எட்டுமணிக்கே சாப்பிட உட்கார்ந்தான். எட்டரைக்குத் தயாராகி வீட்டைவிட்டுக் கிளம்பிவிட்டான்.

அவன் அந்தப் பக்கம் போனதும் தனம் சமையல் கட்டில் வந்து உட்கார்ந்துகொண்டாள்.

இரண்டு நிமிடத்தில் வாசற்படியில் நிழலாடியது.

மாமா...

"பூ வெச்சிக்கலை, தனம்?"

".....''

"அன்பா ஒருத்தர் பூ வாங்கித் தந்தா உடனே வெச்சிக் கிட்டாத்தான் அழகு, தனம்! ஆசையா வாங்கிட்டு வந்திருக்கற எனக்கு வருத்தம் உண்டாகாது?"

".....''

தணிகாசலம் சாமி அலமாரியிடம் போனார். பொட்டலத்தை எடுத்துப் பிரித்தார். ஒரு முழம் போல கிள்ளி முருகன் படத்தில் போட்டுவிட்டு சொச்சத்தை தனத்திடம் நீட்டினார்.

வாய் திறந்து எதுவும் பேசாமல் பூவை தனம் வாங்கித் தலையில் சூட்டிக்கொண்டாள்.

"ம்... இப்ப எத்தனை நல்லா இருக்கு... லட்சுமிகரமா இருக்கற முகத்துக்கு பூ வெச்சா, களை இன்னும் எத்தனை கூடிப்போவுது!" ஒரு நிமிஷம் அங்கேயே நின்று தனத்தை உற்றுப் பார்த்தவர், "கூடத்துக்கு வாயேன்" என்று சொல்லி விட்டு முன்னறைக்குப் போய் சோபாவில் சௌகர்யமாய் உட்கார்ந்துகொண்டார்.

தயங்கித்தயங்கிப் பின்னால் சென்ற தனம் வாசப்படி யிடம் நின்றுகொண்டாள்.

"இப்படி வந்து உட்காரும்மா..."

அப்படியே சரிந்து அங்கேயே உட்கார்ந்தபோது அடிவயிற்றில் பட்டாம்பூச்சிகள் பறந்தன. உள்ளங்கையில் வியர்வை ஊறியது. நெஞ்சு படக்படக்கென்று காதுக்குள் அடித்தது.

"தனம்..."

நிமிர்ந்து பார்க்கப் பயமாக இருந்ததால் அவள் தலையைக் கவிழ்த்துக்கொண்டேயிருந்தாள்.

"ஏ... தனம்... என்னப் பாரேன்... உன்னை நா கடிச்சா விழுங்கிடுவேன்? அது என்ன அத்தனை பயம்?"

விழிகளை லேசாக நிமிர்ந்து மாமாவைப் பார்த்தவளின் பார்வையை கண்ணீர் மறைத்தது.

அந்தக் கண்ணீரையும், முகத்தின் கெஞ்சலையும் பார்த்த கணத்தில் தணிகாசலம் கொஞ்சம் திடுக்கிட்டுப்போனார்.

ஓ! இவள் இத்தனை அரண்டுபோயிருக்கிறாளா? இவளிடம் பக்குவமாய் நெருங்குவதுதான் நல்லதோ? முதலில் இந்தப் பயத்தை நீக்குவது அவசியமோ?

சில நிமிடங்கள் யோசித்தவர், வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேச ஆரம்பித்தார்.

"ரொம்ப நாளா உன்னண்டை பல விஷயங்களைப் பேசணும்னு எனக்கு ஆசை, தனம்... நேரமும் கிடைக்கலை, சந்தர்ப்பமும் கிடைக்கலை... இப்ப என் தொழில் நல்லா நடக்குதுனு உனக்குத் தெரியும்... முருகன் கிருபைலே எந்தக் குறையும் தொழிலைப் பொறுத்தவரை இல்லே... மகன் இல்லாத குறை ஒண்ணு இருந்திச்சு, அதையும் பாலு மூலமா தீர்த்திட்டான் அந்த முருகன்! பாலு நல்லா படிக்கறான். அவன் அடுத்த வருஷம் பி.காம். முடிச்சதும், மேலே எம்.காம். படிக்க வைச்சு, கூடவே ஐ.ஏ.எஸ்ஸும்

படிக்க வைக்கணும்னு நா விரும்பறேன்... இல்லாட்டி அஹமதாபாத் அனுப்பி எம்.பி.ஏ. படிக்க வைக்கணும்ன்றது என் ஆசை. என்ன தனம்... நா சொல்றது விளங்குதா?"

தணிகாசலம் எதிர்பார்த்த தினுசிலேயே தனத்திடம் அவர் பேச்சு பாதிப்பை உண்டாக்கியது. தனத்தின் உலகம் அவள் தம்பிதான். அவனுக்கு நல்லது ஒன்று செய்வதன் மூலம் அவளைச் சட்டென்று நெருங்க முடியும் என்ற கணிப்பில் தணிகாசலம் இப்படிப் பேசினதற்கு தனத்தின் முகத்தில் பளிச்சென்று எறின சோபை சரியான சாட்சியாக இருந்தது.

"எதுக்கு மாமா, உங்களுக்கு அத்தனை கஷ்டம்? இத்தனை வருஷங்களா நீங்க எங்களுக்காகப் பட்ட பாடே அதிகம். அடுத்த வருஷம் தம்பி படிப்பை முடிச்சிட்டா, உடனடியா பாங்க் வேலை கிடைக்கறது சுலபம்ன்றான்..."

"அ...அ... எதுக்கு அந்த பாங்க் வேலை எல்லாம்? எம்.பி.ஏ. படிச்சா ரெண்டாயிரம் ரூபா எடுத்த எடுப்பிலே சம்பளமா வரும், தெரியுமா உனக்கு? ஐ.ஏ.எஸ். படிச்சு கலெக்டராயிட்டா, அடேயப்பா, என்ன கௌரவம்; என்ன ஜபர்தஸ்து!"

தணிகாசலம் பேசிய தோரணையில் அரை நிமிஷம் தனம் மயங்கி நின்றாள்.

கலெக்டர் தம்பியா?

டாவாலி ப்யூன் முன்னால் போக, அத்தனைபேரும் 'ஷ் ஷ்—கலெக்டர் வரார்' என்று ஒதுங்கி, சலாம் வைக்க... ஸ்டைலாய் மார்பை நிமிர்த்திக்கொண்டு நடக்கும் கலெக்டர் பாலுவா?

நடக்குமா?

இதெல்லாம் அகலக்கால் ஆசை அல்லவா? விரலுக்கு மீறின வீக்கம் அல்லவா?

ம்ஹூம் வேண்டாம்...

தனம் தலையை அசைத்து வறட்சியுடன் சிரித்தாள்.

"அளவுக்கு மீறி ஆசைப்படறது தப்பு, மாமா... எங்க நிலைமைக்கு இப்ப இவன் பி.காம் படிக்கறதே ஜாஸ்தி... ஏதோ நீங்க போட்ட பிச்சை... இத கவனமா படிச்சு முடிச்சு காலாகாலத்திலே ஒரு வேலைல அவன் உட்கார்ந்து உங்களுக்கு நாங்க பாரமா இல்லாம இருந்தா போதும், மாமா..."

தணிகாசலம் முகத்தைப் பாவமாக வைத்துக் கொண்டார்.

"என்னம்மா நீ? பிச்சை, பாரம்னு பேசிகிட்டு... உங்க மேல நா வெச்சிருக்கற பிரியம் புரிஞ்சா நீ இப்படிப் பேசுவியா?"

"அதில்ல மாமா... வந்து..."

"நீயோ, இல்ல உங்க அத்தையோ என்ன சொன்னாலும் நா இந்த விஷயத்துலே கேட்கப்போறதில்லை, தனம்... நிச்சயமா பாலுவை பெரிய படிப்புப் படிக்க வைக்கத்தான் போறேன்..."

தீர்மானமாக தணிகாசலம் பேசியதற்குப் பதில் சொல்லாமல் தனம் அமர்ந்திருந்தாள்.

மனசு மட்டும் உள்ளுக்குள் குதித்துக்கொண்டிருந்தது.

கலெக்டர் தம்பி...

கடவுள் அனுக்ரகம் இருந்தால் நடக்குமோ என்னமோ? பாவம் மாமா... எத்தனை ஆசையாகப் பேசுகிறார்!

தனம் நெகிழ்ந்திருக்கும் இந்தக் கணத்துக்கு காத்திருந்தது போல தணிகாசலம் தலையை கைக்குள் புதைத்துக் கொண்டார். கரகரத்த குரலில் பேசினார்.

"வாழ்க்கைலே எதுலியாவது மனுஷனுக்கு சந்தோஷம் இருக்கணும், தனம்... வெறுமனே சம்பாதிக்கறதுக்கு மட்டும் தான் ஒருத்தன் தேவைனு ஆயிடிச்சின்னா அப்புறம் அவனுக்கும் ஒரு மிஷினுக்கும் என்ன வித்தியாசம் சொல்லு...?"

"உங்க அத்தையைப்பத்தி குறை சொல்றேன்னு நினைக்காதம்மா... அவ ஒருமாதிரி டைப்... உனக்கே தெரிஞ்சது தானே? என்னை என்னைக்காவது புருஷனா ஆம்பளையா மதிச்சு நடத்தியிருக்காளா? யோசிச்சுப்பாரு...! என் விருப்பம் என் இஷ்டம்னு எது இந்த வீட்டுலே நடக்குது? எல்லாம் அவ வைச்சதுதான் சட்டம். ஏன்? உன்னையே எடுத்துக்க... உன்னை நா ஸ்கூலுக்கு அனுப்பணும், தொடர்ந்து படிக்க வைக்கணும்னு சொன்னேன்... கேட்டாளா? ம்ஹூம், இல்லே. சமையலுக்கு ஒரு அம்மாளைப் போட்டுக்க, நமக்கு வசதி இருக்குன்னேன்... கேட்டாளா? தனம் இருக்கறா பாத்துப்பா... என்னாத்துக்கு வேற ஆளுனிட்டா! நீ என்ன இந்த வீட்டுக்கு சமயக்காரியா? வேலைக்காரியா? எத்தனை தரம் அவகிட்ட இது குறிச்சு சண்டை போட்டிருக்கேன் தெரியுமா? பாலு விஷயத்துலே நா சொல்றதைக் காதுலே போட்டுக்கிடறவ, ஏனோ உன்னைப் பொறுத்தவரை கல்நெஞ்சத்தோட நடந்துக்கறா..."

தணிகாசலம் என்ன சொல்லவருகிறார் என்று தனம் புரியாமல் விழித்தாள்.

முதலில் இந்த வீட்டில் எனக்கு என்ன சுகம் என்றார். அப்புறம் உனக்கு என்ன சுகம் எல்கிறார். எதற்காக இப்படி யெல்லாம் பேசுகிறார்?

"அத்தை என்னை மோசமா நடத்தலை, மாமா... அன்பா தான் இருக்காங்க. நீங்க எதையோ நினைச்சு வீணா மனசு குழம்பறீங்கனு எனக்குத் தோணுது."

"சந்தோஷமா இருக்கறதா நீ சொல்றது உன் அடக்கத்தைக் காட்டுது... அவ்வளவுதான்! சரி உன் பேச்சை விடு, என்னை எடுத்துக்க... நா நிம்மதியா, சந்தோஷமா இருக்கறதாவா நீ நினைக்கறே?"

"இல்லே தனம்... ஒரு புருஷனா என்னை மதிச்சு உங்கத்தை எங்க நடந்துக்கறா? ராத்திரி முன்னைலே நா தனியா படுக்கறேன். இவ மகளோட கூடத்துலே படுக்கறா... எனக்கு என்ன அப்படி வயசாயிடிச்சு!"

ஹோ... இங்கே தொட்டு, அங்கே தொட்டு மனுஷன் இதற்கு வருகிறாரா?

தனம் எழுந்து நின்றாள்.

"சாப்பிட வறீங்களா, மாமா? சோறு ஆறிப்போயிடும். சாப்பிட்டா பத்துப் பாத்திரங்களை ஒழிச்சு, சமயக்கட்டை கழுவிவிட்டுடுவேன்."

தணிகாசலம் எழுந்திருக்காமல் தனத்தை வெறித்தார்.

"உனக்கும் என்மேலே கருணையே இல்லியா, தனம்? நீயும் உங்க அத்தை மாதிரிதானா? நா மனுஷன்றது உனக்கும் தோணலியா? உன் கண்ணுக்கும் நா உழைச்சிக் கொட்டுற மெஷினாத்தான் தெரியறேனா?"

தனம் பதில் ஏதும் பேசாமல் சமையல்கட்டுக்குள் நுழைந்தாள்.

அடங்கியிருந்த படபடப்பு மீண்டும் தலைதூக்கியது.

தணிகாசலம் அவளைத் தொடர்ந்து சமையல்கட்டுக்குள் நுழைந்தவர் நெருங்கி நின்றார்.

"தனம்..." என்றவரின் குரல் கிசுகிசுப்பாய் இருந்தது.

ஒரு கையை அவள் தோளில் வைத்து அழுத்தி மீண்டும் 'தனம்' என்றதும் அவள் பதறிக்கொண்டு நகர்ந்தாள்.

"மாமா... என்ன... மா...மா... இ...து?"

கேள்வி வாய்க்குள்ளேயே சிக்கிக்கொண்டது. கண்களில் ஜலம் ஊறி கன்னத்தில் வழிந்தது. உடம்பு தடதடவென்று நடுங்கியது.

"சத்தியமா சொல்றேன், தனம்... உன் மேல எனக்கு ரொம்ப நாளா ஒரு இது... தனம்... தனம்... உனக்கு என்ன வேணும் சொல்லு– பணம்? நகை? பட்டுப்புடவை? சொல்லு தனம்– நாளைக்கே அத்தனையும் கொணாந்து உன் காலடிலே வெக்கறேன்... என்னப் புரிஞ்சிக்க, தனம்..."

பேச்சு வேகவேகமாய் வெளிப்பட்டது.

மூச்சு மஹா உஷ்ணத்துடன் சீறிக்கொண்டு தனத்தின் கன்னத்தை வருடியது.

சமையலறை மூலையில் தனம் ஒடுங்கிக்கொண்டாள். கைகளைக் கூப்பிக்கொண்டு, "மாமா– வேணாம்... தப்பாப் பேசாதீங்க... மாமா" என்று கெஞ்சினாள்.

"இதுலே தப்பு என்னா, தனம்? ஒண்ணுமில்லே... உனக்கும் உன் தம்பிக்குமா நா வருஷக்கணக்கா என்னெல்லாம் செஞ்சிருக்கேன்? பார்த்திக்கு கொஞ்சம் எனக்கு சந்தோஷத்தை நீ தரக்கூடாதா? உன் தம்பிய எப்படியெல்லாம் ஆளாக்கணும்னு நா திட்டம் போட்டிருக்கேன்... அதுக்காகவாவது நீ என் இஷ்டப்படி நடக்கக்கூடாதா? தனம்... தனம்..."

மூலையோடு மூலையாய் நின்றவளை தணிகாசலம் நெருங்கினார்.

தம்பி, நன்றிக்கடன் என்று திரும்பத்திரும்பச் சொல்லி தனத்தை உருகவைக்கப்பார்த்தும் அவள் இணங்க மறுக்கவே, மிரட்டத் தொடங்கினார்.

"நன்னி இல்லாம இருப்பேன்னு நீ பிடிவாதம் பண்ணினா சரி... இரு... ஆனா ஒண்ணு கேட்டுக்க... என் விருப்பப்படி நடக்க நீ மறுத்தா, நா ஏமாத்தத்துலே என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது! பாலு படிப்பை நாளைக்கே நிறுத்திடலாமானுகூடத் தோணுது– அத்தனை ஆத்திரம் வருது... என்ன, நிறுத்திடவா? சொல்லு தனம்... என் விருப்பப்படி நடக்கறதால உனக்கு என்ன கஷ்டம்? இது யாருக்குத் தெரியப்போவுது? சும்மா ரெண்டு மாசம் ஜாலியா இருந்திட்டு அப்புறம் அத்தனையும் மறந்திட வேண்டியதுதானே? இத்தனை நா சொல்லியும் சம்மதிக்க உனக்கு விருப்பம் இல்லேன்னா சரி, விடு... நா ஆம்பிளை, எனக்குப் போக்கிடமா இல்லை? ஆனா ஒண்ணு நினைப்பு வெச்சிக்க, நாளைலேந்து பாலு காலேஜ் போகமாட்டான். இது நிச்சயம்... என்ன சரிதானா?"

அன்று தனம் அவரிடம் வகையாய் மாட்டிக் கொண்டாள்.

ஒரு பக்கம் இத்தனை வருடங்களாய் காப்பாற்றிச் சோறு போட்டு ஆதரிப்பவர் என்ற நன்றிக்கடன். இன்னொரு பக்கம் தம்பியின் படிப்பு திடீரென்று நின்றுவிடும் என்ற பயம். இந்த இரண்டுடனாகச் சேர்ந்து ஆளை விரட்டிய விரட்டலில்... நியாயம், தர்மம், தப்பு, சரி எல்லாவற்றையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, மாமாவின் விருப்பத்திற்கு இணங்குவதைத் தவிர தனத்துக்கு வேறு வழியில்லாமல் போயிற்று.

அடுத்து வந்த நாட்களில் பாலுவுக்கு சந்தேகம் வராமல் இருக்க அவனிடம் அதிக அன்புடன், அக்கறையுடன் இருக்க தணிகாசலம் முயன்று அதில் வெற்றியும் கண்டார்.

அந்த இரண்டு மாதத்தில் பாலுவுக்கு ஒரு டெரிகாட்டன் பேண்ட், இரண்டு சட்டை, ஒரு பார்க்கர் பேனா இவற்றோடு, நான்கைந்து சினிமா, அவ்வப்போது கைச்செலவுக்குப் பணம் என்று நிறைய அன்பளிப்புகள் கிடைத்தன.

தனத்துக்கும் பரிசுகள் கிடைக்காமல் இருக்குமா?

ஓ! கிடைத்தனவே...

அவற்றில், சிவகாமி மகளின் வைத்தியத்தை முடித்துக் கொண்டு பம்பாய்க்குத் திரும்பினபோது தனத்தின் வயிற்றில் இரண்டரை மாதமாக உருவாகியிருந்த சமாச்சாரம் எல்லாவற்றையும் விட முக்கியமான பரிசு.

* * *

தான் கர்ப்பம் என்கிற விவரத்தை தனம் முதலில் சத்தியமாக நம்பவேயில்லைதான்.

மாமாவுக்கு வயதாகிவிட்டது என்ற எண்ணமா? அத்தைக்குக் கல்யாணமாகி பத்து வருஷங்கள் போல குழந்தை பிறக்கவில்லை என்ற அலட்சியமா? மாமா முன் ஜாக்கிரதையாய் இருந்திருப்பார் என்ற நம்பிக்கையா, இல்லை, தெரியாத்தனமா? ஏதோ ஒன்று. ஆனால் அவள் இந்த பயங்கரத்தை அத்தனை தீவிரமாய் எண்ணிப் பார்த்திருக்கவில்லை என்பதுதான் நிஜம்.

சாதாரணமாய் மணி அடித்துக் கூப்பிட்ட தினுசில் வராமல், இப்படி அப்படி ஆகும் பழக்கம் உண்டு என்பதால் அசந்துவிட்டவள், முழித்துக்கொண்டு என்ன இது என்று கவலைப்படத் தொடங்கும்போது வீட்டில் நிலைமை மாறி விட்டது.

பரிட்சை முடிந்து வீட்டோடு பாலு இருந்ததால் தணிகாசலத்தை ஐந்து நிமிடம் தனிமையில் சந்தித்து, 'மாமா

எனக்கு என்னமோ சந்தேகமாக இருக்கிறது' என்று சொல்லக்கூட தனத்தால் இயலவில்லை.

சரி, நாம் அதிகம் பயந்திருக்கிறோம்; கர்ப்பமும் இல்லை, ஒன்றுமில்லை... நாற்பது நாட்களில் முன்பு ஓரிரு முறைகள் வந்ததுண்டுதானே; அதைப்போல இந்தத் தடவையும் நடந்து விடும் என்று அசட்டுச் சமாதானம் சொல்லிக்கொண்டு அவள் நாட்களைக் கடத்தினது மகா தப்பாகிவிட்டது.

'அம்மாவுக்கு ஒரு வாரமாய் ஜுரம். உதவிக்கு ஆள் இல்லாமல் கஷ்டப்படுகிறேன், உடனே வரவும்' என்று சோதனையாய்ப் புஷ்பாவிடமிருந்து தந்தி வர, மனைவிக்கு என்னமோ ஏதோ என்று அலறிக்கொண்டு தணிகாசலம் அன்றே புத்தூரைப் பார்க்கப் புறப்பட்டார்.

ஒரு வாரமாய் லீவில் சும்மா இருக்க விரும்பாமல் மாமாவுக்கு உதவியாய் இருக்கிறேன் பேர்வழி என்று தணிகாசலத்தோடு தொழிற்சாலைக்குச் சென்று, சில்லறை வேலைகளில் ஒத்தாசை செய்துவிட்டு அவருடனேயே வீட்டுக்கு பாலு திரும்பிவந்தது இந்தச் சந்தர்ப்பத்தில் கைகொடுத்தது.

"ஃபாக்டரி பத்தி வீணாக் கவலைப்படாதீங்க, மாமா... நா பாத்துக்கறேன். நீங்க புறப்பட்டுப் போயி அத்தை, புஷ்பா உடம்பு நிலவரத்தைக் கவனிச்சிட்டு பொறுமையா வாங்க... ஈ, காக்கா எதையும் தூக்கிட்டுப் போயிடாம நா பார்த்துக் கறேன்..."

பாலு தைரியம் கொடுக்க, புதுத் தெம்புடன் தணிகா சலம் புறப்பட்டுப் போனார்.

மூன்று வாரங்கள் போல புத்தூரில் தங்கி ஒரு தினுசாய் புஷ்பாவின் வைத்தியத்தை முடித்துக்கொண்டு கிளம்பியவர்கள் நேராக பம்பாய்க்கு வரமுடியாதபடி

திருவையாற்றில் காந்திமதி வீட்டில் ஒரு விசேஷம் புகுந்து கொண்டது.

காந்திக்கு மூன்று பிள்ளைகளுக்குப் பிறகு நான்கா வதாய்ப் பிறந்தவள் பத்மினி. வயது பதினாறுதான். புஷ்பாவைவிடக் கொஞ்சம் சின்னவள்.

காந்தியின் கணவன் சோமசுந்தரத்தின் அக்காளுக்கு இந்த பத்மினிமேல் ஒரு கண். தன் பிள்ளைக்கு இவளை முடித்து உறவு விட்டுப்போகாமல் காப்பாற்ற வேண்டும் என்ற ஆசை. சின்னஞ்சிறிசாக இருக்கும்போது முடித்து விடுவதுதான் சிறப்பு, உடன்டியாய் நிச்சயதாம்பூலத்தை வைத்துக்கொள்ளலாம், ஆவணியில் கல்யாணத்தை நடத்திவிடலாம் என்று எண்ணம்.

காந்திமதி புருஷனுடன் புத்தூருக்கே நேராக வந்து அக்காவிடம் விவரத்தைச் சொன்னாள்.

"எனக்கு உன்னை விட்டா யாரும் இல்லேக்கா... அத்தானும் நீயும் மூத்தவங்களா வந்து நின்னு தாம்பூலம் மாத்திக்கொடுக்கணும், சொல்லிட்டேன்."

புஷ்பாவுக்கு வைத்தியம் முடிவதற்கும், இந்த அழைப்பு வருவதற்கும் சரியாக இருக்கவே, திருவையாறுக்குப் போய் சிலநாட்கள் தங்கி அந்த விழாவை முடித்துக்கொண்டு ஒரு வழியாய் இவர்கள் பம்பாய்க்கு வந்தபோது, தனத்தின் வயிற்றுப் பிள்ளைக்கு இரண்டரை மாதம் பூர்த்தியாகி விட்டது.

நல்லவேளையாய் மசக்கை, வாந்தி என்று எதுவும் இல்லாமல் இருந்ததால் உடனடியாய் அத்தையிடம் பிடி படாமல் அவள் தப்பித்தாள்.

மாமாவைத் தனியாகப் பார்த்து விவரத்தைச் சொல்லி விட வேண்டும் என்று தனம் பறப்பாய் பறந்தது, முதல் பத்து நாட்களுக்கு தண்டமாயிற்று.

புஷ்பாவைப் பார்க்க வருகிறவர்களும், அவள் சிநேகிதி களுமாய் வீடு ஜகஜகவென்று நிறைந்திருந்ததில் சமையல் கட்டை விட்டு தனத்தால் இந்தண்டை அந்தண்டை போக முடியவில்லை.

தணிகாசலமும் மனைவி வந்துவிட்டதாலோ என்னவோ, முன்னைவிட இன்னும் அதிக ஜாக்கிரதையுடன். தனியாக சமையல்கட்டுக்கு வராமலேயே இருந்ததில், 'உங்க கிட்டப் பேசணும்' என்று ஓரிரு வார்த்தைகளைச் சொல்லு வதுகூட தனத்துக்கு இயலாமலிருந்தது.

ஊரிலிருந்து வந்த அமளிதுமளி கொஞ்சம் அடங்கி மூன்று மாதம் முழுசாய் தாண்டியபிறகு இனியும் தாமதித் தால் முதலுக்கே மோசம் என்று தனம் துணிந்து காரியத்தில் இறங்கினாள்.

"கோதுமை மாவு தீர்ந்திடிச்சு— போய் அரைச்சிட்டு வந்திடறேன்" என்று ஒருநாள் மதியம் இரண்டு மணி அளவில் கிளம்பினவளை சிவகாமி ஏற இறங்கப் பார்த்தாள்.

"இந்த வெயில்லே மாவு அரைக்கப் போகாட்டி என்ன? வெயில் தாழப் போனாப் போதாதா?"

"இப்பப் போனா கூட்டம் கம்மியா இருக்கும் அத்தே, அதான்..."

"தம்பிகிட்டக் கொடுத்தனுப்பேன். நீதான் போகணுமா?"

"அவன் போனா மிஷின்காரன் நல்லா அரைக்க மாட்டேன்கறான், அத்தே... அப்படியே திப்பித்திப்பியா இருக்குது... ரெண்டு தரம் போட்டு அரைக்கணும்..."

"வேகாத வெயில்லே வேகணுமேனு சொன்னேன்... சரி... சரி... போ..."

அதற்கு மேலும் அங்கு நிற்காமல் தூக்குடன் தனம் ஓட்டமாய் ஓடினாள்.

தூக்கை மெஷினில் வைத்தாள்.

"நல்லா நைசா அரைங்க. இதோ வந்திடறேன்" என்று சொல்லிவிட்டு நான்கு கட்டடம் தள்ளி இருந்த பப்ளிக் டெலிபோன் பூத்திடம் ஓடினாள்.

சமயத்துக்கு இருக்கட்டும் என்று சமையல்கட்டுச் சுவரில் பென்சிலால் எழுதி வைத்திருந்த மாமாவின் ஆபீஸ் நம்பரைச் சுழற்றி, அந்தப் பக்கம் குரல் 'ஹலோ' என்றதும் காசைப் போட்டாள்.

மாமா இருக்க வேண்டுமே, இப்போது விட்டால் வேறு எப்போது சந்தர்ப்பம் கிடைக்குமோ என்று பயந்து கொண்டே 'ஹலோ' என்றவளுக்கு, தணிகாசலத்தின் குரலைக் கேட்டதும் சட்டென்று கண்கள் கலங்கிப்போயின.

"ஹலோ..."

"மாமா... நாந்தான்..." மேலே பேச முடியாமல் நாக்கு உலர்ந்துபோயிற்று.

"யாரு? ஹலோ?"

"நாந்தான்... தனம்...."

"தனமா? என்ன விஷயம்? புஷ்பாவுக்கு உடம்பு சுக மில்லையா? என்னாச்சு?" தணிகாசலம் பதறுவது தனத்துக் குப் புரிந்தது.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே, மாமா... வந்து... நா... உங்ககிட்டே... கொஞ்சம் பேசணும்."

இவள் என்னோடு பேச வேண்டுமா?

தணிகாசலத்துக்கு முதலில் வியப்பாக இருந்தது. அப்புறம் பயமாக இருந்தது.

இப்படி மதியம் தனியாய் வந்து போன் செய்து பேசும் அளவுக்கு என்ன அவசரம்?

சின்னவயசுப் பெண்ணாக இருக்கிறாளே என்ற ஆசையில் நெருங்கிப் பழகிவிட்டது வாஸ்தவம்தான். அதற்காக! மனைவி, மகள் வந்த பிற்கும் நான் அப்படியே இருக்க வேண்டும் என்று இவள் எதிர்பார்க்கிறாளா! என்ன பைத்தியக்காரத்தனம்!

எரிச்சல் மனசுள் மண்ட, "என்ன விஷயம்! மளமளனு சொல்லு... வேலை இருக்கு" என்றார்.

"வந்து... நா... மாமா... எனக்கு இப்ப மூணு மாசம்..."

திக்கித் தடுமாறி தனம் பேசி முடிப்பதற்குள், தணிகா சலத்துக்கு குப்பென்று வியர்த்துப்போனது.

எ... என்ன சொல்கிறாள் இவள்?

"ஏய், தனம்... விளையாடறியா?"

"இல்லே மாமா... ஒரு மாசமா நா படற பாடு எனக்குத் தான் தெரியும்... உங்ககிட்டே எப்ப சொல்லுவோம்னு தவிச்சிப்போயிட்டேன், மாமா... எனக்கு ரொம்ப பயமா இருக்கு, மாமா... நா... நா..."

போனிலேயே தனம் விசித்து விசித்து அழ முற்படவும், தணிகாசலம் வெலவெலத்துப்போனார்.

இது என்னடா, புது வம்பு!

ஏதோ அசட்டு சபலத்தில், கிடைத்தவரைக்கும் லாபம் என்று நடந்துகொள்ளப்போக, கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதை ஆகிவிட்டதே! இப்போது என்ன செய்ய வேண்டும்? சிவகாமிக்குத் தெரியாமல் என்ன பண்ண முடியும்! கடவுளே! இது என்ன சோதனை!

தணிகாசலத்தின் மௌனம் தனத்தைக் கலக்கியிருக்க வேண்டும்.

"மாமா... நா... எனக்கு பயமா இருக்கு, மாமா..." என்று கேவிக்கேவிப் பேசினவள், சப்தமில்லாமல் தொடர்ந்து அழுதது தணிகாசலத்தின் கோபத்தை அதிகமாக்கியது. "ச்சீ... சும்மா இரு... இப்ப என்னத்துக்காக இப்படி நீலித்தனம் பண்றே... ஆனது ஆய்ப்போச்சு... இதைச் சமாளிக்க வழி என்னான்னு யோசிக்காம அழுதா ஆச்சா?" என்று அதட்டவும், தனம் கஷ்டப்பட்டுத் தன் அழுகையை நிறுத்தினாள்.

"இந்த விஷயம் யாருக்காவது தெரியுமா?"

"தெரியாது மாமா..."

"பாலுவுக்கு?"

"அவனுக்குக் கூடத்தான்."

"ம், இப்ப எத்தனாவது மாசம்?"

"மூணு முடிஞ்சிட்டது, மாமா..."

"சரி... போனை வெச்சிட்டு நீ வீட்டுக்குப் போ. நா தெரிஞ்ச டாக்டர்கிட்டேயிருந்து மருந்து வாங்கிட்டுவரேன். இதப்பாரு... ஏதாவது மாமாலம் பண்ணி அத்தைக்கு விஷயத்தைப் புரிய வெச்சிட்டின்னா; நா பொல்லாதவனா யிடுவேன்! நினைப்பு வெச்சிக்க, என்ன?"

மேற்கொண்டு எதுவும் பேசாமல் ரிஸீவரை வைத்த தணிகாசலம், உடம்பில் பெருகிய வேர்வையைத் துடைத்துக் கொண்டார். இப்போது என்ன செய்வது, என்ன செய்வது என்று சிந்தித்தவருக்கு தன் மேலேயே கோபம் எழுந்தது.

அது என்ன அத்தனை அசட்டுத்தனம்? முன்பின் யோசனை பண்ணாமல் அது என்ன சபலம்?

சனியன்...

அப்படித் தப்புப் பண்ணத் துணிந்தபிறகு ஜாக்கிரதை யாக இருக்கவேண்டும் என்ற எண்ணமாவது தோன்றி இருக்கவேண்டாம்?

எத்தனை வழிகள் இல்லை? அது என்ன இப்படியொரு வடிகட்டின முட்டாள்தனம்!

சிவகாமிக்குப் பத்து வருடங்கள் பிள்ளை உண்டாக வில்லை என்ற தைரியமா? அப்புறம் பிறக்கவில்லையே என்ற துணிச்சலா?

ச்சே, என்ன மடத்தனம்...

யாரிடம் போவது, என்னவென்று கேட்பது?

அரைமணி போல எண்ணென்னவோ நினைத்துக் குழம்பியவர் பர்ஸுடன் எழுந்து வெளியில் போனார்.

எங்கோ எப்போதோ எந்தச் சாலையிலோ பார்த்த பெயர்ப்பலகையை ஞாபகம் வைத்துக்கொண்டு அந்த பெண் மருத்துவரைத் தேடிச் சென்றார்.

மனைவி, ஏழாவது குழந்தை, அது இது என்று பொய் சொன்னார். அவர் எழுதிக் கொடுத்த மாத்திரையுடன் வீட்டுக்கு வந்தார்.

எல்லோரும் முன் ஹாலில் இருந்த சமயத்தில் சமையல் கட்டுக்கு ஓடி, பொட்டலத்தை தனத்தின் கையில் திணித்தார்.

"காலைல ரெண்டு, மாலைல ரெண்டு, மூணு நாள்லே விவரம் சொல்லு" என்று கிசுகிசுத்துவிட்டுத் திரும்ப வேகமாகக் கூடத்துக்கு வந்துவிட்டார்.

நான்கு நாளாகியும் தனம் ரகசியமாய் உதட்டைப் பிதுக்க, அவர் திரும்ப டாக்டரிடம் போய் நின்றார்.

இந்த முறை இன்னும் கொஞ்சம் ஸ்ட்ராங் டோஸ்.

ம்ஹூம்— பெப்பேதான்.

"மாத்திரைக்குக் கேக்காது... ஊசி போட்டாத்தான் கொஞ்சமாவது பலன் இருக்கும்னு நா சொல்றதைக்

காதுலே வாங்காம, பலனில்லே, பலனில்லேன்னு ஏன் தவிக்கறீங்க?" என்று டாக்டர் சொல்லிவிட, என்ன செய்வது என்று புரியாமல் தணிகாசலம் விழித்துக்கொண்டு நின்ற நாளில், தனம் சரியாய் அத்தையிடம் மாட்டிக்கொண்டாள்.

ஒரு வாரமாகவே சிவகாமிக்குச் சந்தேகம்தான்.

பூசினமாதிரி இருக்கிறாள், முகத்தில் ஒரு பளபளப்பு... ம்?

ஊறுகாயை வழித்துத் தின்கிறாள். காலையில் காபி வேண்டாம் என்கிறாள்... ம்?

மதியம் சோர்ந்து படுத்துத் தூங்குகிறாள்... குளித்து எத்தனை நாளாயிற்று என்றால் பேந்தப்பேந்த விழிக் கிறாள்... ம்?

என்ன சமாச்சாரம்?

அன்று மதியம் புஷ்பா உறங்குகையில் சிவகாமி சமையல்கட்டுக்குள் வந்தாள்.

அத்தை பின்னால் வந்து நிற்பதை உணராமல் பொங்கி எழுந்த வாந்தியை ஓசைப்படாமல் அடக்குவதில் தனம் முனைந்திருந்த நிமிஷம், அவள் குட்டு வெளிப்பட்டது.

"என்னடி... என்ன விஷயம்?"

அதட்டலாய் சிவகாமி கேட்கவும் தனம் அதிர்ந்து போனாள்.

"ஓ! ஒண்ணுமில்லே அத்தே... ரெண்டு நாளா ஜுரமா இருக்குது... அதான்..."

"ஜுரமா?" சிவகாமி கண்களை இடுக்கிக்கொண்டாள். "வர்றியா? டாக்டர் கிட்டப் போய்வரலாம்?"

"வேணாம்... இதுக்குப் போய் எதுக்கு டாக்டர்? பித்தம் தான்..."

"ஜுரம்ன்றே, பித்தம்ன்றே... என்னடீ சொல்றே? ம்? ஏண்டி வாந்தி எடுக்கறே? ஏண்டி என்னமோ பேயப்பாத்த மாதிரி பதர்றே! என்ன விஷயம்?"

அத்தைக்கு சந்தேகம் வந்துவிட்டது புரிய, பயத்தில் அப்படியே குந்தி உட்கார்ந்த தனத்தால் அழுகையை அடக்கத் தெரியாமல்போயிற்று.

அந்த அழுகையும், அந்தப் பதட்டமும் தெள்ளென விவரத்தை எடுத்துச் சொல்ல, சிவகாமி பத்ரகாளியாக மாறினாள்.

"என்னடீ விஷயம்? வாய்ல என்ன கொழுக்கட்டையா... சொல்லித் தொலையேண்டி... ஏய் சனியனே... உடம்பையும், மொகத்தையும் பார்த்தா எப்படியோ இருக்குதேடீ... நா சந்தேகப்படறதுதானா?"

தோளை அழுந்தப் பற்றி, சிவகாமி உலுக்கியதில் தனத்தின் கேவல் பெரிதாயிற்று.

"அடிப்பாவி! மூதேவி... குலத்தைக் கெடுக்க வந்த நாசகாரி..."

"ஒரு பொம்பளைக்கு இப்படிக்கூடவா உடம்பு திமிரெடுத்து அலையும்? எம் மானத்தைக் கப்பலேத்திட்டியேடி, பழிகாரி!"

"எவன்டீ அவன்? சொல்லு... அவனையும் வெட்டிப் போட்டுட்டு, உன்னையும் ரெண்டா கிழிச்சிப் போட்டுடறேன்! தரித்திரம் பிடிச்ச நாயே..."

இன்னும் என்னென்னவோ சொல்லி அடித்தொண்டையில் உறுமினாள். அழுதாள். புலம்பினாள்.

எதற்கும் வாயைத் திறக்காமல் தனம் குந்தி உட்கார்ந்து அழ, கோபம் தாளாமல் அவள் முடியைப் பிடித்து உலுக்கி எழுப்பினாள். முதுகிலும், கன்னத்திலும் அறைந்தாள்.

"ஒழி... ஒழிஞ்சிபோ!" என்று ஏசினாள்.

புஷ்பா வந்து தாயைத் தடுத்திராவிட்டால் அன்று தனத்தை சிவகாமி உண்டு இல்லை என்று ஆக்கி யிருப்பாள்.

வெளியே போயிருந்த பாலு வந்ததும் விஷயம் தெரிந்து அதிர்ந்துபோனான்.

ஒரு வார்த்தை பேசாமல் நின்று, 'நிஜமாகவா? இல்லை இது பொய்தானேக்கா? நீயாக்கா இப்படி? இல்லை— நான் நம்ப மாட்டேன்'— என்கிற பார்வை ஒன்றை அக்கா மீது வீசிவிட்டு வந்த வேகத்திலேயே திரும்பிப் போய்விட்டான்.

தணிகாசலம் வந்தார்.

தன்னைப்பற்றி தனம் இன்னும் வாயைத் திறந்து எதுவும் சொல்லவில்லை என்பது புரிய, தன் வரைக்கும் தற்காலிக நிம்மதி அடைந்தார்.

"என் மானம் போச்சுங்க... காலனி பூரா விவரம் தெரிஞ்சுதுன்னா நா நாக்கைப் பிடுங்கிட்டுச் செத்துடுவேன்! அதுக்கு முன்னால ஏதாச்சும் பண்ணணும்... இந்தப் பழிகாரி என்னை மோசம்பண்ணிட்டாளே... நா என்ன பண்ணு வேன்? யாருனு கேட்டா வாயைத் திறக்க மாட்டேங்கறாளே... அந்த நாசகாரப் பாவி நல்லா இருப்பானா? ஒருத்தன்தானா இல்லை எத்தனை பேரோ? தெரியலையே... இவ தெரு நாய்ங்க... நா மோசம்போயிட்டேன்... அமுக்கா இருக்கறதைப் பாருங்க... ஓடுகாலி... மூதேவி..."

சிவகாமியின் ஆங்காரம் குறைகிற வழியாய்த் தெரியாத தால், ஆம்பிளையாய் லட்சணமாய், "சரி... சரி... போனதைப் பத்தி என்ன புலம்பல்? மேற்கொண்டு ஆவறதை யோசி" என்று அவர் கூறவும், அதைப்பற்றி சிவகாமி யோசிக்க முற்பட்டாள்.

அன்றிரவு சிவகாமி பாத்ரூமிலும், புஷ்பா முன்னறை யிலும், பாலு வெளியிலும் இருக்கையில் தணிகாசலம் சமையலறைக்குள் வந்தார். தனத்தின் இரண்டு கைகளையும் தாங்கிப் பிடித்தார். கண்கள் கலங்கக் கெஞ்சினார்.

"அத்தை திட்டுறானு நீ உண்மையைச் சொல்லிடாதே, தனம்... இதுக்குக் காரணம் நாந்தான்ற விஷயத்தை நீ சொல்லிட்டா நா உயிரோட இருக்கமாட்டேன்... சத்தியமா தூக்கிலே தொங்கிடுவேன்! உன் கால்லே விழறேன்! என்னை மன்னிச்சுடு... தெரியாம தப்பு பண்ணிட்டேன்... என்னைக் காட்டிக்கொடுக்காதே... உன்னையும் உன் தம்பி யையும் வளர்த்ததுக்கு இந்த உதவி பண்ணு, தனம்..."

அவசரமாய், சின்னக் குரலில் பேசினவர் சட்டென்று குனிந்து தனத்தின் கால்களைத் தொட்டுக் கும்பிட்டார். உடனே திரும்பிப் போய்விட்டார்.

மறுநாள் காலையில் சிவகாமி காரியத்தில இறங்கினாள்.

காதும்காதும் வைத்த மாதிரி விஷயத்தை முடிக்க வேண்டும் என்று விரும்பியவள், எப்படியோ விசாரித்து ஸயானில் இருந்த க்ளினிக்குக்கு தனத்தை அழைத்துப் போனாள்.

டாக்டருக்காகக் காத்திருந்தபோது "ஹலோ ஆன்ட்டி, என்ன இந்தப் பக்கம்?" என்று குரல் கேட்க, திரும்பினாள்.

டாக்டர் நளினி. அவளுடைய காலனியில் வசிக்கும் பெண். அடக் கஷ்டகாலமே! இந்த க்ளினிக்கிலா இவள் வேலை பார்க்கிறாள்! இவளுக்கு விஷயம் தெரிந்தால் காலனிக்கே தெரிந்துவிடாதா? ஐயோ— அவமானமே!

சிவகாமி உடனடியாய் சமாளித்தாள்.

"ஒண்ணுமில்லே... கிறுகிறுனு வந்திச்சி— அதான் செக்அப்புக்கு வந்தேன்..."

"வீட்டுக்குச் சொல்லி அனுப்பினா, நா அங்கேயே வந்திருப்பேனே– ஏன் வீணா அலையறீங்க?" என்றபடி நளினி சிவகாமியைப் பரிசோதித்தாள்.

"ஜஸ்ட் வீக்னஸ் ஆன்ட்டி– நத்திங் டு வொர்ரி" என்று சொல்லி மருந்து எழுதிக்கொடுத்த பிறகு அவளிடம் சொல்லிக்கொண்டு இவர்கள் வெளியில் வந்தார்கள்.

மறுநாள் மாட்டுங்காவில் ஒரு கிளினிக்குக்குப் போனார்கள்.

பார்ஸி டாக்டரம்மா.

"அபார்ஷனா?" என்று உதட்டைப் பிதுக்கினவள், "ஐம் ஸாரி– நா அதையெல்லாம் செய்யறதில்லே. இது ரொம்ப தப்பான செயல்– அதுவும் நாலு மாசம் ஆனபிறகு இப்படிப் பண்ணறது, தாய் உயிருக்கே ஆபத்தா முடியும்... என்னால கண்டிப்பா முடியாது" என்று மறுத்து, புத்திமதி சொல்லி அனுப்பினாள்.

ரொம்ப கஷ்டப்பட்டு விசாரித்ததில் இன்னொரு விலாசம் கிடைத்தது, போனார்கள்.

கீக்கிடமான இடம். பார்வைக்கு ஆஸ்பத்திரி மாதிரியே இல்லை. காமாசோமா என்று ஏதோ நடக்கும் இடம் என்பதை ஒரே பார்வையில் புரிந்துகொள்ள முடிந்தது.

டாக்டரம்மா பார்க்க நர்ஸ் மாதிரி இருந்தாள்.

ஆயிரம் ரூபாய் என்று கறாராய் ரேட் பேசினாள். காலையில் வந்து சாயங்காலம் போய்விடலாம் என்றாள்.

இவர்கள் பேசிக்கொண்டிருக்கையிலேயே வெள்ளைப் போர்வையால் ஒரு உடலைப் போர்த்தி ஸ்ட்ரெச்சரில் எடுத்துச் சென்று வாசலில் நின்ற டாக்ஸியில் சிலர் ஏற்றியதைப் பார்த்த சிவகாமி, பார்ஸி டாக்டரம்மா கூறினது

நினைவில் முரசம் கொட்ட, நடுங்கிப்போனாள். "நாளைக்குப் பணத்தோட வர்றோம்" என்று சொல்லிவிட்டு நைஸாகக் கிளம்பி தனத்துடன் வீட்டைப் பார்க்க வந்து சேர்ந்தாள்.

"இவளை வெச்சிகிட்டு நா என்னா பண்ணுவேன்? கண்டவகிட்ட கொண்டுவிட்டு இவ உசிருக்கு ஏதாச்சும் ஆயிடிச்சின்னா, என்னை இல்லே ஊர் கொலைகாரினு சொல்லும்? ஆளு யாருன்னு சொன்னாலும் அவனுக்கே இவளைக் கட்டி வெச்சிடலாம்னா, எதுவும் பேசாம இப்படிக் கல்லுளிமங்கத்தனம் பண்றாளே..."

அழுது, புலம்பி, அரற்றித் தவித்து மேற்கொண்டு இரண்டு நாட்களைக் கழித்த பின் சிவகாமி கொஞ்சம் சமாதானம் அடைந்தாள்.

'இவ தலையெழுத்து இப்படி இருந்தா அதுக்காக நாம ஏன் கிடந்து தவிக்கணும்?' என்று நினைத்தவள், ஃபாக்டரிக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்த கணவனை அழைத்தாள். ஒரு முடிவுக்கு வந்துவிட்ட தினுசில் தங்கை காந்திமதியை உடனே வரச்சொல்லி ஒரு தந்தி அடிக்கச் சொன்னாள். அப்புறம் இதுகுறித்து யாரிடமும் எதுவும் பேசாமல் தங்கையின் வரவுக்காகக் காத்திருந்தாள்.

* * *

தந்தி அடித்த இரண்டாம் நாள் காலை, என்னவோ ஏதோ என்று அலறிப்புடைத்துக்கொண்டு கணவனுடன் பம்பாய் வந்து சேர்ந்த காந்திமதிக்கு, முழுசாய் அக்கா, அத்தான், புஷ்பாவைப் பார்த்த பிறகு அம்மாடி என்றிருந்தது.

"ஒரு நாள்ல கதிகலங்க அடிச்சிட்டியேக்கா... உனக்கோ, புஷ்பாவுக்கோ ஏதோ அசம்பாவிதம் ஆயிடிச்சுன்னு நா

பதறினது எனக்கில்லே தெரியும்! ஆமா, உடம்புக்கு ஏதாவதாக்கா? ஏன் இப்படி இளைச்சிப்போயிட்டே? முகமும், கண்ணும் டொக்கு விழுந்து கிடக்கே... என்னக்கா சேதி? அத்தான் ஃபாக்டரி ஒழுங்கா நடக்குதுதானே? புஷ்பாவுக்கும் ஒண்ணும் இல்லேதானே? சொல்லுக்கா..."

படி ஏறி உள்ளே வந்து அருகில் அமர்ந்து புலம்பின வளின் கையைப் பிடித்து சிவகாமி உள்ளறைக்கு அழைத்துச் சென்றாள். கதவைச் சாத்தித் தாள்போட்டாள்.

"குடி முழுகித்தான் போயிடிச்சு, காந்தி... என் மானம் மரியாதை எல்லாம் கப்பல் ஏறிப் போயிடிச்சும்மா... நா மோசம் போயிட்டேண்டி..."

சத்தம் அதிகமாய் வெளியில் கேட்காதிருக்கவேண்டி புடவைத் தலைப்பை வாயில் திணித்துக்கொண்டு அழுதவளின் கண்களில் மாலைமாலையாய் ஜலம்.

"என்னக்கா? என்னவோ பெரியபெரிய வார்த்தையா சொல்றே...?"

"பெரிசுதாண்டி காந்தி... என் தலைல கல்லைத் தூக்கிப் போட்டுட்டாளே... மகாபாவி... நா என்னா பண்ணுவேன்?"

மூக்கைச் சிந்திப் பெரிசாய் அழுதுவிட்டு, 'பட்பட்' டென்று தலையில் அறைந்துகொண்டாள் சிவகாமி.

"கல்லத் தூக்கிப் போட்டுட்டாளா? யாரு? விவரம் சொல்லுக்கா..."

"விவரத்தை எப்படிம்மா சொல்லுவேன்? நா கூசுதே! பெத்த மகளுக்குக் கால் விளங்காமப் போயிடக் கூடாதேன்னு அன்னிய ஊருக்கு ஓடி, நாய் பட்டபாடு பட்டு, அலையா அலைஞ்சு, ஊர் திரும்பறதுக்குள்ள என் மானம் பறிபோயிடிச்சே, காந்தி... என்னா பண்ணுவேன்?"

"புஷ்பாவுக்குதான் இப்ப கால் தேவலியேக்கா... முன்னே மாதிரி படுக்கையோட படுக்கையாக் கிடக்காம, விந்திவிந்தியாவது நடக்கறா, இல்லே... அப்புறம் என்ன? நாளடைவிலே அதுவும் சரியாகலாம்னுதானே டாக்டர் சொல்லியிருக்காரு... இத்தனையத் தாங்கிக்கிட்ட நீ, இப்பப் போயி மனசு உடைஞ்சுபோகலாமா? ம்?"

"ஐயே— காந்தி... நா சொல்றது, உனக்கு விளங்கலியே... புஷ்பா தங்கம்டீ... சொக்கத்தங்கம்... அதப்பத்தி மட்டமா பேசினா என் நாக்கு அழுகிடும்! அவ இல்லடிம்மா... அநாதையா நின்ன பசங்களுக்கு நம்மைவிட்டா யார் கதினு அணைச்சிக்கிட்டேனே, அதுக்குப் பரிசு கிடைச்சுப் போச்சும்மா, காந்தி... இனி எந்த மொகத்தோட ஊரார் நடுவிலே நடமாடுவேண்டி?"

காந்திமதியால் இப்போது விவரத்தை லேசாக ஊகிக்க முடிந்தது.

"பாலு பெயில் ஆகிட்டானாக்கா? ஏதாவது தப்புத் தண்டா பண்ணிட்டானா?"

"ஐயோ, அந்தப் புள்ளைய ஒண்ணும் சொல்லாதடீ! அதுக்கு என்ன தெரியும், பாவம்... இவதான் காந்தி, என் தலைல பெரிசா கல்லைத் தூக்கிப் போட்டுட்டா... ஊமைக் கோட்டானாட்டம் இருந்துக்கிட்டு ஊரை ஏமாத்திட்டாடிம்மா... நா என்னா பண்ணுவேன்?"

யார்? தனமா? கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டாளா?

விவரத்தை தெளிவாகச் சொல்லாமல் சிவகாமி அழவும், காந்திமதிக்கு எரிச்சல் மண்டியது.

"யாரு, என்னா பண்ணாங்கனு விளக்காம, அழுதுகிட்டே இருந்தா என்னக்கா புரியும்?"

சிவந்த கண்களால் தங்கையை சிவகாமி வெறித்துப் பார்த்தாள்.

"புரியலியாடி காந்தி... அந்த மூதேவிக்கு இப்ப வயத்துலே நாலு மாசம்டீ! இதவிட மானக்கேடு வேற வேணுமா?"

என்ன! தனம் கர்ப்பமா?

அதுவும் நான்கு மாதமா?

"என்னக்கா சொல்றே?"

பதில் சொல்லாமல் தான் கூறினது நிஜம் என்கிற தினுசில் தலையை ஆட்டிவிட்டு சிவகாமி தொடர்ந்து விசும்பினாள், தலையில் அடித்துக்கொண்டாள். 'ஐயோ ஐயோ' என்று அரற்றினாள்.

"அவன் யாருக்கா?"

"சொல்ல மாட்டேங்கறாளே பழிகாரி... கெஞ்சிட்டேன், அதட்டிட்டேன்; அறைஞ்சிட்டேன். ஒண்ணுத்துக்கும் மசிய மாட்டேன்றாளே... நா என்ன பண்ணுவேன், காந்தி...ஈ..."

இரண்டு நிமிடங்கள் போல காந்திமதி அதிர்ந்துபோய் உட்கார்ந்தாள். அப்புறம், "இப்ப என்னக்கா பண்ணப் போறே?" என்றாள்.

"பத்து நாளா இதே சுவலைதான், காந்தி... மனசுக் குள்ளியே மருகிமருகி நா செத்துப் பிழைக்கறது அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும்! வயசுக்கு வந்த பொண்ணு புஷ்பா, ரெண்டுங்கெட்டான் பாலு... இவங்களை வெச்சிக் கிட்டு நா என்ன பேசுவேன், என்ன பண்ணுவேன்? எல்லாம் என் போறாத வேளை, காந்தி... பழிகாரி-- கடங்காரி..."

காந்திமதி எழுந்து அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்தாள். யோசிக்க முடியாமல் படபடப்பாக இருக்க, திரும்ப அக்காவை நெருங்கி அமர்ந்தாள்.

"சரி நடந்தது நடந்திடுச்சு... அவன் யாருனு நா அவகிட்டக் கேட்டுப் பார்க்கிறேன். விவரம் சொன்னா,

அவனுக்கே அவளை முடிச்சிட வழி பண்ணிப் பார்க் கலாம்... இல்லைன்னா வந்து... ஏங்க்கா பம்பாய் பெரிய ஊராச்சே, இங்கே டாக்டரம்மா வசதி இல்லாமலா இருக்கும்?"

'இது நீ சொல்லித்தான் எனக்குத் தெரிய வேண்டுமா' என்பதுபோல சிவகாமி தங்கையை ஏறிட்டுப் பார்த்தாள்.

"பத்து நாளா எனக்கு என்ன வேலைனு நினைச்சே? நாலு டாக்டரம்மாவைப் பாத்திட்டேன். ஐநூறைக் கொண்டா, ஆயிரத்தைக் கொண்டானு சொல்றவளை எல்லாம் நம்பி காரியத்துலே எறங்க பயமா இருக்கு... பெரிய டாக்டரம்மாவானா, நாலு மாசத்துக்கு மேல கலைக்கறது தாய் உசிருக்கு ஆபத்து, வேணாங்கறாங்க.. வேற யார் கிட்டயாவது போகலாம்னா எனக்கு யாரண்டை கேக்கறது, எப்படி விசாரிக்கறதுன்னு புரியலை. இத்தினி வருஷம் கௌரவமா இந்தக் காலனிலே வாழ்ந்திட்டோம். இப்ப இவளால பெரிசா தலைக்குனிவு உண்டாயிடுமோனு திகிலா இருக்கு. துணிஞ்சி இறங்கலாம்னா பெரிய டாக்டரம்மா சொன்ன மாதிரி ஏதாவது ஏடாகூடமா ஆயிப் போச்சுன்னா பழி என் மேலயில்லே வரும், காந்தி? ஏழு வருஷமா பெத்த தாயாட்டம் கவனிச்சதை ஊரார் மறந் திடுவாங்க... பெத்தவ இல்லே... அதான் பொண்ணை அநியாயமா வாரிக்கொடுத்திட்டாம்பாங்க... சொந்த மகளானா இப்படி விட்டுடுவாளான்னு பேசுவாங்க... கண்டபடி ஏசுவாங்க... அதனாலே..."

"அதனாலே?"

சிவகாமி அரை நிமிஷம் தயங்கினாள்.

"சொல்லுக்கா..."

"இனிமே இவளை இங்க வெச்சிக்கறது நல்லதுக்கு இல்லே... நீ இவளை உன்கூடக் கூட்டிட்டுப் போயிடு... அங்க

நாட்டுமருந்து கொடுப்பியோ, என்ன வைத்தியம் பாப்பியோ, எனக்குத் தெரியாது... கொஞ்ச நாளைக்கு இவளை என் கண்ணுலே காட்டாம இட்டுக்கிட்டுப் போயிடு... உனக்குக் கோடி புண்ணியமாகும்..."

ஓ? என் தலையில் தனத்தைக் கட்டத்தான் இத்தனை அவசரமாய் தந்தி அடித்து வரவழைத்தாளா?

காந்திக்கு சுருக்கென்று கோபம் தலைதூக்கியது.

"ஆங்? அது எப்படிக்கா? எனக்கு மட்டும் வீடு வாசல் இல்லியா? குழந்தை குட்டிங்க இல்லியா? திடும்னு இந்தக் கூறுகெட்டவளைக் கூட்டிட்டுப் போஹன்னா, அது நடக்கற காரியமா? நாங்க இருக்கறது பெரிய பட்டணம்கூட இல்லே... விவரம் வெளில போனா எங்களுக்கில்லே அசிங்கம்?"

படபடப்பாகப் பேசிய தங்கையின் கையைப் பற்றி சிவகாமி தன் அருகில் இருத்திக்கொண்டாள்.

"இப்ப நா என்ன சொல்லிட்டேன்னு நீ இப்படிப் பதட்டமா பேசறே? இத்தினி வருஷமா நா இவங்களைக் காப்பாத்தலயா? உனக்கு மட்டும் இவங்களுக்குச் செய்ய பாத்தியதை இல்லியா... இவளுக்..."

சிவகாமியை முடிக்கவிடாமல் காந்திமதி குறுக்கிட்டாள்.

"பாத்தியதை, பொறுப்புன்றதையெல்லாம் நாம அன்னிக்கே தெளிவா பேசிக்கிட்டம்க்கா... நீ புதுசா இந்தப் பேச்ச எடுக்கறது நல்லாயில்லே... ஆமா..."

"நா என்ன சொல்லவரேன்னு புரிஞ்சிக்காம நீ வார்த்தைகளைக் கொட்டறது நல்லாயில்லே, காந்தி... பொறுமையா கேளேன். பத்மினி கல்யாணத்துக்கு கைலே பத்தாயிரம் கொடுனு உன் நாத்தி கேட்கறானு சொன்னே இல்லே? உன் சக்திக்கு அது ரொம்ப ஜாஸ்தினும் சொன்னே

இல்லே? அந்தப் பணத்தை நாம்ப தரலாம்னு அத்தான் சொல்றாரு..."

காந்திமதி அக்காவை ஊன்றிப் பார்த்தாள்.

"நிச்சயதாம்பூலத்துக்கு வந்தப்ப கேட்டதுக்கு, இப்ப என்னால முடியாதுன்னியே!"

"ஆமா— அப்ப அப்படிச் சொன்னேன். இப்ப இப்படிச் சொல்றேன்..."

"அப்ப நா உன்னண்டை கடனா கேட்டேங்க்கா..."

"இப்ப நாம சும்மா தரலாம்னு அத்தான் சொல்றார், காந்தி..."

அடேயப்பா! பத்தாயிரம் லட்டுபோல இனாமாக வருகிறதா?

தங்கையின் மனம் இளிக்கத் தொடங்கிவிட்டது என்பது புரிந்த தினுசில் சிவகாமி மெள்ளப் பேசினாள்.

"அப்படி திடும்னு காரணமில்லாம உன்னை நா வர வழைப்பேனா, காந்தி? இல்லே யோசிக்காம பொறுப்பைத் தான் உன்னண்டை தள்ளிவிடுவேனா? இந்தக் காரியத்துலே நீ சம்பந்தப்படறதுக்கு முன்னால உனக்கு இதனால என்ன ஆதாயம்னு யோசிக்காம நா செயல்படலை. நினைப்புல வெச்சிக்க..."

"....."

"கெடுத்தவன் யாருனு இந்தக் கடங்காரி சொல்லுவானு எனக்குத் தோணலை. ஒருத்தனோ, இல்லை, எத்தனை பேரோ! அசிங்கம்! நீ முயற்சி பண்ணிப் பாக்கணும்னா தாராளமா செய், நா தடுக்க மாட்டேன்..."

காந்திமதி எழுந்தாள். ஜன்னலிடம் சென்று கம்பியைப் பிடித்துக்கொண்டு நின்றாள்.

"ஊருக்கு அழைச்சிட்டுப் போயி இவளை என்ன பண்ணனுன்றே?"

"அதான் சொன்னேனே... வைத்தியம் பார்க்க விருப்பம்னா பாரு– இல்லாட்டா ஆறு மாசம் போல உன் வீட்டுலே அவளை வெச்சிக்க... பிள்ளைப்பேறு ஆகட்டும்... அப்புறம் என்ன பண்ணறதுன்னு யோசிக்கலாம்..."

"ஊர் ஜனங்ககிட்ட என்னனு சொல்றது?"

"அதையும் நா யோசிச்சிப் பாத்திட்டேன். பேசாம ஒரு மஞ்சக் கயித்தை கழுத்துலே கட்டிடலாம்... வம்பு இல்லே! மாப்பிள்ளை ராணுவத்திலே இருக்கார்னு சொல்லிடலாம்... திடீர்னு நடந்திட்ட கல்யாணம், அதனால யாருக்கும் விவரமா முன்கூட்டியே சொல்ல முடியலை... இப்படி ஏதாவது சொல்லிச் சமாளிச்சுடலாம்..."

"பிள்ளை பெத்த பிறகு கண்டிப்பா நீ இவளுக்கு ஒரு வழி பண்ணிடுவியா?"

"நம்ப அம்மா மேல ஆணையா செய்யறேன். நீ கவலைப்படவேணாம்..."

"அப்ப, ஒரு ஆறு ஏழு மாசம் மட்டும் இவ பொறுப்பை நா எடுத்திட்டாப் போதும்னு நீ சொல்றே?"

"ஆமா..."

அக்கா சொன்ன பேச்சைக் காப்பாத்துவாள் என்ற தைரியம் எழ, காந்திமதி கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்து கணவனை அறைக்குள் அழைத்துவந்தாள்.

சோமசுந்தரம் பிரமித்து நிற்க, ஒவ்வொன்றாக அத்தனையும் கூறினாள்.

"எங்கக்கா சொன்ன பேச்சைத் தட்டமாட்டா. அவ வாக்கு சுத்தமானது. இந்தச் சமயத்திலே நாம அவளுக்கு

உதவணும்னுதான் நானும் நினைக்கிறேன்" என்றதும் சோமசுந்தரம் சிவகாமி பக்கம் திரும்பினான்.

"என்னங்க இதெல்லாம்?"

"அதான் காந்தி விவரமா சொல்லிட்டாளே... ஏதோ எங்க போறாத காலம், படறோம்... உடனடியா நீங்க இவளைக் கூட்டிக்கிட்டு போயிட்டீங்கன்னா, அதுவே எனக்குப் பெரிய உதவி..."

"அது சரி... வந்து..."

"எதுக்கும் நீங்க கவலைப்பட வேணாம். இப்ப பத்தாயிரம் வாங்கிக்கிட்டு போய் பத்மினி கல்யாணத்தை நல்லவிதமா முடிங்க. அப்புறம் பிரசவம் அது, இதுனு செலவு இருந்திச்சின்னா நா என்னால முடிஞ்ச அளவு ஆயிரமோ, ரெண்டாயிரமோ அனுப்பிடறேன்..."

பேச்சு அன்று அதோடு முடிந்தது.

மதியம் பூராவும் தனியாய் சமையல்கட்டில் தனத்துடன் பேச்சுக்கொடுத்தும் அவள் வாய் திறந்து ஒரு வார்த்தை கூட ஏதும் பேசாமல் அழுதுகொண்டே உட்கார்ந்திருந்தது ஆத்திரத்தை உண்டாக்க, தன் பங்குக்கு முதுகில் குத்தி, தலையில் குட்டி, தொடையை அழுந்தக் கிள்ளி தன் வேகத்தை காந்திமதி தணித்துக்கொண்டாள்.

அன்று மாலையே அக்காவும் தங்கையுமாய் அரை பவுனில் ஒரு திருமாங்கல்யம் வாங்கிவந்து மஞ்சள் கயிற்றில் கோத்து தனத்தின் கழுத்தில் கட்டினார்கள்.

மறுநாள் வண்டியில் கிளம்பிவிட்டார்கள்.

ஸ்டேஷனுக்கு பாலு வந்திருந்தான்.

வண்டி புறப்படும் சமயத்தில் தனத்தின் கையை ஒரு நிமிஷம் அழுந்தப் பற்றிக்கொண்டவனின் கண்கள்

'இப்பவாவது என்ன நடந்தது, யார் காரணம்னு சொல்ல மாட்டியாக்கா?' என்று கெஞ்சியது புரிய, தனம் சன்னக் குரலில் பேசினாள்:

"எல்லாத்தையும் உன்னை உக்கார வெச்சு ஒருநாள் சொல்றேன், தம்பி... நீ வீணா மனசை இப்ப குழப்பிக்காதே— நல்லா படி... பட்டம் வாங்கு... அதான் இப்ப முக்கியம்... விவரத்தைச் சொல்லி உன்னை சங்கடத்துலே ஆழ்த்த நா விரும்பலை... தயவு பண்ணி புரிஞ்சிக்கடா..."

அதற்குமேல் தனத்தால் கோர்வையாகப் பேச இயல வில்லை.

அவள் துக்கம் புரிந்த மாதிரி பாலு கையைத் தடவிக் கொடுத்தான்.

"நீ எதுக்கும் கவலைப்படாதக்கா... இன்னும் எட்டு மாசம்... அப்புறம் என் படிப்பு முடிஞ்சிடும்... நா இருக்கேன்... தைரியமா போயிட்டு வாக்கா..."

ரயில் கிளம்பிவிட்டது.

தம்பி பார்வையை விட்டு மறைந்த பிறகு தனம் கண்களை மூடிக்கொண்டாள்.

கடைசியாய் பாலு சொன்ன வார்த்தைகள் புண்பட்ட நெஞ்சுக்கு ரொம்ப இதமாக இருப்பதை உணர்ந்தபோது, சந்தோஷத்தில் கண்ணோரத்தில் நீர் பொங்கி கன்னத்தில் கோடாக வழிந்தது.

* * *

மாலைக் காற்று உடம்புக்கு இதமாக இருந்தது.

காவேரி ரொம்ப ஜில்லிப்பும் இல்லாமல் ரொம்ப சூடும் இல்லாமல் வெதுவெதுப்பாய் இருந்தாள்.

மண் போட்டு பித்தளைக் குடத்தை அழுந்த பளபள வென்று தேய்த்துக் கவிழ்த்த பின், அப்படியே கால்களை தண்ணீரில் அளைந்தவாறே கடைசிப் படிக்கட்டில் தனம் உட்கார்ந்தாள்.

அஸ்தமனச் சூரியன் ஒரு பக்கமாய் ஆரஞ்சு நிறத்தை வாரியிறைத்திருந்ததைத் தவிர, பாக்கி வானம் மஞ்சளும், சாம்பல் நிறமுமாய் இருந்தது.

நாரைகள் கூட்டமாய் தலைக்கு மேலே பறந்துபோயின.

நீலமும், ப்ரவுனுமாய் சட்டை அணிந்து, ரொம்ப நேரத்துக்கு தாழ்ந்திருந்த மரக்கிளையில் மோனத்தில் ஆழ்ந்திருந்த மீன்கொத்தி ஒன்று, நிஷ்டை கலைந்து, ஆற்றின் மேல்பரப்பில் டைவ் அடித்து, ஒரு குட்டி மீனை வாயில் கவ்விக்கொண்டு பறந்துபோனது.

காவேரிக்கரையும், அந்தச் சலசலப்பும் விவரிக்கத் தெரியாத நிம்மதியைத் தர, தனம் கண்களை மூடிக் கொண்டாள்.

எத்தனை மாதங்கள்?

இன்னும் ஒரு வாரத்தில் திருவையாறுக்கு வந்து ஆறு மாதம் பூர்த்தியாகிவிடுமா?

காலம்தான் எத்தனை வேகமாக ஓடுகிறது! நினைத்த நினைப்பில்லாமல் அம்மா, அப்பா செத்ததும், பம்பாய்க்குப் போனதும், பாலு பி.காமில் சேர்ந்ததும், புஷ்பாவுக்கு விபத்து நடந்ததும், மாமா கெஞ்சியதும், தான் புத்திகெட்டத்தனமாய் நடந்துகொண்டதும், காந்திமதியுடன் இங்கு வந்ததும்... சினிமாக் காட்சிபோல் ஒவ்வொன்றாகக் கண்முன் விரிந்து மறைய, தனத்தின் கண்களில் நீர் திரண்டது.

இதுவரை ஆயிரம் முறைகள் நினைத்துக் குமுறியது தான் மிச்சமே ஒழிய, இதுநாள்வரை மாமாவின் சபலத்

துக்குத் தான் ஏன் பணிந்தோம் என்பதைத் திட்டவட்டமாக அவளால் புள்ளிகுத்த முடியவில்லைதான்.

மாமா தம்பியைப் படிக்க வைக்கிறேன் என்று ஆசை காட்டியதா? இணங்க மறுத்தால் தம்பியின் படிப்பைப் பாதியில் நிறுத்திவிடுவேன் என்றதா? உங்களை இத்தனை வருடங்களாய் காப்பாற்றவில்லையா என்று சுட்டிக் காட்டிப் பேசியதா?

இல்லை, இதெல்லாம் ஒன்றுமேயில்லாமல், அத்தை சொன்னது போல உடம்பு அலைந்ததுதான் நிஜக் காரணமா?

எது?

ம்ஹூம்— தெரியவில்லை.

எதுவோ, எல்லாமோ... நடக்கக்கூடாதது நடந்துவிட்டது.

இந்த மாமா எப்படி இத்தனை கோழையாக மாறினார்?

இதற்கு 'நானே காரணம்' என்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல், முயலாய் ஒரு மூலையில் ஒடுங்க அவருக்கு எப்படி மனம் வந்தது!

என்னவெல்லாம் ஆசைகாட்டிப் பேசினார்?

'நான் சந்தோஷமாக இல்லை'— என்றார்.

'என் சந்தோஷம் உனக்கு முக்கியம் இல்லையா!'— என்றார்.

'பாலுவை நான் ஐ.ஏ.எஸ். படிக்கவைக்கப்போகிறேன்' என்றார்.

'அத்தை என்ன வேணுமானாலும் சொல்லட்டும், பாலுவை மேலே படிக்கவைக்கப்போவது என் இஷ்டம் தான்' என்றார்.

கடவுளே! இன்னும் என்னென்ன சொன்னார்?

இத்தனை வருஷங்களாக இவரைப் பார்த்து, இவர் குணத்தை — அத்தை நிமிர்ந்து பார்த்தால் பெட்டிப் பாம்பாய் அடங்கிவிடுவார் என்ற சுபாவத்தை — நன்கு அறிந்தும், இவர் வலையில் நான் ஏன் சிக்கினேன்? அந்தப் பசப்பு வார்த்தைகளில் ஏன் மயங்கினேன்?

பயமா? பலவீனமா? ஆசையா?

எது?

ஒரே மாதத்தில் தன் வெறி அத்தனையும் அடங்கின வராய் மாமா எப்படி மாறிப்போனார்?

கையைப் பிடித்துக்கொண்டு 'அத்தையிடம் சொல்லாதே... உண்மை வெளிப்பட்டால் கயிற்றில் தொங்கி விடுவேன்' என்று கெஞ்சினாரே— காலில் விழுந்து கும்பிட்டாரே! என்ன மனுஷன் இவர்! ஆமாம், அத்தையிடம் 'இதற்குக் காரணம் மாமாதான்' என்று நான் போட்டு உடைத்திருந்தால் இவர் என்ன செய்திருப்பார்? நிச்சயம் கயிற்றில் தொங்கியிருப்பாரா?

அத்தனை தைரியம் உண்டா அவருக்கு?

அடுத்த கணம் தன்னை உலுக்கிக்கொண்டாள் தனம்.

ச்சே! எத்தனை மோசமாக என் கற்பனை ஓடுகிறது?

இத்தனை வருடங்களாய் வளர்த்து ஆளாக்கினவரைக் காட்டிக்கொடுத்திருந்தால் அப்புறம் நான் ஒரு மனுஷி தானா?

அத்தைக்கு என் மேல் உண்டான கோபம் தணியுமோ? தீராத அவமானத்தைத் தேடித்தந்துவிட்டேன் என்கிற ஆத்திரம் குறையுமோ? ம்ஹூம்... தணியாது, குறையாது... இனி சாகும்வரைக்கும் என் முகத்தில் விழிப்பதைக்கூட அத்தை விரும்பமாட்டாள்தான்...

பாலுவுக்கு இது கடைசி வருடம், எப்படிப் படிக்கிறானோ? யார் அவனுக்கு வேளாவேளைக்குச் சாப்பாடு போடுவார்களோ? ராத்திரி கண்விழித்துப் படிக்கும்போது டீ போட்டுத் தரவேண்டுமே? அத்தைக்கு இதற்கெல்லாம் வணங்காதே! அப்புறம் யார் செய்வார்கள்?

பாலு என்ன பண்ணுகிறான்? ஏன் அவன் லெட்டர் போட்டு ரொம்ப நாட்களாகிவிட்டன!

ஆரம்பத்தில் திருவையாறுக்கு வந்த புதிதில் வாரம் ஒன்றாக பாலுவிடமிருந்து கடிதங்கள் வந்தன.

வளவளவென்று இல்லாவிட்டாலும் 'நான் சௌக்கியம். நீ நலமாக இருக்கிறாயா? நான் படிக்கிறேன், கவலைப்படாதே...' என்ற ரீதியில் நான்கு வரிகளாவது இருக்கும்.

துவக்கத்திலிருந்து தனம் தம்பிக்கு பதில் எழுதினது கிடையாது. 'அத்தை உன் மேல் ஏக கோபமாய் இருப்பதால் அவர்களுக்குத் தெரியாமல் காலேஜிலிருந்து எழுதுகிறேன்' என்று முதல் கடிதத்திலேயே பாலு குறிப்பிட்டிருந்ததின் உள்ளர்த்தத்தைப் புரிந்துகொண்டு தனம் அவனுக்குப் பதில் எழுத முற்படவில்லை.

இரண்டு மாதங்கள் முடிவதற்குள் வாரம் ஒன்றாக வந்தது பதினைந்து நாட்களுக்கு ஒன்றாகக் குறைந்தது... அப்புறம் மாதம் ஒன்று... இப்போது இரண்டு மாதங்களாய் ஒரு வரிகூட இல்லை...

அத்தைக்கு இவன் எனக்கு எழுதுவது தெரிந்து விட்டதோ? கோபித்துக்கொண்டாளோ?

அடிக்கடி வேண்டாம்; ஒன்று— 'அக்கா, உடம்பைப் பார்த்துக் கொள். நான் சுகமாகப் படிக்கிறேன். கவலைப் படாதே' என்று ஒன்றே ஒன்று!

பாலுவிடம், மாமாதானடா காரணம் என்று சொல்லி இருக்கலாம்; அது நிமிஷ வேலைதான். ஆனால் வேண்டுமென்றேதான் தனம் சொல்லவுமில்லை, இங்கு வந்து லெட்டரில்கூட எழுதவுமில்லை.

அவர்கள் வீட்டில் தங்கிப் படிக்கிற பிள்ளையிடம் உண்மையைச் சொல்லப்போக, அவன் 'ஆஹா— இந்த மாமாவை விட்டேனா பார்—' என்று முறுக்கிக்கொள்ள— கடைசியில் 'நீ இங்கு தங்கவும் வேண்டாம், படிக்கவும் வேண்டாம்' என்று அத்தை அவனையும் மூட்டைகட்டி அனுப்பிவிட்டால்?

இந்த பயத்தின் காரணமாய்த்தானே பாலு எவ்வளவோ கெஞ்சியும் தனம் அன்று வாயைத் திறக்கவில்லை?

ஆக்கப் பொறுத்தவள், ஆறப் பொறுக்காவிட்டால் எப்படி?

படிப்பு முடிந்து ஒரு வேலை தேடிக்கொண்டுவிட்டால், அப்புறம் அவனைக் கிட்டத்தில் உட்கார வைத்துக்கொண்டு 'நடந்தது இதுதான், தம்பி! இதனால்தான் நான் விவரத்தை உன்னிடம் சொல்லி உன்னைக் கஷ்டப்படுத்தவில்லை'— என்று தெளியவைத்துவிட்டால் பாலு புரிந்துகொள்ள மாட்டானா?

ஏன் புரிந்துகொள்ளாமல்?

பாலு மாதிரி ஒரு தம்பி யாருக்குக் கிடைப்பான்? அக்கா, அக்கா என்று உயிரை விடும் பிள்ளை அல்லவா அவன்?

பாலு ஏன் இப்போதெல்லாம் ஒரு வரிகூடக் கடிதம் எழுதவில்லை என்ற சந்தேகம் தோன்றும்போதெல்லாம் தனக்குத்தானே நிறைய சமாதானங்களை வரிசையாக தனம் சொல்லிக்கொள்வது உண்டுதான்.

படிப்பு கெட்டுவிடக்கூடாது என்று அவன் மௌனமாய் இருக்கிறான் என்பதை நினைக்கும்போது மனசில் வலி தானாக அடங்கிவிடும்.

தனம் திருவையாறுக்கு வந்த மறுமாதம் பத்மினியின் கல்யாணம் நடந்தது.

சிவகாமி கொடுத்த பணம் கையிலிருந்தால் செலவழிந்து விடும் என்று உடனடியாக முகூர்த்தத்துக்கு காந்திமதி நாள் குறித்துவிட்டாள்.

கும்பகோணத்தில் இருக்கும் பிள்ளை வீட்டில் நடந்த திருமணத்துக்கு பம்பாயிலிருந்து யாரும் வராதது காந்திமதிக்கு ஏகக் குறை.

"புஷ்பாவைத் தனியாக விட்டுவிட்டு வர முடியாது. புரிந்துகொள். மணமக்களுக்கு எங்கள் ஆசிகள்" என்று சுருக்கமாக லெட்டர் எழுதி ஐநூற்றி ஒரு ரூபாயைத் தன் அன்பளிப்பாக மணியார்டரில் அனுப்பிவிட்டாள் சிவகாமி.

கூட்டமாக எல்லாரும் திருமணத்துக்குக் கிளம்பின போது 'நா வரலை அத்தை' என்று தனம் நின்றுவிட்டதில் காந்திமதிக்குக் குறை ஏதுமில்லை.

'வராவிட்டால் போகட்டுமே, தத்தாரிக்கழுதை'— என்று அலட்சியமாய் இருந்துவிட்டாள்.

தனம் இங்கு வந்ததில் தனக்கு நிறைய அனுகூலம்தான் என்பதை அவள் வந்த பத்து, பதினைந்து நாட்களிலெல்லாம் காந்திமதி உணர்ந்துவிட்டாள்.

காலையில் எழுந்து யாரும் சொல்லாமல் கொள்ளாமல் வாசல் தெளித்து கோலம் போட்டாள். அடுப்புப் பற்ற வைத்துப் பால் காய்ச்சி டிகாஷன் இறக்கினாள். என்ன சமைக்கட்டும் என்று கேட்டுச் சமைத்தாள். அடுக்களையை

சுத்தமாகக் கூட்டி, அலம்பிவிட்டு வைத்துக்கொண்டாள். மற்ற வீட்டு வேலையிலும் முக்கால்வாசியைத் தானே வலிய இழுத்துச் செய்து முடித்தாள்.

தணிகாசலத்திடம் பட்ட அனுபவம் காரணமாக, கூடுமானவரை சமையல்கட்டை விட்டு அதிகம் வெளியில் வராமல் பின்கட்டு, கிணற்றடி என்றே தனம் இருந்ததும் சௌகரியமாய்ப் போயிற்று.

ஊருக்கு வந்து இறங்கின புதிதில் 'யார் இவள்? இத்தனை நாள் எங்கிருந்தாள்?' என்று தெரு ஜனம் புருவத்தைத் தூக்கவே செய்தார்கள்.

"எங்க அண்ணன் மக... பம்பாய்லே இருந்தவளை, என்கூட வந்து கொஞ்ச நாள் இரேன்னு இட்டுகிட்டு வந்திருக்கேன்..."

"அது என்ன கழுத்திலே? மஞ்சக்கயிறா? கல்யாணம் ஆயிடிச்சா?"

"ஓ... ஆறு மாசம் முன்னே ஆயிடிச்சு, மாப்பிள்ளை பட்டாளத்துலே இருக்காரு... லீவு கிடைச்சா வருவாரு..."

"நீ சொல்லவேயில்லியே, காந்தி? அண்ணன் மகளுக்குக் கல்யாணம்னா நீ ஏன் போகலை?"

ஜனங்களும் விடவில்லை. துருவினார்கள்.

"என்னத்தைக்கா சொல்றது? காதல் கல்யாணம், அக்காவுக்கு அத்தனை திருப்தி இல்லே... மாப்பிள்ளை வேற ஜாதிக்காரரு. எனக்கு அக்கா எழுதிக் கேட்டாங்க... 'அவங்களுக்கு ஒருத்தரை ஒருத்தர் பிடிச்சிப்போச்சுன்னா நாம குறுக்க நிக்கறது தப்பு... பெத்தவங்க இல்லாத பொண்ணு, அது மனசு வருத்தப்பட வைக்கவாணாம்... மேல ஆக வேண்டியதைப் பாரு'னு நா எழுதிப் போட்டேன். ஒரு கோவில்லே வெச்சு அக்கா கட்டிக்கொடுத்திட்டா...

போகணும்னு எனக்கு ஆசைதான். எங்கே? இந்த சம்சாரத்தை விட்டுட்டு எங்க போறது? இந்தக் கல்யாணம் ஆன கையோடு எங்க புஷ்பாவுக்கு விபத்து நடந்திடுச்சா... அந்தக் கவலைலே எங்களுக்கு எதுவும் புரியாமப் போச்சு! இப்ப இவளுக்கு அஞ்சாம் மாசம் நடக்குது... நம்பப் பக்கம் பிரசவத்துக்கு சௌகர்யம் ஆச்சேனு, கூட்டிட்டு வந்திட்டேன்..."

ஒரு தினுசாய் காந்திமதி சமாளித்துவிட்டாள்.

மேற்கொண்டு ஒரு மாதம் போவதற்குள் பத்மினி கல்யாண அமர்க்களம் வந்துசேர, தனத்தையும், அவள் கல்யாணத்தையும், அவள் கர்ப்பத்தையும் ஏற்றுக் கொண்டதுமல்லாமல் ஊரார் அவளை வாய்க்கு வாய் பாராட்ட வேறு செய்தார்கள்.

"கெட்டிக்காரி! கண் கண்டா கை செய்யுது... கையிலே நல்ல திறமை..." என்றார்கள்.

"நல்ல பொண்ணு! இருக்கிற எடம் தெரியலை—" என்றார்கள்.

"இந்த அருமையான பொண்ணோட குடித்தனம் பண்ண அந்தப் பிள்ளைக்கு கொடுத்து வைக்கலியே" என்றார்கள்.

"வாயத் திறக்காம என்னமா காரியம் பண்றா? இந்தக் காலத்துப் பொண் மாதிரியா இருக்கறா? ஒண்ணொன்னு வாயும், கையுமா, தலைவிரிச்சிகிட்டு ஆடுதுங்க. இவதான் எத்தனை அடக்கம், சமத்து!"— என்றார்கள்.

மொத்தத்தில் தனத்தால் காந்திமதிக்கு ஆதாயங்கள் தானே தவிரவும் கஷ்டம் எதுவுமில்லை.

முதலில் பத்தாயிரம் சுளையாய் வருமானம்... யார் கொடுப்பார்கள் இந்தக் காலத்தில்?

அப்புறம் வேறு ஆயிரமோ, இரண்டாயிரமோ தருவதாக சிவகாமி சொல்லியிருக்கிறாள்.

சாப்பிடும் சாப்பாட்டுக்கு நான்கு பங்காய் உழைத்துத் தள்ளிவிடுகிறாள்.

அப்புறம் என்ன?

தியாகையர் சமாதிக்குப் போகும் வழியில் காந்திமதி யின் வீடு இருந்தது.

காலையிலும் மாலையிலும், கூட்டமில்லாத சமயமாகப் பார்த்து தனம் ஆற்றங்கரைக்குச் சென்று தண்ணீர் கொண்டு வந்துவிடுவாள்.

அதிகாலையில் போவாள். அப்புறம் லேசாக இருட்டின பிறகு போவாள்.

* * *

க்வ்வு..... அக்..... க்வ்வு.....

பறவை ஒன்று திடுமென்று பெரிசாய் கூவ, தனம் திடுக்கிட்டு எழுந்தாள்.

அடடா, இருட்டிவிட்டதே... இருட்டினது கூடவாத் தெரியாமல் எதையோ நினைத்துக்கொண்டு உட்கார்ந் திருக்கிறேன்!

அவசரமாய் எழுந்தவள், குடத்தில் நீரை நிரப்பிக் கொண்டு மெதுவாக ஒவ்வொரு படியாகக் காலை ஊன்றி மேலே வந்தாள்.

நிறைமாதமாகிவிட்டதால் குனிந்து நிமிரும்போதும், பளுவைத் தூக்கிக்கொண்டு நடக்கும்போதும் மூச்சு வாங்கியது.

தியாகையர் சந்நிதி வெறிச்சோடிக் கிடந்தது.

யாரோ ஒரு பையன் ஒரு பக்கமாய் அமர்ந்து "நிதி சால சுகமா?"என்று பாடிக்கொண்டிருந்தான்.

இரண்டு மாதங்களுக்கு முன் உற்சவத்தின்போது இந்த இடம் அமர்க்களப்பட்டதை நினைத்துப்பார்த்தவண்ணம் தனம் வீட்டை நோக்கி நடந்தாள்.

பத்து நாட்களுக்குள் பிரசவம் ஆகிவிடும் என்று மருத்துவச்சி சொல்லியிருந்தாலும், அத்தனை நாட்கள் தாண்டாது என்றே தனத்துக்குத் தோன்றியது.

பிறக்கும் குழந்தை பெண்ணாக இல்லாமலிருக்க வேண்டும். நான் பட்ட கஷ்டங்களையெல்லாம் அனுபவிக்கத் தேவையில்லாதபடி அது ஆண் குழந்தையாக இருக்கவேண்டும்...

ஆயிரம் இருந்தாலும் ஆண்பிள்ளை உசத்திதானே?

பெண்களுக்கு இருக்கும் வம்புதும்பெல்லாம் ஆண்களுக்கு ஏது?

தப்போ, சரியோ என்ன செய்தாலும் மாட்டிக்கொண்டு முழிக்கிற அவஸ்தை ஆண்களுக்குக் கிடையாதுதானே!

பிறக்கும் குழந்தை சுபாவத்திலும், புத்தியிலும் பாலுவைக் கொண்டு பிறந்துவிட்டால் நன்றாக இருக்கும்.

ஸ்காலர்ஷிப்பில் படித்து, வகுப்பில் முதலாவதாக பாலு இருக்கிற மாதிரி, உடன்பிறந்தவர்களிடம் பாசத்தோடு இருக்கிற மாதிரி, அதுவும் பந்தம், பாசம், ஈவு, இரக்கம் என்ற குணங்களோடு இருந்துவிட்டால், வளர்ப்பதில் பாதி கஷ்டம் குறையும்...

தெருவில் திரும்பி நடந்தபோது குழந்தையிலிருந்து மனசு மீண்டும் தம்பியிடம் தாவியது.

பாலு... நீ எப்படியப்பா இருக்கிறாய்?

பெரிய பரிட்சைக்கு முழுசாய் ஒரு மாதம்தானே இருக்கிறது!

நன்றாய்ப் படிக்கிறாயா?

படி கண்ணா... உன் படிப்பும், அதன் வெற்றியும்தான் நாளைக்கு நமக்கு ஊன்றுகோல்.

முதல் வகுப்பில் பாஸ் பண்ணி நல்ல வேலையில் அமர்ந்துவிட்டால், அப்புறம் ஒருத்தருக்கும் நம்மால் கஷ்டம் இல்லை... யாருக்கும் நாம் சுமையாக இருக்கவேண்டாம்...

எல்லாம் விடிந்துவிடும்...

வீட்டுக்குள் நுழைந்து 'இருட்டிப்போச்சு. இத்தனை நாழி ஆத்தங்கரைலே என்ன வேலை?' என்று அத்தை சிடுசிடுத்ததைக் காதில் வாங்கிக்கொண்டு குடத்தை தனம் இறக்கினபோது, பளிச்பளிச்சென்று இடுப்பில் வலி கோடு போடத் தொடங்கியது.

* * *

பாயில் கிடந்த இரண்டு மாதக் குழந்தை தூக்கத்தில் விசும்பியது. மறுகணமே உதட்டை ஒரு பக்கமாய்க் கோணி அழகாய் புன்னகைத்தது. சற்றைக்கெல்லாம் எங்கோ வேகமாக ஓடுகிற தினுசில் புசுக்புசுக்கென்று மார்பைத் தூக்கி மூச்சிரைத்தது. அப்புறம் மறுபடி சிரித்தது.

தூணில் சாய்ந்தவண்ணம் பிள்ளையைப் பார்த்துக் கொண்டிருந்த தனத்துக்கு வேடிக்கையாய் இருந்தது.

குட்டியூண்டுக்கு இருந்துகொண்டு என்ன அட்டகாஸம் பண்ணுகிறது, இது!

முதல் தடவை இப்படி அழுது, சிரித்து, மாய்மாலம் செய்தபோது, தனம் பிள்ளைக்கு ஏதோ கோளாறு என்று பயந்துபோனாள். வாரிக் கையில் எடுத்துக்கொண்டு 'ஹோ ஹோ' என்று சின்னக் குரலில் சமாதானப்படுத்தினாள்.

அருகில் அமர்ந்திருந்த பக்கத்து வீட்டுப் பாட்டியம்மா சிரித்தாள்.

"புள்ளைக்கு ஒண்ணுமில்லே, பயப்படாதே... சாமி புள்ளைகிட்ட தாமரைப் பூவை காட்டினா இது சிரிக்கும், மறைச்சிக்கிட்டா அழும். தூக்கிட்டு ஓடினா இதுவும் அவரைத் துரத்திகிட்டு ஓடும்... அதான்..."

அதற்குப் பிறகு தனம் பயப்படவில்லை. மாறாக அந்தச் சின்னஞ்சிறிசு, கைதேர்ந்த நடிகன் போல இப்படி கணத்தில் முகபாவங்களை மாற்றிக்கொள்வதை ரசிக்கவே தொடங்கினாள்.

வயிற்றில் பிள்ளை இருக்கும்போது, என் குழந்தை, என் வயிற்றில் உண்டாகியிருக்கும் என் செல்வம், என்ற நினைப்பெல்லாம் கடுகளவுகூடத் தோன்றாத தனத்திற்கு, மடியை விட்டு குழந்தை மண்ணில் குதித்ததும் எங்கிருந்தோ அப்படியொரு பாசம் வந்து ஆட்கொண்டது நிஜம்.

பட்டுப்பட்டாய் கையும், காலுமாய், தலை கொள்ளா முடியுமாய், பவழ வாயுமாய் இருந்த அந்த 'படவாப் பயலை' மார்போடு அணைத்து உச்சிமோந்தபோது நெஞ்சுக்குள் அலாதி இன்பம் கொப்பளித்தது; இதயம், இவன் என் மகன், நான் பெற்ற பிள்ளை என்ற திமிரில் துள்ளியது; இது நாள் வரை அனுபவித்திராத உணர்வு குமிழ் குமிழாய் வெடித்து, உடம்பைச் சூடாக்கியது.

இவன் யார் ஜாடை?

தம்பி பாலு மாதிரியே இருக்கிறானோ?

பொட்டுக் கூடைத் தலைமுடி, குண்டுக் கண்கள், குமிழ் வாய்... இதெல்லாம் தம்பி மாதிரிதானே?

தம்பி அப்பா ஜாடை என்பார்கள்...

அப்படியென்றால் இவன் தாத்தாவைக் கொண்டு பிறந்துவிட்டானா...

இறந்துபோன தன் தகப்பனாரே இப்போது பிள்ளை ரூபத்தில் மடியில் கிடக்கிறாரோ என்று கற்பனை பண்ணிப் பார்த்த நிமிஷத்தில், உடம்பு சிலிர்த்துப்போனது.

இவனுக்கு என்ன பேர் வைக்கலாம்?

தாத்தா மாதிரியே இருப்பதால் அவர் பேரையே வைத்தால் என்ன?

முத்துகிருஷ்ணன்...

ஆமாம்– இதுதான் சரியான பெயர்...

அத்தை கேட்டால் சொல்லிவிட வேண்டும்...

பிள்ளைப் பாசத்தில் மூழ்கியிருந்த தனத்துக்கு, அத்தையாவது, இவனுக்கு என்ன பேர் வைக்கலாம் என்று கேட்பதாவது என்ற சின்னக் கேள்விகூட எழவில்லை.

பத்து நாட்கள் ஆயின... பதினைந்து நாட்கள் ஆயின...

"இனியும் சோம்பிச் சோம்பி உட்காராம சுத்து வேலையைக் கவனி... பட்டணத்துலே எல்லாம் இந்தக் காலத்துலே ஒரு வாரத்திலேந்து வெளி வேலைகளை அவங்களே கவனிக்கறாங்களாம்"– என்று ஒருநாள் காந்திமதி சொல்ல, "அட– ஒரு வாரம்கூட இல்லேம்மா... அமெரிக்காவிலே மூணாம் நாள்லேந்து சமையல், வீட்டு வேலை, கடை கண்ணிக்குப் போறது எல்லாத்தையும் பிள்ளைப் பெத்த பெண்ணுதான் கவனிக்குமாம். ஒரு புஸ்தகத்துலே படிச்சேன்" என்று நான்காவது பெண் வனிதா சொல்ல, குறிப்பைப் புரிந்துகொண்டு அன்றிலிருந்து தன்னால் இயன்ற உதவிகளை தனம் செய்ய ஆரம்பித்தாள்.

தன் பிள்ளைக்கு இவர்கள் பேர் வைக்கப்போவதில்லை, அவன் சம்பந்தப்பட்ட எதிலும் இவர்களுக்கு லயிப்பு இல்லை என்பது தெளிவான அன்று, குளித்து, சாமியை நமஸ்கரித்துவிட்டு, குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு பால் கொடுத்த நாழிகையில், காதருகில் குனிந்து 'உன் பேர் இனி முத்துகிருஷ்ணன். இந்தப் பேரோட நீ அமோகமா இருக்கணும்' என்று முனகினபோது தனத்தின் கண்களில் முத்துமுத்தாக நீர் ஊறிற்று.

மேற்கொண்டு ஒரு மாதம் ஆனபிறகு புதுக்கவலை ஒன்று தனத்தின் மனசை நெருட ஆரம்பித்தது.

தம்பிக்கு ஃபைனல் பரிட்சை முடிந்து ஒரு மாதமாவது ஆயிருக்குமே, ஏன் இன்னும் அவன் இங்கு வந்து என்னைப் பார்க்கவில்லை?

வேலை தேடும் மும்முரத்தில் இருக்கிறானா?

அப்படியேதான் வைத்துக்கொண்டாலும் ஒரு கார்டில் 'நீ எப்படி இருக்கிறாய்? நான் பரிட்சை நன்றாக எழுதியிருக்கிறேன். வேலை தேடிக்கொண்டிருக்கிறேன், கிடைத்ததும் வருகிறேன்' என்று எழுதக்கூடாதா?

இதுநாள்வரை, படிப்புக் கெடாமல் இருக்க தம்பி ஒதுங்கியிருக்கிறான், அத்தை மாமாவைப் பகைத்துக் கொண்டால் பட்டம் பெறுவது தடைப்பட்டுவிடும் என்ற பயத்தில் ஏனென்று கேட்காமல் இருக்கிறான்– என்ற சமாதானத்தை ஏற்றுக்கொண்ட தனத்தால், இப்போது அப்படி இருக்க முடியவில்லை.

தம்பியின் இந்த மௌனத்திற்குக் காரணம் என்ன?

பரிட்சை நன்றாக எழுதவில்லையா? வேலை வாங்கித் தருகிறேன் என்று வாக்குத் தந்த புரொஃபஸர் ஏமாற்றி விட்டாரா?

என்ன காரணம்?

தம்பி ஏன் கிணற்றில் கல் போட்ட மாதிரி இருக்கிறான்?

ஒருவேளை, தம்பிக்கு உடம்பு சரியில்லாமல் போயிருக்குமோ? அதுதான் கம்மென்றிருக்கிறானோ? அக்காவிடம் விவரம் சொல்லி அவளை வருத்தத்தில் ஆழ்த்தக் கூடாது என்று எதுவும் எழுதாமல் இருக்கிறானோ?

இருக்கும்... இருக்கும்...

எப்போர்ப்பட்ட தம்பி அவன்!

என் முகம் சிணுங்கினால் காணச் சகியாத அன்பு மனசல்லவா அவனுக்கு...

ஊருக்குப் புறப்படும்போதுகூட 'தைரியமா இரு... நா இருக்கேன்க்கா உனக்கு; நீ தைரியமா இரு. என் எக்ஸாம் முடிஞ்சதும் நா ஓடி வந்திடறேன்' என்று ரயிலடியில் சொன்ன பிள்ளைதானே அவன்.

வேண்டாத யோசனைகள் மனசைக் குழப்பத் தொடங்கிய பிறகு தாளமுடியாமல் ஒரு இன்லாண்ட் லெட்டரை வாங்கி வந்து, "எப்படி இருக்கிறாய் தம்பி? என் கண்ணிலேயே சதா நின்றுகொண்டிருக்கிறாய். பரிட்சை நன்றாகச் செய்தாயா? வர முடியாவிட்டாலும் பதிலாவது போடு" என்று பத்து வரி எழுதிப் போட்டாள்.

அது போட்டு பதினைந்து நாட்களாகிவிட்டன. இன்னும், பதில் எதுவும் இல்லை.

அத்தையிடம் இதுகுறித்து ஏதாவது கேட்கலாமா என்று யோசித்தாள். கடைசியில் அந்த எண்ணத்தைக் கைவிட்டாள்.

"ஏன், இங்க உனக்கு என்ன குறை?" என்பாள்.

"நாங்கள்ளாம் மனுஷங்களா தோணலியா?" என்பாள்.

"உன் தம்பியை என் அக்கா கடிச்சித் தின்னுட மாட்டா, கவலைப்படாதே" என்பாள்.

எதற்கு வீண் வம்பு?

* * *

அன்று வெள்ளிக்கிழமை.

மாலை மணி ஏழிருக்கும்.

சமையல்கட்டில் அரிசி களைந்து உலைக்குப் போட்டுக் கொண்டிருந்த தனம் பரிச்சயமான குரல் கேட்டுத் தலை நிமிர்ந்தாள்.

'வா... வா...' என்று அத்தை யாரை அத்தனை உற்சாகமாக வரவேற்கிறாள்?

அப்படிச் சிரிக்கும் குரல் யாருடையது?

அரிசியைப் போட்டுவிட்டு தனம் முற்றத்தில் இறங்கி நாலெட்டில் ஓடினாள்.

கூடத்தில் பாலு–

அவனைச் சுற்றி அத்தை, மாமா, மற்ற குழந்தைகள்.

"நல்லா இருக்கியாப்பா?"

"ஏண்டா, பாலு, வரேன்னு ஒரு கடிதாசி போடக் கூடாதா?"

"எக்ஸாம் முடிஞ்சிபோச்சாப்பா?"

"இப்ப ஏது வண்டி?"

தலைக்குத் தலை கேள்வி கேட்ட தற்கெல்லாம் சிரித்துக் கொண்டே பதில் சொல்லிவிட்டு அக்காவின் திசையில் பார்வையைச் செலுத்த ஐந்து நிமிடங்கள் ஆயின.

தனத்தைப் பார்த்தவனின் பார்வை சட்டென்று இடுங்கிப்போனது.

முகத்தில் சங்கடம்.

"நல்லா இருக்கியா, தம்பி?"

"இருக்கிறேன்" என்று தலையாட்டினான்.

மேற்கொண்டு என்ன பேசுவது என்று தீர்மானிப் பதற்குள் "போய் தம்பிக்குக் காபி கலந்து எடுத்தா" என்று அத்தை உத்தரவிட, தனம் உள்ளே வந்தாள்.

காபி கலந்து கொடுத்தபோதும், சமையலைக் கவனித்தபோதும், மற்றவர்களுக்கு உணவு பரிமாறின போதும் தம்பி உள்ளே வருவான், 'என் மருமகள் எங்கேக்கா?' என்று கேட்பான் என்று எதிர்பார்த்து தனம் ஏமாந்துபோனாள்.

சாப்பிட்டுவிட்டுக் கை அலம்பும்போது அவன் கிட்டத்தில் இவள் போய் நின்றுகொண்டாள்.

"ஊர்ல எல்லாரும் சுகமா, தம்பி?"

"ம்...ம்..."

"பரிட்சை நல்லா எழுதியிருக்கியாடா?"

"ம்...ம்..."

"நீ... வந்து... உன் மருமகனைப் பார்க்கலியே, தம்பி..."

சடக்கென்று பாலு நிமிர்ந்தான்.

"பார்த்தாப் போவுது... என்ன அவசரம்?" என்றவன் தொடர்ந்து, "அத்தைகிட்ட சொல்லிட்டேன். நாம காலைல ஊருக்குக் கிளம்பறோம்... நீ பெட்டி ரெடி பண்ணிட்டு தயாராயிரு... விடிகாலை பஸ்ஸைப் பிடிக்கணும்..." என்று சொல்லிவிட்டு வாசலுக்குப் போய்விட்டான்.

தம்பி சொன்ன சேதி தந்த சந்தோஷத்தில்– தான் ஊருக்குக் கிளம்பப்போகிறோம் என்ற மகிழ்ச்சியில்– பாலு நின்று இரண்டு வார்த்தை அன்பாய்ப் பேசாததோ, குழந்தையை வந்து பார்க்காததோ, தனத்துக்குப் பெரிசாகத் தோன்றவில்லை.

ஊருக்கா!

அப்படியென்றால் அத்தையின் கோபம் சரியாகி விட்டதா?

இல்லை, தம்பி வேறு எங்காவது வேலை தேடிக் கொண்டு தனிக்குடித்தனம் அமைக்க அழைக்கிறானா?

காந்திமதி அத்தைக்கு எதிரில் அதிகம் பேச விரும்பாமல் இப்படி சுத்தரித்த மாதிரி நடந்துகொள்கிறானா?

இருக்கும்... இருக்கும்...

தனம் பரபரவென்று அடுக்களைப் பாத்திரங்களை ஒழித்துத் தேய்த்தாள். இரண்டு வாளி ஜலத்தைக் கொட்டி அறையை அலம்பிவிட்ட நேரத்தில் காந்திமதி நிலைப்படியில் நின்றுகொண்டாள்.

"தம்பி விவரம் சொன்னான் இல்லே...? காலைல நாலு மணி பஸ்ஸிலே கிளம்பணுமாம்... சாமான்களைக் கட்டிக் கிட்டு தயாரா இரு... என்னமோ இங்க வந்ததுக்கு உன்னை நல்லபடியா அனுப்புறமேனு எனக்கு சந்தோஷமா இருக்கு... போற எடத்துலே புத்தியா நடந்துக்க... பாலுவுக்கோ, மத்தவங்களுக்கோ துன்பம் தராப்பல நடந்துக்காதே... அதான் நா உனக்குச் சொல்றது... என்ன?"

தனம் பெரிசாய் தலையாட்டினாள்.

இருந்த நான்கு புடவைகளையும் குழந்தைக்குத் தைத் திருந்த இரண்டு சட்டைகளையும் பெட்டியில் அடுக்கினாள்.

காய்ச்சின தண்ணீரை ஒரு புட்டியில் நிரப்பிக் கொண்டாள்.

வழியில் குழந்தையைக் கிடத்த உதவும் என்று பழைய பெட்ஷீட் ஒன்றை மடித்து வைத்துக்கொண்டாள்.

கூடத்தில் சின்னக் குரல்களில் அத்தை, மாமா, பாலு பேசுவது புரியாது குழந்தைக்குப் பக்கத்தில் படுத்தாள்...

அப்படியென்ன அவர்களுடன் ரகசியமாய் பேசுகிறான்? பம்பாயில் ஏதாவது பிரச்சினையா? இல்லை, தன் வேலை சம்பளம்பற்றிச் சொல்கிறானா?

'ஏதோ ஒன்று... எனக்குத் தெரிய வேண்டிய விவரம் என்றால் தம்பி கண்டிப்பாய் என்னிடம் சொல்லுவான்' என்று நினைத்தவள், ஊருக்குப் போனதும் முடியுமானால் பாலுவை முத்துகிருஷ்ணனுக்கு நல்லதாய் இரண்டு சட்டைகள் எடுத்துத்தரச் சொல்லவேண்டும், குடிக்க தண்ணீர் கொடுப்பதற்கு சின்னதாய் ஃபீடிங் பாட்டில் ஒன்றும், உடம்புக்குப் போட பவுடர் டப்பா ஒன்றும் வாங்கித் தரச் சொல்லவேண்டும் என்று எண்ணிக்கொண்டே உறங்கிப்போனாள்.

* * *

இரண்டு பஸ்களை மாற்றி திருவையாறிலிருந்து அந்த ஊருக்கு அவர்கள் வந்து சேர்ந்தபோது பிற்பகல் மணி ஒன்று.

பஸ்ஸில் பாலு அதிகம் பேச விரும்பவில்லை.

தனம் ஏதாவது ஆரம்பித்தால்கூட, "போய் பேசிக் கலாங்க்கா... ரெண்டு நாளா விடாம பிரயாணம் செய்றதுலே அசதியா இருக்கு" என்று முக்கால்வாசி நேரம் உட்கார்ந்த படியே தூங்கினான்.

பஸ் நின்ற இடங்களில் தனத்துக்கு டிபன், காபி வாங்கிக் கொடுத்து தானும் சாப்பிட்டான்.

"உன் மருமகனைப் பார்க்கவே இல்லியே, தம்பி... இவன் அப்படியே நம்ப அப்பாதான். பேர்கூட அவர் பேரைத்தான் நா வெச்சிருக்கேன்" என்றபோது மட்டும் கண்கள் லேசாய் கலங்க, பாலு குனிந்து குழந்தையைப் பார்த்தான். அப்புறம் ஜன்னல் வெளியில் பராக்கு பார்க்கத் தொடங்கினான்.

பாண்டிச்சேரியில் இறங்கினதும் ஒரு ஹோட்டலுக்குப் போனார்கள்.

சாப்பிட்டார்கள்.

ஹோட்டல் வாசலில் நின்றிருந்த ரிக்ஷாக்களில் ஒன்றை பாலு அழைத்து, குறிப்பிட்ட விலாசத்தைச் சொல்லி அங்கு வரமுடியுமா என்று கேட்டான்.

ரிக்ஷாக்காரன் சம்மதிக்க, குழந்தையுடன் தனத்தை ஏற்றிவிட்டு தானும் பக்கத்தில் அமர்ந்தான்.

மூன்று மணிகூட ஆகவில்லை என்றாலும் வானம் மப்பாக இருந்ததால் வெயில் உடம்பில் உறைக்கவே இல்லை.

கடற்கரைச் சாலையில், ஆல் இந்தியா ரேடியோவுக்கு முன்னால் காந்தி சிலையிடம் ரிக்ஷா போனபோது பாலு அதை நிறுத்தச் சொன்னான்.

"நாலு மணிக்குத்தான் திறப்பாங்க; இன்னும் ஒருமணி நேரம் டைம் இருக்கு" என்று தனக்குத்தானே முனகினவன் ரிக்ஷாவை விட்டு இறங்கி, "இறங்குக்கா— சித்தநாழி இப்படி உட்கார்ந்து பேசிட்டுப் போகலாம்" என்று தனத்தை இறக்கினான். "என்னால் காக்க முடியாது; எனக்குக் கூலி கொடுத்து அனுப்பிடு" என்று ரிக்ஷாக்காரன் தகராறு பண்ணவே, அவனுக்குக் கூலி கொடுத்து அனுப்பினான்.

காந்தித் தாத்தா கம்பீரமாக நின்றுகொண்டிருந்தார்.

ஓஷ் ஓஷ் என்று சமுத்திரம் கிட்டத்தில் இரைந்தது.

காற்று பிய்த்துக்கொண்டு போயிற்று.

மத்தியான வேளைதான் என்றாலும் இந்தக் காற்று குழந்தைக்கு ஒத்துக்கொள்ளுமா?

கவலை எழ, தனம் துணியை இறுகச் சுற்றி, குழந்தைக்கு கதகதப்பை உண்டாக்கினாள்.

"இப்படி உட்காரலாங்க்கா..."

அவளை எதிர்பார்க்காமல் பாலு அமர்ந்தான்.

தனம் கொஞ்சம் தயங்கினாள். பின் மெதுவாகக் கேட்டாள்.

"நாம பம்பாய்க்குப் போகலியா, தம்பி? இங்க ஏதாவது வேலை இருக்கா?"

"ம்... சொல்றேன்... நீ உட்காரு..."

தனம் உட்கார்ந்தாள்.

குழந்தை தூக்கத்தில் சிணுங்கினான்.

அக்காவைப் பார்க்காமல் பாலு பேசினான்.

"நாம்ப என்னவோ நினைச்சோம், ஆனா என்னென்னவோ நடந்துபோச்சு... ஹூம்— போனதைப்பத்தி இப்ப வீணா பேசறதுலே லாபம் ஒண்ணுமில்லே... சுத்தி வளைச்சு நா பேச விரும்பலைக்கா, விஷயத்துக்கு நேரா வர்றேன்... உன் செய்கையால அத்தையும், மாமாவும் இடிஞ்சி போயிட்டாங்கன்றதும், பெத்தவங்க கணக்கா நம்மகிட்ட பழகினவங்களுக்கு நம்மால ரொம்ப தலைகுனிவுங்கறதும் உனக்குத் தெரிஞ்சதுதான்... பழசையெல்லாம் மனசிலே வெச்சிக்காம, திரும்ப அவங்க உன்னைக் கூட்டிச்கிடறது ரொம்பப் பெரிய

விஷயம்... அதுக்கு ஒரு தனி மனசு வேணும்! என்னக்கா, நா சொல்றது சரிதானே?"

தனம் 'ஆம்' என்று தலையாட்டினாள்.

"இனிமேலாவது கூடுமானவரை நம்மால அவங்களுக்குத் தொல்லை வராம நாம ஜாக்கிரதையா இருக்கறதுதான் நியாயம்... தர்மம்... அதனாலே..."

தனம் விழிகளை விரித்து தம்பியை ஏறிட்டாள்.

"அதனாலக்கா... வந்து..."

எதைச் சொல்ல இவன் இப்படித் தயங்குகிறான்?

"அதனால என்ன, தம்பி?"

"வந்து... நீ தனியா வந்தா உன்னைத் திரும்ப வீட்டோட வெச்சிக்க அத்தை ரெடியா இருக்காங்க... குழந்தையோட வந்தா இது ஏது, என்னான்னு பேச்சு வரும்; சமாளிக்கறது கஷ்டம்... நாலையும் யோசிச்சுப் பார்த்தப்போ குழந்தைய..."

"கு...ழந்தைய...?"

"இங்க பாண்டிச்சேரிலே ஒரு நல்ல ஆசிரமம் இருக்குக்கா. நா முந்தா நாள் இங்கே வந்து விவரமெல்லாம் விசாரிச்சுட்டேன், குழந்தையை அருமையா வளர்க்கறாங்க... அதிர்ஷ்டமிருந்தா வெளிநாட்டுக்காரங்களுக்குக்கூட தத்து கொடுக்கறாங்க... அப்புறம் எதுக்கும் நாம கவலைப்பட வேண்டியதில்லை..."

"டேய்..." தனம் அதிர்ந்து கத்தினாள். "எ...என்னடா சொல்றே?"

"ஷ்... ஷ்... மெதுவா பேசுக்கா... இப்ப நா என்ன சொல்லிட்டேன்? நீ இப்படிப் பாயறதுக்கு? நாளைக்கு நாம அத்தனைபேரும் கௌரவமா வாழணும்னா குழந்தையை ஆசிரமத்திலே விடறதுலே தப்பு எதுவும் இருக்கறதா எனக்குத் தோணலை..."

கையில் நெளிந்த முத்துகிருஷ்ணனை தனம் இறுக அணைத்துக்கொண்டாள்.

மூளை இருந்துதான் பாலு இப்படிப் பேசுகிறானா? இல்லை பிரமை கிரமை பிடித்துவிட்டதா?

குனிந்து குழந்தையைப் பார்த்தவளுக்குக் கண்களில் ஜலம் பெருகியது.

"என்னடா தம்பி... இப்படி மொளுக்குனு குண்டைத் தூக்கிப்போடறே? நீ வருவே, என்னையும், புள்ளையையும் கரையேத்துவேன்னு இத்தனை மாசமா நா கண்டுக்கிட்டு இருக்கிற கனவை உடைச்சு எறியற மாதிரி என்ன பேச்சு இது? விளையாடாதே பாலு... எனக்கு நெஞ்சு பதறுதுடா..."

விசும்பல்களுடன் தனம் பேசியபோது தலை நிமிராமலேயே பாலு பதில் சொன்னான்.

"நா விளையாடலைக்கா... நல்லா யோசனை பண்ணிட்டு உன் நல்லதுக்காகவும், மத்தவங்க நிம்மதிக்காகவும்தான் இதைச் சொல்றேன்."

பிள்ளையை அணைத்திருந்த இரண்டு கரங்களையும் தனம் கூப்பிக்கொண்டாள்.

"வேணாம் பாலு, திரும்ப இன்னொரு தரம் இப்படிப் பேசாதே... உன்னைக் கெஞ்சிக் கேக்கறேன்... என்னால தாங்க முடியாது, தம்பி... நீயாத்தான் இப்படிப் பேசறியா? இல்லே உன்னை யாராவது சொல்லச் சொல்லி வற்புறுத்தறாங்களா? ஏன் தம்பி... பி.காம். படிப்பை முடிச்சிட்ட உனக்கு இனி எங்கயாவது வேலை கிடைக்காதா? உன் வாத்தியார் உடனே பாங்க் வேலை பண்ணித் தர்றதா சொல்லியிருந்தாரே, அது என்னாச்சு? சரி, அப்படியே உனக்கு வேலை கிடைக்க நாளானாக்கூட கவலைப் படாதேடா, நா எங்கயாவது சமையல் வேலை பண்ணி,

பத்துத் தேச்சு, உனக்கும், என் புள்ளைக்கும் கஞ்சி ஊத்திடுவேன், தம்பி... சத்தியமா நா காப்பாத்திடுவேன்! அனாவசியமா பயந்துக்கிட்டு என் பையனை என்கிட்டேயிருந்து பிரிச்சிடாதப்பா... உன் கால்லே விழுந்து கேக்கறேன், பாலு..."

அழுகை தாங்கமாட்டாமல் பீறிட, தனம் குனிந்து கொண்டாள்.

"திரும்பத்திரும்ப நீ இப்படி பிடிவாதம் பண்றது நல்லா இல்லைக்கா... நா பாங்க் வேலை பார்க்கப்போறதில்லே..."

"அப்ப மேல படிக்கப்போறியாடா..."

"ம்ஹூம் இல்ல..."

"அப்புறம்?"

பாலு கடலை சில நிமிடங்கள் வெறித்தான். பின் நிதானமாகப் பேசினான்.

"மாமா என்னை அவர் கம்பெனிலே பார்ட்னர் ஆக்கிட்டார்க்கா... போன மாசத்துலேந்து நா ஃபாக்டரிக்குப் போயிட்டு வரேன்... மாசம் ஆயிரம் ரூபா செலவு போக சம்பளம்... பார்ட்னர்ன்றதால வருஷ லாபத்திலே வேற பாதி உண்டு..."

என்னது?

மாமாவின் தொழிலில் இவன் பங்காளியா! ஏன்? சோழியன் குடுமி சும்மா ஆடாதே... இதற்கு பாலு கொடுக்கும் விலை என்ன?

பாலு இருப்புக்கொள்ளாமல் தவித்தான். நகங்களை ஆராய்ந்தான்; அப்புறம் திடும்மென்று சொன்னான்.

"நா புஷ்பாவைக் கட்டிக்கப்போறேங்க்கா... அந்தப் பொண்ணுக்கும் நம்மை விட்டா யாரு? கால் ஊனமான

பொண்ணை யார் நல்லா வெச்சிப்பாங்கனு அத்தை சதா கலங்கறது எனக்கு வேதனையா இருக்கு... அதான் இந்த முடிவு! ஏழு வருஷமா நம்ம ரெண்டு பேரையும் காப்பாத்தி ஆளாக்கினதுக்கு இதுகூட நா செய்யாட்டி எப்படி? ம்?"

"....."

"இந்த நியூஸ் உனக்கு அதிர்ச்சியா இருக்கும்னு நா எதிர் பார்த்ததுதான். ஊனமான பெண்ணை தம்பி கட்டிக் கிடணுமானு நீ அவஸ்தைப்படுவேனு எனக்குத் தெரியும்... ஆனாக்கா, ஒண்ணை நினைப்புல வெச்சிக்க... மாமா ஃபாக்டரிக்கு இப்ப மதிப்பு மூணு லட்சம்... தெரியுமா? இன்னும் நல்லா வளரக்கூடிய தொழில் இது. நாளைக்கு பணங்காசு கவலையில்லாம நாம இருக்கலாம்... சந்தேக மில்ல... என்னக்கா, விளங்குதா?"

நன்றாய் விளங்கியது.

எட்டு மாதத்தில் தம்பியை வெகு கவனத்துடன் அத்தையும், மாமாவும் மூளைச் சலவை பண்ணியிருக் கிறார்கள் என்பது விளங்கியது. இப்போது பாலுவுக்குப் பணம்தான் வாழ்க்கையில் முக்கியம்; பந்தம், பாசம் என்ப தெல்லாம் அப்புறம்தான் என்பது விளங்கியது. முக்கியமாய், சுயநலக்காரர்கள் கூட்டத்தில் தம்பியும் ஒருவனாகிவிட்டான் என்பதும் விளங்கியது.

பேசினது போதும் என்கிற மாதிரி பாலு எழுந்து நின்றான். மணியைப் பார்த்தான்.

"மூணரை ஆயிடிச்சு, ஆசிரமம் திறந்திடுவாங்க... வர்றியாக்கா, போய் வேலையைக் கவனிக்கலாம்..."

தனம் தம்பியை முழுசாய்ப் பார்த்தாள்.

அக்கா அக்கா என்று உயிரை விட்ட தம்பி இல்லை இவன் இன்று—

'எனக்கு பாங்க் வேலை கிடைக்கட்டும்; அப்புறம் நாம யாருக்கும் அடிமைப்பட்டு வாழவேண்டாம்' என்று கூறின தம்பி இல்லை இவன் இன்று–

'எல்லாத்தையும் பொறுத்துக்க, நா பெரியவனாகி உன்னை சந்தோஷமா வெச்சிருக்கேன்க்கா' என்று சொன்ன தம்பி இல்லை இவன் இன்று–

'ப்ளட் ஈஸ் திக்கர் தேன் வாட்டர்'னு கேட்டப்போ உன் ஞாபகம்தான் வந்ததுக்கா... எனக்காக நீ எத்தனை சிரமப்படறே'– என்று உருகிய தம்பி இல்லை இவன் இன்று.

இவன் வேறு.

பணம் காசைப் பெரிசாய் மதிப்பவன்.

ரத்த பாசத்தைத் துச்சமாக நினைப்பவன்.

தான் தன் சுகத்தை முக்கியமாய் எண்ணுபவன்.

தனம் தம்பியைப் பார்த்து சின்னதாய் புன்னகைத்தாள்.

"அந்த ஆசிரமம் எங்க இருக்குப்பா?"

"கிட்டத்தான்..."

"அப்ப ஒண்ணு செய்யேன், எனக்குக் கொஞ்சம் கிறுகிறுப்பா இருக்கு. நீயே போய் ஆசிரமம் திறந்தாச்சான்னு பார்த்திட்டு ஒரு ரிக்ஷா கூட்டிட்டு வாயேன்..."

பாலுவின் முகத்தில் சந்தோஷம் வெளிப்படையாய்த் தெரிந்தது. இத்தனை சுலபமாய் விஷயம் முடியும் என்று எதிர்பார்க்காத நிம்மதி தெரிந்தது.

"அஞ்சு நிமிஷத்துலே வந்துடறேன். நீ இப்படியே உட்கார்ந்திரு" என்றவன் காலை அகலஅகலமாய் வைத்து சாலையைக் கடந்து எதிர்ப்பக்கம் போனான்.

பாலு கண்ணிலிருந்து மறைந்ததும் தனம் குழந்தையுடன் எழுந்தாள்.

காந்தித் தாத்தாவுக்கு அந்தப் பக்கமாய் இருந்த படிகளில் மெதுவாய் இறங்கினாள்.

ஹோஷ் ஹோஷ் என்று சமுத்திரம் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது.

கரடுமுரடாய் இருந்த பாறைகளில் காலை வைத்தவள் சுற்றிலும் யாருமில்லை என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டாள்.

அடுத்த பாறையில் காலை வைத்த தனம், திரும்ப மேலே போய் பாலுவிடம் 'மாமாதானடா இத்தனைக்கும் காரணம்' என்று சொல்லிவிடலாமா என்று ஒருகணம் யோசித்தாள். பின், வேண்டாம் என்று தீர்மானித்தாள். பாலு உண்மையை நம்பும் நிலையிலா இருக்கிறான்?

ம்ஹூம்; இல்லை.

பச்சைப் பிள்ளையை ஆசிரமத்தில் விட்டுவிட்டுக் கிளம்பு என்று சொல்லும் கல்நெஞ்சக்காரன். 'எவனிடமோ போய்விட்டு மாமா பேரில் பழி போடுகிறாயா?' என்று சண்டைக்குக்கூட வரக்கூடும்.

இப்போது அவனுக்கு மாமா, அவருடைய பெண், அவர்கள்மூலம் வரும் பணம் முக்கியம்.

என் தம்பி இத்தனை கேவலமானவனா?

இத்தனை கீழ்த்தர புத்தி படைத்தவனா?

இவனிடம் என்னென்ன எதிர்பார்த்தேன்! என்னென்ன கோட்டைகள் கட்டினேன்!

திடும்மென்று தனத்துக்குச் சிரிக்கத் தோன்றியது.

'பந்தமாவது, பாசமாவது' என்று உரக்கக் கூவிச் சிரிக்கத் தோன்றியது.

குனிந்து பிள்ளையைப் பார்த்தாள்.

மொட்டு மாதிரியான கண்களைத் திறந்து முத்து கிருஷ்ணன் 'ங்க்கா'... என்றான்.

குழந்தையை இறுக அணைத்து வெறிபிடித்த தினுசில் முத்தம் கொடுத்தபோது கண்களில் நீர் பிரவாகமாகப் பெருகியது.

அந்தப் பிடியைத் தளர்த்தாமலேயே அடிமேல் அடி வைத்து, பாறைகளில் நடந்து தண்ணீரில் இறங்கினாள்.

கடல்நீர் முழங்காலைவிட்டு இடுப்பைத் தொட்டது.

பிள்ளையை மார்பு உயரத்துக்குத் தூக்கிக்கொண்டாள்.

காலடியில் மணல் சரிந்தது.

'ரத்தத்தைவிட எனக்கு எத்தனை பலம், சக்தி உண்டு, காட்டுகிறேன் வா' என்கிற தினுசில் கடல் அவளை வேகமாகத் தன்னிடம் இழுத்துக்கொண்டபோது, நீரின் ஜில்லிப்பைத் தாங்காமல் முத்துகிருஷ்ணன் வீரிட்டு அழத் தொடங்கினான்.

❖